





# சமாதானத்தை உருவாக்கலும் சமாதானத்தை பேணலும்

## புத்தளம் மாவட்டத்தில் சமூக முரண்பாடு மற்றும் முரண்பாட்டு முகாமைத்துவம் மீதான கற்கை

பிரஷான் தளையசிங்கம்
காயத்திரி லொக்குகே
மொஹமட் முனாஸ்

ஆகஸ்ட் 2009
செய்முறைக் கட்டுரைத் தொடர் இலக்கம் 17-2009

cepa
centre for poverty analysis

# சமாதானத்தை உருவாக்கலும் சமாதானத்தை பேணலும்

புத்தளம் மாவட்டத்தில் சமூக முரண்பாடு மற்றும் முரண்பாட்டு முகாமைத்துவம் மீதான கற்கை

பிரஷான் தளையசிங்கம்
காயத்திரி லொக்குகே
மொஹமட் முனாஸ்

செய்முறைக் கட்டுரைத் தொடர் இலக்கம் *17-2009*
ஆகஸ்ட் *2009*

© வறுமை ஆராய்ச்சி நிலையம் 2009

முதலாவது பதிப்பு - 2009

**ISBN:978-955-1040-54-3**

**இலங்கை தேசிய நூலகம் - வெளியீட்டில் உள்ள பட்டியல்**

சமாதானத்தை உருவாக்கலும்-சமாதானத்தை பேணுதலும்: புத்தளத்தில் சமூக மட்ட முரண்பாட்டு முகாமைத்துவம் மீதான கற்கை.

பிரஷான் தலையசிங்கம், காயத்திரி லொக்குகே, மொஹமட் முனாஸ் - கொழும்பு வறுமை ஆராய்ச்சி நிலையம் 2009.

76p. 29cm (செய்முறைக் கட்டுரைத் தொடர் இலக்கம்: 17-2009)

ISBN:978-955-1040-54-3 விலை ரூபா:

i) 303.69
ii) தலைப்பு
iii) தளையசிங்கம், பிரஷான்
iv) லொக்குகே, காயத்திரி
v) முனாஸ், மொஹமட்

1. முரண்பாட்டு முகாமைத்துவம்

இப்பிரசுரத்துக்கான பதிப்புரிமை வறுமை ஆராய்ச்சி நிலையத்துக்குரியது இதன்பகுதிகள் பிரதியெடுக்கப்படும் பட்சத்தில் பதிப்பாளரின் அல்லது பதிப்பாசிரியரின் அனுமதி கோரப்பட வேண்டும்.

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் தற்போதைய பிரசுரத் தொடர்களாவன: கற்கைகள் திருத்திய பதிப்புக்கள், செய்முறைக் கற்கைத் தொடர்கள், மேலோட்ட ஆய்வுக் கட்டுரைகள். இப்பதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கங்கள், முடிவுரைகள் என்பன பதிப்பாசிரியரின் கருத்துக்களாகும். இவை எப்போதும் வறுமை ஆராய்ச்சி நிலையத்தினதோ அல்லது அனுசரணையாளரினதோ கொள்கைகளல்ல.

இப்பதிப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள படங்கள் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் பணியாளர்களுக்குரியது.

இப்பிரசுரம் தொடர்பான விசாரணைகள் அனைத்தும் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வறுமை ஆராய்ச்சி நிலையம்
29, கிரகரி வீதி
கொழும்பு 07
இலங்கை

தொ. பே. : +94 11 2676955-8, 2667967-8
தொ. நகல் : +94 11 2679959
மின்னஞ்சல் : info@cepa.lk
இணையத்தளம் : www.cepa.lk

அச்சிட்டவர்கள்:
கருணாரட்ண & சன்ஸ் லிமிட்டெட்
67, யுடிஎ கைத்தொழில் பேட்டை,
கட்டுவான வீதி, ஹோமாகம,
இலங்கை.

**பிரஷான் தளையசிங்கம்** வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் வறுமை மற்றும் முரண்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் அணித்தலைவர். இவர் இங்கிலாந்தின் சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் சர்வதேச விவகாரங்கள் துறையில் முதுகலைமானி பட்டம் பெற்றுள்ளார்.

**மொஹமட் முனாஸ்** வறுமை மற்றும் முரண்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் துறைசார் நிபுணர். பேராதனை பல்கலைகழகத்தில் விவசாய பொருளியலில் விஞ்ஞானமானி பட்டம் பெற்ற இவர், தற்போது கொழும்பு பல்கலைகழக கலைப்பீடத்தில் பொருளியல் முதுமானி படிப்பை தொடர்கிறார்.

**காயத்திரி லொக்குகே** வறுமை மற்றும் முரண்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் துறைசார் நிபுணர். கொழும்பு பல்கலைகழக கலைப்பீடத்தின் அபிவிருத்தி கற்கைகள் துறையில் முதுகலைமானி படிப்பை தொடரும் இவர் களனி பல்கலைகழகத்தில் மொழியியல் துறையில் கலைமானி பட்டத்தை பெற்றுள்ளார்.

வறுமை ஆராய்ச்சி நிலையம் ஒரு சுயாதீனமான தொழில்சார் சேவை வழங்கும் நிறுவனமாகப் பணியாற்றி வருகின்றது. இலங்கையில் வறுமை தொடர்பான பிரச்சினைகள் பற்றிக் கூடுதலான விளக்கத்தினை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்தினை மையமாகக் கொண்டு செயற்படும் நிறுவனமாக வறுமை ஆராய்ச்சி நிலையம் விளங்குகின்றது. பிரயோக ஆராய்ச்சி, ஆலோசனை வழங்குதல், பயிற்சி மற்றும் உரையாடல் மற்றும் கருத்துப் பரிமாறல் ஆகிய நான்கு பகுதிகள் மீது கவனம் செலுத்தும் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் செயற்பாட்டுச் சேவைகள், வறுமைக் குறைப்பினை இலக்காக வைத்துப் பணியாற்றி வரும் ஏனைய நிறுவனங்களுக்கும், தொழில்சார் வல்லுநர்களுக்கும் வழங்கப்படும்.

# நன்றியுரை

இந்த ஆய்வு எண்ணக்கருவை முன்மொழிந்து, கள மட்டத்திலான ஒருங்கிணைப்புகளை மேற்கொண்டு, எமக்கு ஆரம்ப கட்டத்தில் தொடர்புகளை வழங்கி, தற்போது இந்த கற்கைக்கான மேலதிக ஆய்வையும் மேற்கொள்ளும் முந்தலை மையமாக கொண்டு செயற்படும் வினிவித அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்திற்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

பெறுமதிமிக்க தகவல்களையும் தமது அனுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொண்ட உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் மட்டத்திலான சமூக அமைப்புகள், புத்தளம் மாவட்ட செயலகம், புத்தளம், முந்தல், கற்பிட்டி மற்றும் வனாதவில்லு பிரதேச செயலகங்களின் அதிகாரிகளுக்கும் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள். அரசியல்வாதிகள், சமயத்தலைவர்கள், முகாம் நிர்வாக குழுக்கள், சமூகத்தலைவர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த ஆய்விற்கு நிதியளித்தமைக்காக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எமது நன்றிகள்.

இவ்வாய்வு அறிக்கையை தமிழில் மொழிமாற்றம் செய்து தந்த திருமதி நஸ்ரியா முனாஸ் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இந்த ஆய்வு காலப்பகுதி முழுவதும் ஒத்துழைப்பு வழங்கிய வறுமை ஆராய்ச்சி நிலைய ஆய்வு பணியாளர்கள் மற்றும் உதவி பணியாளர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த கற்கை புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்ட ஆறு முரண்பாட்டு சம்பவங்களின் தோற்றம் மற்றும் அவை தீர்க்கப்பட்ட விதம் பற்றி ஆராய்கிறது. இது இடம்பெயர்ந்தோரின் சடுதியான வருகையினால் ஏற்பட்ட சாதக மற்றும் பாதக விளைவுகளை ஆராய்கிறது. முரண்பாடுகளின் சிக்கற்தன்மையிலும் அவற்றின் தீர்வு முயற்சிகளிலும் செல்வாக்குச்செலுத்திய பிற பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் உள்ளூர் சமூக பொருளாதார நிலை பற்றிய விரிவான கலந்துரையாடலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்துடன் உள்ளூரில் நடைமுறையிலுள்ள பல்வேறு முரண்பாட்டுத் தீர்வுப் பொறிமுறைகள் பற்றியும் இக்கற்கை ஆராய்கின்றது

## சுருக்கக் குறியீடுகளின் பட்டியல்

| | |
|---|---|
| **AGA** | உதவி அரசாங்க அதிபர் |
| **CBO** | சமூக மட்டத்திலான நிறுவனம் |
| **CEPA** | வறுமை ஆராய்ச்சி நிலையம் |
| **CFA** | யுத்த நிறுத்த உடன்படிக்கை |
| **CHA** | மனிதாபிமான அமைப்புகளுக்கான ஒன்றியம் |
| **CPA** | மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் |
| **CTB** | இலங்கை போக்குவரத்து சபை |
| **CTF** | சமூக நம்பிக்கை நிதியம் |
| **DCS** | குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் |
| **DS** | மாவட்ட செயலாளர்/ பிரதேச செயலாளர் |
| **DS division** | பிரதேச செயலாளர் பிரிவு |
| **FGD** | குழுக் கலந்துரையாடல் |
| **FLICT** | மோதல் நிலைமாற்ற உள்ளூர் முன்னெடுப்புக்களுக்கான அனுசரனை |
| **GA** | அரசாங்க அதிபர் |
| **GS/GN division** | கிராம சேவகர்/கிராம அலுவலர் பிரிவு |
| **GTZ** | ஜேர்மன் தொழில்நுட்பக் கூட்டுத்தாபனம் |
| **HCI** | வறிய நபர்களின் எண்ணிக்கை சுட்டி |
| **IDMC** | உள்வாரியான இடம்பெயர்வு கண்காணிப்புக்கான நிறுவனம் |
| **IDP** | உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் |
| **IFSP** | இணைந்த உணவுப் பாதுகாப்பு செயற்றிட்டம் |
| **INGOs** | சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் |
| **ISRC** | இஸ்லாமிய நிவாரண செயற்குழு |
| **KI** | முக்கிய நபர் நேர்காணல் |
| **LRC** | காணி மீள்சீரமைப்பு ஆணைக்குழு |
| **LTTE** | தமிழீழ விடுதலைப் புலிகள் |
| **MOH** | சுகாதார மருத்துவ அதிகாரி |
| **MP** | பாராளுமன்ற அங்கத்தவர் |
| **NGO** | அரச சார்பற்ற நிறுவனங்கள் |
| **PLOTE** | தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு |
| **RDF** | கிராம அபிவிருத்தித் தாபனம் |
| **UNHCR** | ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஆணைக் குழு |
| **USAID** | சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் தாபனம் |
| **WODEPT** | அபிவிருத்தி, சமத்துவம், சமாதானத்துக்கான பெண்களின் அமைப்பு |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| **சுருக்கக் குறியீடுகளின் பட்டியல்** | | |
| **நிறைவேற்றுச் சுருக்கம்** | | i - v |
| **1.** | **அறிமுகம்** | 1 |
| **2.** | **பின்னணி** | 1 |
| 2.1 | சனத் தொகை கட்டமைப்பு | 2 |
| 2.2 | சனத் தொகைப் பரம்பல் | 3 |
| 2.3 | புத்தளத்தில் வறுமை | 5 |
| 2.4 | இடம்பெயர்வின் போக்கு | 9 |
| 2.5 | ஆய்வுச் செயன்முறை | 12 |
| **3.** | **முக்கிய பதங்கள்** | 16 |
| **4.** | **முரண்பாட்டுச் சூழல்** | 18 |
| 4.1 | முரண்பாட்டுச் சம்பவங்கள் - சிறு சம்பவக் கற்கைகள் | 19 |
| | வனாதவில்லு | 19 |
| | நாகவில்லு முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் | 22 |
| | நுரைச்சோலை மருத்துவ சகாய நிலையம். | 23 |
| | பாலாவி நிலம் | 23 |
| | சிறிமாபுரம் அடக்கஸ்தலம் | 25 |
| | உடப்பு | 25 |
| 4.2 | ஒன்றுடனொன்று இணைந்த நிகழ்வுகளும் பங்களிப்புச் செய்யும் காரணிகளும் | 26 |
| 4.3 | முரண்பாட்டிற்கான துலங்கல்கள் | 28 |
| **5.** | **புத்தளத்தில் முரண்பாடு, மாறும் தன்மை, பங்களிப்புச் செய்யும் காரணிகள் மற்றும் பொதுவான விடயங்கள்** | 31 |
| 5.1. | மோதல்களின்/முரண்பாடுகளின் வகைகள் | 31 |
| 5.2. | அபிவிருத்தி மற்றும் தீர்வின் பல்வேறு கட்டங்கள் | 32 |
| 5.3. | தீவிரத் தன்மையின் வீச்சு | 33 |
| 5.4 | முரண்பாடுகளின் சிக்கற் தன்மை | 34 |
| 5.5 | பொதுவான விடயங்கள் | 36 |
| | அடையாளம் | 36 |
| | நிலம் | 38 |
| | பலம் (சக்தி) | 41 |
| | அரசியலும் அரசியற் பாத்திரங்களும் | 42 |
| 5.6 | சமூக – பொருளாதார நிலைமைகள் | 44 |
| 5.7 | உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்களும் முரண்பாடும் | 51 |
| **6.** | **சமாதானத்தை உருவாக்கலும் சமாதானத்தைப் பேணுதலும்** | 63 |
| **7.** | **முடிவுரை** | 72 |

# நிறைவேற்றுச் சுருக்கம்

இக்கற்கையானது ஆறு முரண்பாட்டு சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு அவை எவ்வாறு உருப்பெற்று எவ்வாறு தீர்க்கப்பட்டன என்பவற்றை நோக்குவதாக அமைகின்றது. இவ் ஆறு முரண்பாட்டு சம்பவங்களும் இனக்கலப்புடைய பிரதேச செயலர் பிரிவுகளில் இடம்பெற்றனவாகவே அமைகின்றன. இக்கற்கை இனம் பல முரண்பாடுகளில் செல்வாக்கு செலுத்துவதையும் இனம்சாராத காரணிகளினால் உருவாகும் முரண்பாடுகள் கூட குழுக்களிடையே ஏற்கனவே காணப்படும் பதட்டங்களினால் இனத்துவப்படுத்தப்படுவதையும் கண்டறிகின்றது.

இடம்பெயர்ந்தோர் வருகையானது சனத்தொகைச் சேர்க்கையில் திடீர் மாற்றத்தையும் இனக்கலப்பையும் உருவாக்கியதுடன் பதட்டங்களுக்கும் முரண்பாடுகளுக்கும் அத்திவாரமிடும்வகையில் ஆதரவு மற்றும் அரசியல் சக்தியைக் கொண்ட வேறுபட்ட ஒரு குழுவினரையும் உள்ளே கொண்டுவந்துள்ளது. இத்தகைய வேறுபாடுகள் மாவட்டத்தின் சனத்தொகைப் பரம்பல் மற்றும் சமூக, பொருளாதார நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டவையாக அமைகின்றன. தேசிய புள்ளிவிபரத் தரவுகளின்படி புத்தளம் ஒரு வறிய மாவட்டமாக இருப்பதுடன் அதன் வறுமை தோற்றப்பாடு இடம்பெயர்ந்த சனத்தொகையினால் பாதிக்கப்பட்டதாகவும் அமைகின்றது.

1990ம் ஆண்டில் 22% மாக இருந்த தலைக்கணிப்புசார் வறுமைக்குறிகாட்டி அளவீடு 1995ல் 31% மாக அதிகரித்தமை குறைந்தளவிலான தனிநபர் வள அடிப்படையைக் கொண்ட இடம்பெயர்ந்தோர் சனத்தொகையின் ஓர் அம்சமாக இருக்கமுடியும். மாவட்டத்திலுள்ளே உள்ள வளங்கள் இடம்பெயர்ந்தோரின் திடீர் வருகைக்கு போதுமானதாக அமையாததோடு ஏற்கனவே காணப்பட்ட பொருளாதார நெருக்கடிகளில் மேலும் அழுத்தம் ஏற்படுத்துவதாக அமைந்தது. 31% தலைக்கணிப்புசார் வறுமைக்குறிகாட்டி 2002 இல் 13% ஆக வீழ்ச்சியடைந்தது அண்மைக்காலத்தில் தரவுகளின்படி சடுதியான மாற்றத்தைக் காட்டுகின்றது. உதவிகளைப் பெற்றுக்கொள்ளத் தொடங்கி சில வருடங்களின் பின் உதவிகளின் வருகை தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் அது புத்தளத்திலுள்ள மக்களின் நுகர்வுத் தன்மைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது என்பது சாத்தியமாகும். இடம்பெயர்ந்தோர் வருகையின் பின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி விரைவாக ஏற்பட்டது. ஆவர்கள் பயனுள்ள முதலீடுகளை ஏற்படுத்துவதன் மூலமும் சிறிய வியாபாரங்களை ஆரம்பிப்பதன் மூலமும் உள்ளூர் பொருளாதாரத்திற்குப் பங்களிப்பு செய்துள்ளனர். வறுமையில் இடம்பெயர்ந்தோர் வருகையின் ஆரம்பத்தாக்கம் எதிர்மறையானதாக இருந்தாலும் மிக அண்மைய கால தரவுகளின்படி மாவட்டத்தின் நுகர்வை அடிப்படையாகக் கொண்ட வறுமையை குறைப்பதற்கும் பொருளாதார நிலைமைகளை முன்னேற்றுவதற்கும் அவர்கள் முக்கிய பங்களிப்பை செய்துள்ளனர். இப்பாரிய பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டிருப்பினும் உள்ளூர் சமுகங்கள் மாவட்டத்தின் பொருளாதாரத்தில் இடம்பெயர்ந்தோர் எதிர்மறையான தாக்கத்தையே ஏற்படுத்துகின்றனர் என்ற நோக்கை தொடர்ச்சியாகக் கொண்டுள்ளனர். இத்தகைய தொடர்ச்சியான நோக்கின் விளைவாக கற்கையில் ஆராயப்பட்ட முரண்பாடுகள் சமுக, பொருளாதார போட்டிகளுடன் தொடர்புபட்டனவாகவே உள்ளன.

இக்கற்கையில் அடிக்கடி பேசப்படும் இடம்பெயர்வு என்ற விடயமானது மாவட்டத்தின் முரண்பாட்டுச்சூழல் மற்றும் சமுக, பொருளாதார மாற்றங்களுடன் தொடர்புடையதாகவே காணப்படுகின்றது. இந்தியாவிலிருந்து வருகை தந்த வரலாற்று பெருமையுடைய அரசர்கள் மற்றும் அவர்களது கூட்டத்தினர் (அரசன் விஜயன் கி.மு 543ல் இலங்கையில் வருகை தந்த தம்மன என்று அழைக்கப்படும் இடமானது தற்போதைய வனாதவில்லு பிரதேச செயலர் பிரிவிலேயே அமைந்துள்ளது) முதல் 4ம் பராக்கிரமபாகுவின் பண்டைய ஆட்சிபீடங்கள் மற்றும் வர்த்தகத் துறைமுகங்களான சிலாபம், புத்தளம், மாதம்பை முதல் 29விவசாயக் குடும்பங்களைக் கொண்ட தப்போவ மற்றும் 327 குடும்பங்களைக் கொண்ட விஜயகட்டுப்போத போன்ற காலணித்துவத்திற்குப் பின்னான நீர்ப்பாசனக் குடியேற்றத்திட்டங்கள் வரையான இடம்பெயர்வு நிகழ்வுகளை புத்தளம் கொண்டுள்ளது. 1990 இற்கும் 1991 ற்குமிடையில் வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து LTTE யினால் வலுக்கட்டாயமாக இடம்பெயர்ந்த

மக்களின் இடம்பெயர்வே மிக அண்மைக்காலத்தில் ஏற்பட்ட இடம்பெயர்வாகும். LTTE யினால் வெளியேற்றப்பட்ட மக்களில் பெரும்பான்மையினர் வடக்கிலுள்ள யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிலிருந்து வந்த முஸ்லிம்கள் ஆவர்.

இக்கற்கையானது புத்தளத்தில் இடம்பெற்ற ஆறு முக்கிய முரண்பாட்டு சம்பவங்களை ஆராய்வதாக அமைகின்றது. ஆவை பல்வகைத்தன்மை, தீர்வு மட்டங்கள் மற்றும் ஈடுபடும் தரப்பினர் போன்றவற்றின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்பட்டன. இம்முரண்பாட்டு சம்பவங்களில் ஒன்றான சிறிமாபுர சம்பவத்தில் மூன்று சமுகங்கள் மயானத்தைப் பகிர்ந்து கொள்வதில் உண்டான மோதலானது அந்த சமுகங்களிடையே ப்தட்டங்களை அதிகரித்த ஒரு முரண்பாட்டு நிகழ்வாக காணப்பட்டது.

இச்சம்பவத்தில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் வருகைக்கு முன்பாக பௌத்தர்களும் கத்தோலிக்கர்களும் இம்மயானத்தைத் தம்முடையதாகக் கொண்டிருந்தனர். இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களில் அம்மயானத்தில் தமக்கும் ஒரு பங்கு கேட்கப்பட்டபொழுது மற்றைய இரு குழுக்களும் மறுப்பு தெரிவித்தவிடத்து அது சில பதட்டங்களை சமுதாய மட்டத்தில் ஏற்படுத்தியது. சுனுகு (கிராமிய அபிவிருத்தி மன்றம்) என்ற நடுநிலை வகிக்கும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனத்தின் தலையீட்டில் முரண்பாட்டுக்குழுக்கள் இடம்பெயர்ந்த முஸ்லிம்களுடன் மயானத்தைப் பகிர்ந்துகொள்ள சம்மதித்தனர். இந்த சூழ்நிலையைத் தீர்த்துவைப்பதற்கு மூன்றாம் தரப்பினரின் தலையீடு வெற்றிகரமானதாக அமைந்தது. ஆனால் இது போன்ற சூழ்நிலைகளைத் தீர்ப்பதற்கு இது எப்போதும் வெற்றிகரமாக அமைவதில்லை.

நுரைச்சோலை சம்பவத்தில் பள்ளிவாசல் சிகிச்சைநிலையமாக செயற்பட்டது. இடம்பெயர்ந்தோர் வருகையுடன் மருந்தகத்திற்கு வரும் கூட்டத்தின் அளவு அதிகரித்ததையடுத்து பள்ளிவாசல் செயற்குழு தமது வழமையான செயற்பாடுகளில் இடையூறு ஏற்படுவதாக உணர்ந்தனர். இஸ்லாமிய உதவி ஆணைக்குழு மற்றும் USAID ஆகியவற்றின் தலையீட்டில் ஒரு புதிய சிகிச்சை நிலையம் பள்ளிவாசலுக்கு வெளியே உருவாக்கப்பட்டது. புதிய வளங்கள் வழங்கப்பட்டமையால் முரண்பாட்டின் இயக்கநிலை மாற்றமடைந்து, சுமுகநிலை உருவாகியது.

நாகவில்லுவில் இரண்டு சிங்கள மற்றும் முஸ்லிம் முச்சக்கரவண்டி சாரதி குழுக்களிடையே அவர்களின் வாகனங்களின் தரிப்பிடம் தொடர்பான பிரச்சினை ஒன்றிருந்தது. இந்தப் பிரச்சினை வன்முறையாய் உருவெடுத்து அந்த பிரதேசத்தையும் சுற்றுப்புறங்களிலும் தீவிர பதட்டநிலையைத் தோற்றுவித்தது. பிரதேசத்தில் இந்த பதட்டநிலை இன்னும் தொடர்கின்றது. பிரச்சினை ஏற்பட்ட இடத்திற்கு அண்மையில் பொலிஸ் சோதனைச்சாவடி ஒன்று அமைக்கப்பட்டதனால் இந்த பதட்டநிலை வன்முறையாக உருவாகாமல் கட்டுப்படுத்தப்பட்டது. இதற்கு மேலாக, அந்த முரண்பாடு தீர்க்கப்படாமல் இன்னும் தொடர்கின்றது.

உடப்பு பூனப்பிட்டியில் இந்து ஆலயம் ஒன்று கட்டப்பட்ட காணித்துண்டு தொடர்பாக இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்குமிடையில் பிணக்கு ஏற்பட்டது. இருதரப்பையும் சேர்ந்த இளைஞர்களிடையே ஏற்பட்ட கைகலப்புக்கள், அப்பிரதேசத்தின் அமைதி நிலையைச் சீர்குலைத்தன. இந்த முரண்பாடானது இறுதியாக நீண்டகாலமாக பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு, அப்பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் பிணக்கில் ஈடுபட் டிருந்த ஒரு தரப்பிற்கு காணித்துண்டொன்றை வழங்கியதன் மூலம் தீர்க்கப்பட்டது.

வனாத்திவில்லு பிரதேசத்தில் முரண்பாடானது கங்கைவாடி மற்றும் சேராக்குளி சமுகங்களுக்கிடையிலான மீன்பிடிக்கான போட்டியின் காரணமாக தோன்றியது. இந்த இரண்டு தரப்புகளும் நீண்டகாலமாக கடலைப் பயன்படுத்துவது மற்றும் படகுகளைக் கரைசேர்ப்பது தொடர்பாக தமது உரிமைகளை வலியுறுத்தியுள்ளது. அரச அதிபரால் மற்றைய அதிகாரிகளும் இணைந்து தீர்வு ஒன்று வழங்கப்பட்டது. பிரதேசத்தின் பதட்ட சூழ்நிலை காரணமாக ஆயுதப்படைகளும் தீர்வு வழங்கலில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். அரச அதிபர் பிணக்கில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்புகளும் தமது படகுகளை கரையேற்றம், மீன்களை விற்பனை செய்யவும் பகிர்ந்துகொள்வதற்கும் 4 ஏக்கர் காணியை ஒதுக்கினார்.

அடையாளம், காணி மற்றும் அரசியல் அதிகாரம் போன்ற விடயங்கள் முரண்பாட்டின் சிக்கற்தன்மையுடன் சேர்ந்து, பல சந்தர்ப்பங்களில் தீர்வுகளை நலிவான மற்றும் கடினமானவையாக ஆக்கியுள்ளன. இந்த முரண்பாட்டு பாங்குகள் இந்த கற்கையினுள் அவற்றின் ஆழ்ந்த பிரதிபலிப்பு ஏற்படுவதுவதற்கு வாய்ப்பளிப்பதுடன் முரண்பாடுகள் தனிப்பட்ட சம்பவங்கள் அல்ல. அவை நாம் விளக்குவதற்காக எடுத்துள்ள முரண்பாடுகளின் வீச்சுகள் மற்றும் தீர்வு பொறிமுறைகளின் சிக்கலான சூழ்நிலையில் மூலகங்கள் என்பதை உணர்ந்துகொள்ளவும் வாய்ப்பளிக்கிறது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள், அவர்கள் மாவட்டத்தில் தற்காலிகமாக தங்கியுள்ளார்கள் என்ற பொதுவான புரிந்துணர்வுக்கு சவால்விடும் வகையில் 17 வருடங்களாக அப்பிரதேசத்தில் இருக்கின்றார்கள். 2006 இல் ருரேஹ்சு நடாத்திய கருத்துக் கணிப்பில், 94% ஆன இடம்பெயர்ந்தவர்கள் தாம் தமது சொந்த இடங்களுக்கு செல்ல விரும்பவில்லை எனவும், புத்தளத்திலேயே குடியேற முடிவுசெய்துள்ளதாயும் முடிவுசெய்துள்ளதாக தெரிவித்துள்ளனர். ஆய்வு செய்யப்பட்ட இடம்பெயர்ந்தவர்களில் 74% மக்கள் புத்தளத்தில் காணி வாங்கியுள்ளதாயும் 58% ஆனவர்கள் தங்களுக்கு புத்தளத்திலும் ஒரு வீடு இருப்பதாக தெரிவித்துள்ளனர். உள்ளூர் சமுதாயம், சிறப்பாக உள்ளூரில் மிகமோசமான நலிவடைந்த நிலையில் வாழும் குழுக்கள் இருக்கும்போது, இடம்பெயர்ந்தவர்கள் தொடர்ச்சியாக நலிவடைந்தவர்கள் என்ற அடிப்படையில் நோக்குவது தொடர்பில் கேள்வி எழுப்புகின்றது. இடம்பெயர்ந்தவர்கள் நியாயமற்ற முறையில் மதிப்பிடப்படுகின்றார்கள் என்ற எண்ணம் மாவட்டத்தில் சமூக வெறுப்பின் மையத்தில் உள்ளதுடன், இக்கற்கை பரிசீலிக்கும் முரண்பாடுகள் சிலவற்றிலும் செல்வாக்கு செலுத்தியுள்ளது. பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்கள், புலம்பெயர்ந்து மீன்பிடிக்கும் மக்கள் மற்றும் புலம்பெயர் பணியாள்களின் குடும்பங்கள் என்பன குறிப்பாக அபிவிருத்தி நிறுவனங்களிடமிருந்தான விசேட உதவி தேவைப்படும் நலிவான குழுக்கள் என, இக்கற்கையின் பின்னூட்டம் கூறுகின்றது. தொடர்ச்சியான அபிவிருத்தித்திட்டங்கள் மற்றும் உதவிகள் பாதுகாப்புநிலையை மிக மெல்லிய வரைமுறைகளுள் வரையறுப்பதன் மூலம், ஏற்கனவே சமுகத்திலுள்ள அதிருப்தி நிலையை அதிகரிக்கச்செய்யும் தவறைச் செய்துள்ளன. ஏதிர்காலத்தில் இந்த அபிவிருத்தி நிலை தவிர்க்கப்பட அல்லது மேலும் பரவுவதை தடுத்து நிறுத்த, உரிய அதிகாரிகள் தள நிலவரங்களை சரியாக அறிந்து கொண்டு அவர்களின் செயற்பாடுகளை, அதிக உணர்திறனுள்ள முறையில் திட்டமிடவும் அமுல்படுத்தவும் வேண்டும்.

சகல முரண்பாட்டு பிரச்சினைகளும், முரண்பாட்டில் தொடர்புபட்ட தரப்புகளால் வெளி உதவி மற்றும் ஈடுபாட்டுடன் தீர்க்கப்பட்டன. தீர்வானது எப்போதும் சேர்ந்து எடுத்த தீர்வாகும். சாதகமான ஒரு தீர்வை எட்டுவதற்கு, புறத்தலையீடு சரியான நேரத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பன அவசியம் என்பது நிருபணமாயுள்ளது.

சகல முரண்பாடுகளும், இதுவரை ஒன்றையொன்று சரியாகப் புரிந்துகொள்ளாத, விட்டுக் கொடுப்பிற்கு தயாராயுள்ள சமுகங்களிடையே தீர்விற்கான ஒரு வாய்ப்பை கொண்டிருக்கின்றன. இத்தீர்வானது வெற்றிகரமாக அமைய பூரணமானதாயும் சரியான நேரத்தில் வழங்கப்படுவதாயும் அமையவேண்டும். இதுவரை வழங்கப்பட்ட வெற்றிகரமான தீர்வுகள் யாவும், முரண்பாடு பொதுவான சமுக குழப்பமாக, அல்லது அதில் ஈடுபட்டுள்ள குழுக்களிடையில் கட்டுப்படுத்தமுடியாத சூழ்நிலையாக உருவெடுக்க முன்னர் வழங்கப்பட்டவையாகவே உள்ளன. பிரதான அறிக்கையில், இந்த ஒவ்வொரு முரண்பாட்டினதும் தீர்வு செயன்முறைகளிலிருந்தான உதாரணங்கள் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

முரண்பாடானது, காணி மீதான சட்டரீதியான உரிமையை அடிப்படையாக இருந்தபொழுது, முரண்பட்ட தரப்புகள் முறையான நீதி செயன்முறையை நாடிச்சென்றுள்ளனர். பாலாவியில் நிலப் பிணக்கில் ஈடுபட்டிருந்த தரப்புக்கள், உதாரணமாக, உள்ளூர் அமைப்புக்களான சமாதான சபை, சமயத்தலைவர்கள் போன்றவர்கள் பிணக்கில் பக்கச்சார்பாக உள்ளதால் அவர்கள் மூலம் நியாயம் கிடைக்காது என அறிந்து, வழக்கு தாக்கல் செய்தனர்.

பொதுச்சொத்துக்கள் தொடர்பான முரண்பாடுகளில், சம்பந்தப்பட்டவர்கள் தீர்வுக்காக அபிவிருத்தி நிறுவனங்களை அணுகுவார்கள். நுரைச்சோலையில் உள்ள பெண்கள் குழுக்கள், இடம்பெயர்ந்தவர்களின் வருகைக்கு முன் உள்ளூர்வாசிகளால் பயன்படுத்தப்பட்ட சிகிச்சை நிலையத்தை பகிர்ந்துகொள்வது தொடர்பான பிரச்சினையின்போது ஐஞசுஊ ஐ நாடினார்கள்.

அரச கட்டமைப்புகளும் செயற்பாட்டாளர்களும் முரண்பாட்டு தீர்வில் ஈடுபடும்போது, முரண்பாட்ட தரப்புகளுக்கு, தீர்வாளர்கள் பக்கச்சார்பற்றவர்கள் என்பதை தெளிவுபடுத்துவது அவசியம். தீர்வின் வெற்றியானது எவ்வாறு சகல தரப்புகளும் அதன் நியாயத்தன்மை மீது திருப்தியடைவதில் தங்கியுள்ளது என்பதை வனாதிவில்லு, உடப்பு மற்றும் நாகவில்லு சமுகங்களின் அனுபவங்கள் காட்டுகின்றன.

வேறுபட்ட பிணக்குகளைத் தீர்க்கும் முகமாக சமாதானச் சபைகள் அமைக்கப்பட்டு பல்வேறு மட்டங்களில் செயற்பட்டுள்ளன. சமுக மட்டத்திலான சமாதான சபைகள், உள்ளூர் சமயத்தலைவர்கள், சமுகத்தலைவர்கள் மற்றும் பிரதேசத்தில் செயற்படும் அபிவிருத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ளன. இந்த சபைகள் உள்ளூர் மட்டத்திலான பிணக்குகளை நேடியாகத் தலையிட்டு கையாள்கின்றன. இந்த குழுக்கள் உள்ளூர் நிலைமைகளிலிருந்து தோற்றம் பெற்ற இயல்பான குழுக்கள். அவை, வெளிநிறுவனங்களால் சமாதானத்தை கட்டியெழுப்பும் அல்லது கட்டுமானமாக உருவாக்கப்படவில்லை. அவற்றின் வெற்றி பெரும்பாலும் அவற்றின் உறுப்பினர் சமுகத்துடன் கொண்டிருந்த தொடர்பாலும், சபையின் முடிவெடுப்பவர்கள் கொண்டிருந்த மதிப்பாலும் சாத்தியமாயிற்று. அதே போல, தனிப்பட்ட சமயத் தலைவர்களும், முரண்பாட்டு தீர்வுகாணலில் தத்தமது அதிகார வரையறைக்குட்பட்டு ஒரு முக்கிய பங்கு வகித்துள்ளார்கள். அவர்கள் தமது சொந்த மதத்தைச்சார்ந்தவர்களிடையே பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வெற்றி பெற்றுள்ளதுடன், பிணக்குகள் வன்முறையாகப் பரிணமிப்பதைத் தவிர்ப்பதிலும் பங்களித்துள்ளார்கள். பிணக்குகளில் ஈடுபட்டுள்ளவர்கள் முதலில் அணுகுவது சமயத்தலைவர்களாக இருப்பதால், இவர்களால் பிணக்குகளை மிக ஆரம்பக்கட்டத்திலேயே தீர்த்துக்கொள்ள முடிகின்றது.

இதைவிட, வேறு முரண்பாட்டு தீர்வு பொறிமுறைகளாக, சமுகத்தில் செல்வாக்கு மிக்க தனிநபர்கள், அரசியல்வாதிகள், நிர்வாக அதிகாரிகள், நீதிமன்றங்கள் மற்றும் பொலிஸ் போன்ற முறையான நீதி கட்டமைப்புகளை நாடுதல் போன்றவை அமைந்துள்ளன. மேற்குறிப்பிட்ட அனைத்து அமைப்புக்களும், முரண்பாட்டை தீர்ப்பதற்கான அவற்றின் தலையீட்டில் வேறுபட்ட அளவிலான வெற்றிகளை பெற்றிருந்தன. பிணக்கில் ஈடுபட்ட தரப்புகளால் முன்னெடுக்கப்பட்டு, மேற்சொன்ன தரப்புகள் பல ஒன்றிணைந்து உருவாக்கிய தீர்வுகளே நிரந்தரமானதாயும் நீண்டகாலம் நிலைத்து நிற்பதாயுமான தீர்வுகளாக நிலை பெற்றதை, இக்கற்கை காட்டுகின்றது.

புத்தளம், ஓரு அமைதியான ஒரு மாவட்டமாக தென்பட்டாலும், அங்கு பிணக்குகளும், வன்முறையும் இடம்பெறுவதை இக்கற்கை கண்டறிந்துள்ளது. முரண்பாட்டின் தன்மை முரண்பாட்டைக் கையாள்வதற்கும் ஒப்பீட்டளவில் சமாதானத்தை நிலவச்செய்யவும் பல உள்ளூர் பொறிமுறைகள் உருவாக்கப்பட காரணமாயிருந்துள்ளது.

மாவட்டத்தில் செயற்படமுனையும் வெளிநிறுவனங்கள், சமுகத்தின் பிளவுறுநிலையை புரிந்துகொண்டு, சூழ்நிலையை இன்னும் மோசமாக்கி விடாமல் செயற்பாடுகளை முன்னெடுக்க முனைவது இங்கு முக்கியமான ஒரு அம்சமாகும். பொருளாதார வளங்களுக்கான போட்டி முரண்பாட்டைத் தூண்டும் என்பது பற்றி விழிப்புணர்வு காரணமாக, நிறுவனங்கள் மாவட்டத்தின் பல்வேறு சமுகங்களிலுமுள்ள நலிவான குழுக்களிடையே வளங்களை சமமாக பகிர்ந்து கொள்ளக்கூடியவகையிலான திட்டங்களை அமுல்படுத்தவேண்டியுள்ளது. அவ்வாறு அனைத்து சமுகங்களையும் சார்ந்த நலிவான குழுக்களை உள்ளடக்கியதாக திட்டம் அமுல்படுத்தப்பட முடியாத சூழ்நிலையில், மக்கள் பயனாளிகள் தெரிவு பக்கசார்பானது என்று புரிந்துகொள்ளாமலிருக்க தெரிவு செயன்முறை வெளிப்படையானதாக அமையவேண்டும். புத்தளம் மாவட்டத்தில் பணியாற்றும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள்,

தமது அபிவிருத்தி திட்டங்களில் இப்போது ஒரு முரண்பாட்டு உணர்திறன் அணுகுமுறையை எடுக்கத்தொடங்கியுள்ளன.

இடம்பெயர்ந்தோர் நலனுக்காக செயற்படும் நலனுக்காக செயற்படும் நிறுவனங்கள், தற்போது தம் திட்டங்களில் உள்ளூர் மக்களில் ஒரு பகுதியையும் உள்ளடக்கத் தீர்மானித்துள்ளார்கள். இந்த நகர்வானது, இடம்பெயர்ந்தவர்களுக்கும், உள்ளூர் சமுகங்கத்திற்கும் இடையிலான முரண்பாட்டிற்கான சாத்தியக்கூறைக் குறைத்துள்ளது.

கற்கையானது, புத்தளத்தின் முரண்பாட்டு சூழ்நிலையில் பயன்படுத்தப்பட்ட பல்வேறு உள்ளூர் பொறிமுறைகளை அடையாளம் கண்டிருப்பதுடன், மாவட்டத்தின் முரண்பாட்டு சூழ்நிலையைக் கருத்திலெடுக்க நினைக்கும் புறசெயற்பாட்டளர்களுள், உள்ளூர் அமைப்புக்களுக்கு பதிலாக, வேறு அமைப்புக்கள், முரண்பாட்டுதீர்வு நுட்பங்கள் அல்லது சமாதான முன்னெடுப்புகளை ஏற்படுத்துவதைவிட, உள்ளூர் செயற்பாட்டாளர்களுக்கு உதவி அவர்களின் ஆற்றலை மேம்படுத்த உதவுதல் சிறந்த அணுகுமுறையாக இருக்கும் என சிபாரிசு செய்கின்றது.

# 1. அறிமுகம்

இவ்வாய்வும் அதனுடன் இணைந்த தொடர்பாடல் செயன்முறையும் பல்வேறு பிரதான குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டன. சமுதாய மட்டத்திலான முரண்பாட்டு முகாமைத்துவ விருத்தி, யுத்தத்தால பாதிக்கப்பட்ட சமுதாயங்களிடையான சமாதானத்திற்கு பங்களிப்பு செய்தல் மற்றும் இலங்கையில் முரண்பாடு மற்றும் சமாதானத்திலான விரிவுரைகளிற்கு ஆய்வுகளிலிருந்து ஒரு தோற்றத்தில் பங்களிப்பு செய்தல் என்பன பரந்த குறிக்கோள்களாகும்.

மேற்கூறப்பட்ட இக்குறிக்கோளானது சமூக மட்டத்திலான அமைப்புக்களின் ஆற்றல்களைப் பயன்படுத்துதல் மற்றும் சமுதாய மட்டத்தில் முரண்பாட்டு நிலை மாற்றங்களில் பல்வேறு தோற்றங்களை விருத்தி செய்து கொள்வதற்காக அவர்களுடன் இணைந்து செயற்படல் என்பன மூலம் முரண்பாட்டு முகாமைத்துவம் மற்றும் தீர்வு காண்பதில் உள்நாட்டு அறிவினைப் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்துவதனூடு எய்தப்படலாம். இவ்வாறு விருத்தி செய்யப்படுகின்ற சமுதாய மட்டத்திலான இம்முரண்பாட்டு நிலை மாற்றங்களின் பல்வேறு தோற்றங்கள் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற மற்றும் புதிய செயன்முறைகளுடன் இணைத்துக்கொள்ளப்படலாம்.


இக்குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக இச்செயற்றிட்டமானது ஆய்வுகளை தகவல்கள், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல், வலையமைப்புகளை ஏற்படுத்தல் (networking) மற்றும் பயிற்சிகளை வழங்குவதுடன் இணைத்துக்கொண்ட ஒரு மீட்டல் செயற்பாட்டினை மேற்கொள்ளவேண்டியிருந்தது. சமூகங்களும் சமூக அடிப்படையில் தொழிற்படும் நிறுவனங்களுமே இச்செயற்றிட்டத்தின் இலக்குக்குரிய குழுவாகும். இச்செயற்றிட்டம் ஆரம்பத்தில் புத்தளம் மாவட்டத்திற்கு வரைப்படுத்தப்பட்டது. பின்னர் இச்செயற்றிட்டமானது அரசாங்கத்தின் மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சமூகத்தின் கொள்கை மற்றும் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தக்கூடியதாக, செயற்றிட்டத்திற்கு உதவக்கூடிய நிறுவனங்கள் மற்றும் தொடர்பாடல்களுடன் விரிவாக்கப்பட்டது.

இவ்வாய்வானது வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் வறுமை மற்றும் முரண்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் பொறுப்பில் தீர்மானிக்கப்பட்ட ஆய்வுக் கட்டமைப்புடன் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வுக் கட்டமைப்பு புத்தளத்தின் முரண்பாட்டு நிலைமைக்கு பங்களிப்பு செய்த சிக்கலான சமூக – பொருளாதார காரணிகள், இம்முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்கு உதவிய செயற்பாடுகள், நுட்பங்கள் மற்றும் நீண்ட கால சமாதானத்தை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செயன்முறைகள் என்பவற்றை வெளிக்கொண்டு வர உதவியுள்ளது. வறுமை மீதான ஆய்வின் பகுப்பாய்வு நோக்கு ஆய்வுக்குழுவினரை சமாதானத்தை உருவாக்குதல் மற்றும் சமாதானத்தை பேணுதல் எனும் ஆரம்ப நோக்கத்திற்கும் மேலாக முன்னேறி புத்தளத்தில் முரண்பாட்டு நிலைமைகளிற்கு அடிப்படையாக அமைந்த பல்வேறு பலவீனமான தன்மைகளிடையான போட்டிகளையும் ஆழமாக ஆராய முற்படுத்தியுள்ளது.

# 2. பின்னணி

### *அறிமுகம்*


இப்பகுதி இவ்வாய்வுச் செயன்முறையின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்ட துணையான தகவல்களை ஒன்றுதிரட்டுகின்றது. இது புத்தளத்தின் சமூக – பொருளாதார மற்றும் குடித்தொகைத் தரவுகளை ஒன்று சேர்த்து மேலும் ஆய்விலிருந்து கண்டறியப்பட்ட உண்மைகளையும் கொண்டு பின்னணியை உருவாக்குகின்றது. புத்தளத்தின் குடித்தொகை கட்டமைப்பிற்கும் அதன் சமூக – பொருளாதார போக்கு மற்றும் முரண்பாடுகளின் தோற்றத்திற்குமிடையில் ஒரு தெளிவான தொடர்புண்டு. முரண்பாட்டினைத் தீர்த்துவைப்பதற்கான செயற்பாடுகளை மற்றும் நுட்பங்களை படிப்பதற்கு இக்குடித்தொகை மற்றும் சமூக – பொருளாதார அமைப்புக்களை அறிவதும் விளங்கிக் கொள்வதும் முக்கியமாகும். இப்பகுதியானது குறித்த மாவட்டத்தில் குடித்தொகை கட்டமைப்பு, பரம்பல், வறுமை மற்றும் இடம்பெயர்வு என்பவற்றிலான தகவல்களை துணையான, முதலான தரவுகளின் தொகுப்புடன் இணைத்து கூறுகிறது.




**உரு 2.1: புத்தளம் மாவட்ட வரைபடம்** (கற்கை மேற்காள்ளப்பட்ட பிரதேச செயலர் பிரிவுகள் வட்டமிடப்பட்டுள்ளன)

## 2.1 சனத் தொகை கட்டமைப்பு

புத்தளம் மாவட்டத்தின் சனத்தொகைக் கட்டமைப்பு பல்வேறு பிரிவினர்களின் ஒரு கலவையாகக் காணப்படுகிறது. 2001ம் ஆண்டு குடித்தொகைக் கணக்கெடுப்பிலிருந்து 709,677 மொத்த குடித்தொகையில் 523,116 சிங்களவர்கள் 133,134 முஸ்லிம்கள் மற்றும் 48,078 இலங்கைத் தமிழர்களும் உள்ளனர். இவ்வாறான பல்லின சனத்தொகை உள்ளடக்கமானது. ஒரு தனிப்பட்ட சிறப்பியல்பு இல்லாவிடினும் 1990 களில் இம்மாவட்டத்திற்கு உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் (IDP) வருகையானது சந்தேகமின்றி பெரிய ஒரு தாக்கத்தை குறிப்பாக அவர்கள் உள்நாட்டு மக்களுடன் குடியமர்ந்த பிரதேசங்களில் ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2004 இலான உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கான (IDPs) தேசிய பாதுகாப்பு மற்றும் திடமான தீர்வுத் திட்டத்தின் கீழான தரவு திரட்டலின் பிரகாரம் புத்தளம் மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 705,342 இல் 61,585 பேர் உள்வாரியாக இடம்பெயர்ந்தோராக இருப்பதுடன் இவர்களுள் 99% ஆனோர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தோராவர். முஸ்லிம் குடித்தொகையின் கணிசமான அளவிலான இடம்பெயர்வின் விளைவாக புத்தளம் மாவட்டத்தின் குடித்தொகையின் இன அமைப்பில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக மன்னாரிலிருந்து இப்பகுதிக்கு இடம்பெயர்ந்த 66,200 பேர் மட்டுமே 2003இல் இம்மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 10% ஐ ஆக்குகின்றனர்.




**உரு *2.2* புத்தளம் மாவட்டத்தின் சனத்தொகைக் கட்டமைப்பு**
*மூலம்: குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத் தரவிலிருந்து, 2001*

## 2.2 சனத்தொகைப் பரம்பல்

புத்தளத்தின் பல்லின மக்கள் வாழும் தன்மையும் குடித்தொகை தொடர்பான காரணிகள் முரண்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் விதங்களும் சமாதானத்தை உருவாக்குதல், சமாதானத்தைப் பேணுதல் ஆய்வுக்கு மிகவும் முக்கியமாகும். கணக்கெடுப்பு முடிவுகளின் படி (அட்டவணை 2.1) பெரும்பாலான பிரதேச செயலாளர் பிரிவுகளில் (DS) சிங்கள இனச் சமூகமே கூடுதலான சனத்தொகையை ஆக்குகின்றது. சிலாபம், நாத்தாண்டிய தவிர்ந்த பெரும்பாலான பிரதேச செயலாளர் பிரிவுகளில் 99% ஆன குடித்தொகையினர் சிங்களவராவர். சில பிரதேச செயலாளர் பிரிவுகளில் பெரும்பான்மைக் குடித்தொகையை ஏனைய இன மக்கள் ஆக்குகின்றனர். உதாரணமாக புத்தளம், கல்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவுகளில் பெரும்பான்மைச் சமூகம் இலங்கை முஸ்லிம்களாவர்.

புத்தளம் மாவட்டத்தின் புத்தளம், கல்பிட்டி, முந்தல் மற்றும் வனாதவில்லு போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகள் பல்லின மக்கள் கலந்து வாழும் பிரதேசங்களாகும். இவ்வாய்வானது 6 முரண்பாட்டு நிகழ்வுகளையும் அவை உருவான பின்னணி மற்றும் அவை தீர்க்கப்பட்ட விதங்களை ஆராய்கின்றது. இம்முரண்பாட்டு சம்பவங்கள் எல்லாம் பல்லின மக்கள் கலந்து வாழும் பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே நிகழ்ந்தன. பல முரண்பாட்டு சம்பவங்கள் இன வேறுபாடுகளால் செல்வாக்குச் செலுத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் வேறு காரணங்களால் தூண்டப்பட்ட முரண்பாட்டு நிலைமைகள் பிரதேசத்திலுள்ள மக்களிடையே உருவான பரபரப்புகளால் இனத் துவேச செயற்பாடுகளுடன் கூடியவையாக உருமாறுவதாகவும் இவ்வாய்வு கண்டறிந்துள்ளது.

உள்வாரியாக இடம்பெயர்ந்த (IDP) மக்களின் வருகையால் திடீரெனத் தோற்றுவிக்கப்பட்ட மக்கள் தொகை அமைப்பிலான மாற்றமானது இனப்பல்வகைமையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி வித்தியாசமான உதவி வழங்கும் அமைப்புகள், அரசியல் சக்திகள் கொண்ட ஒரு வேறுபட்ட மக்கள் தொகையை கொண்டு வந்ததானது அமைதியின்மை, முரண்பாட்டு நிலைமைகளிற்கு அடித்தளமிட்டது. இம்மாவட்டத்தின் மக்கள் அமைப்பு மற்றும் பல்வேறுபட்ட மக்கள் குழுக்கள் சமமான கவனிப்பு இன்மையால் அல்லது பக்கச் சார்பான தன்மையாலான மனக்குறைகள், குற்றச்சாட்டுகளை உருவாக்கவும், நிலைநிறுத்தவும், இம்மக்களின் அமைப்பை பயன்படுத்திய விதங்களும் இவ்வித்தியாசங்களுக்கு வித்திட்டன.

"பொதுவாக மக்களிடையே முரண்பாடுகள் இல்லை. கூடிய அளவான உள்ளூர் மக்கள் சமுதாயத்தில் சிறியளவான இடம்பெயர்ந்த (IDP) மக்கள் வாழ்வதன் காரணமாக இவை உருவாக்கப்பட்டிருக்கலாம்"


(முக்கிய நபர் நேர்காணல், ஆண், வனாதவில்லு)

குறிப்பிடத்தக்க அளவில் இடம்பெயர்ந்த மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில் கூடுதலாக முரண்பாடுகள் நிலவுவதாக ஆய்வு கூறுகிறது. மேலும் இப்பிரதேசங்களில் இவ்விடம் பெயர்ந்த மக்கள் ஏனைய உள்ளூர் மக்கள் சமூகத்துடன் கலவாது பிரிந்து தனிப்பட்டு வாழ்வதும் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு மாறாக சிறியளவில் இடம்பெயர்ந்த மக்கள் உள்நாட்டு மக்களுடன் கலந்து வாழும் பிரதேசங்களில் முரண்பாட்டு சம்பவங்கள் குறைவாகவே உள்ளன.

**அட்டவணை 2.1 இனம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் அடிப்படையில் சனத்தொகை**

| பிரதேச செயலாளர் பிரிவு | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | இலங்கை முஸ்லிம் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|
| புத்தளம் மாவட்டம் | 73.71 | 6.77 | 0.31 | 18.76 | 0.44 |
| 1. கற்பிட்டி | 28.90 | 12.16 | 0.40 | 58.19 | 0.35 |
| 2. வனாதவில்லு | 54.40 | 5.97 | 0.68 | 38.69 | 0.26 |
| 3. கறுவலகஸ்வெவ | 98.86 | 0.71 | 0.03 | 0.27 | 0.13 |
| 4. நவகத்தேகம | 97.35 | 2.59 | - | 0.02 | 0.04 |
| 5. புத்தளம் | 29.54 | 11.10 | 0.23 | 58.00 | 1.12 |
| 6. முந்தல் | 40.82 | 21.26 | 0.26 | 37.40 | 0.20 |
| 7. பெரிய கும்புக்கடவல | 96.29 | 3.45 | 0.05 | 0.14 | 0.08 |
| 8. ஆனமடுவ | 97.45 | 0.60 | 0.02 | 1.80 | 0.13 |
| 9. பல்லம | 83.06 | 1.70 | 0.07 | 15.10 | 0.09 |
| 10. ஆரச்சிக்கடுவ | 91.37 | 7.10 | 1.84 | 0.48 | 0.26 |
| 11. சிலாபம் | 81.76 | 9.93 | 0.53 | 8.14 | 0.65 |
| 12. மாதம்பே | 91.41 | 2.57 | 0.52 | 5.24 | 0.26 |
| 13. மகாவெவ | 97.38 | 2.19 | 0.10 | 0.15 | 0.18 |
| 14. நாத்தாண்டியா | 87.00 | 2.99 | 0.17 | 9.56 | 0.29 |
| 15. வென்னப்புவ | 96.51 | 2.46 | 0.42 | 0.21 | 0.40 |
| 16. தன்கொடுவ | 95.88 | 2.26 | 0.25 | 0.59 | 1.02 |

(மூலம்: குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், 2001)




**படம் 2.3 பிரதேச செயலகப் பிரிவு ரீதியாக சனத்தொகை பரம்பல்**

மூலம்: குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், 2004

## 2.3 புத்தளத்தில் வறுமை

1990 இல் புத்தளம் மாவட்டத்தில் 22% ஆக இருந்த தலைக் கணிப்பு சார் வறுமைக் குறிகாட்டி (HCI)[1] ஆனது உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்கள் இணைந்த பின்னர் 1995 இல் 31% ஆக அதிகரித்தது. தலைக் கணிப்பு சார் வறுமைக் குறிகாட்டி (HCI) இலான இவ்வதிகரிப்பானது இக்காலப்பகுதியில் வட இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்ட அல்லது அதிகரித்த கொடுமைகள் காரணமாக வெளியேறிய பல உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் உள்வருகையினால் இம்மாவட்டத்தில் வறிய மக்கள் சனத்தொகை அதிகரித்தமை காரணமாக இருக்கலாம். இதே போன்று தலைக் கணிப்பு சார் வறுமைக் குறிகாட்டிணிலான அதிகரிப்பு சமகாலப்பகுதியில் வேறு மாவட்டங்களிலும் அவதானிக்கப்பட்டமையால் இவ்வதிகரிப்புக்கு வேறு சில விடயங்களும் காரணங்களாக இருக்கலாம் (அட்டவணை 2:2 ஐப் பார்க்க). மாவட்டத்தினுள் காணப்படும் வளங்கள் இத்திடீர் வருகை மற்றும் ஏற்கனவே பலவீனமான அதன் பொருளாதாரத்திற்கு உதவுவதற்கு போதவில்லை. அப்போதிருந்தே புத்தளம் மாவட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற போதிலும் 2001 வரைக்கும் தலைக் கணிப்பு சார் வறுமைக் குறிகாட்டியினில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதும் காணப்படாது 31% இலேயே உளளது. குடித்தொகை புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் அண்மைய வறுமை தொடர்பான சுட்டிகள் புத்தளம் மாவட்டத்தில் வறுமை மட்டமானது. 2001 இல் 31% இலிருந்து 2006 இல் 13% ஆக பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளதெனக் காட்டுகிறது.

என்றாலும் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பல்வேறு சமூகங்களின் பொருளாதார போக்குகள் மற்றும் ஏனைய தர ரீதியான தகவல்களின் அடிப்படையில் இவ்வாறான ஒரு பாரிய மாற்றம் எவ்வாறு ஏற்பட்டதென விளங்கிக் கொள்வதற்கு கடினமாகவுள்ளது. வெளியிலிருந்து வழங்கப்பட்ட உதவிகள் சில வருடங்களின் பின் மக்கள் அவற்றைப் பெற்று அதனால் புத்தளம் வாழ் மக்களின் மக்களின் நுகர்வு முறைகள் முன்னேற்றமடைந்தமை ஒரு காரணமாக இருக்க முடியுமாயினும் இதற்கான

1. தலைக் கணிப்பு சார் வறுமைக் குறிகாட்டி என்பது வறுமைக் கோட்டின் கீழுள்ள சனத்தொகை சதவீதம் என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது.

வாய்ப்புகள் குறைவு. இப்பிரதேச மக்களின் முதலீடானது இம்மாவட்ட முதலீட்டிலான அதிகரிப்புக்கு பங்களிப்பு செய்த மற்றுமொரு சாத்தியமான காரணியாகும். உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையின் பின்னர் இப்பிரதேசத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் பாரியளவு விருத்தியடைந்துள்ளன என்பது பெரும்பாலான பதிலளிப்பாளர்களிடமிருந்து கிடைத்த தகவல்களிலிருந்து வெளிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறாக இப்பிரதேசத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் மற்றும் அவர்களது சொந்த இடங்களுக்கு அவர்கள் திரும்ப மாட்டார்கள் எனும் மறைமுகமான உண்மை என்பன அவர்களை வினைத்திறனான முதலீடுகளைச் செய்யவும் சிறிய தொழில்களை ஆரம்பிக்கவும் வைத்து இம்மாவட்டத்தின் பொருளாதார முன்னேற்றத்தில் அவர்களைத் தூண்டியது எனலாம். 1995/96 குடும்பங்களின் வருமான, செலவு மதிப்பீடு சுட்டிக் காட்டிய அதிகரித்த வறுமைக்கு உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையும் காரணமாகும். பின்னைய வருடங்களில் இவ்விடம் பெயர்ந்த மக்களின் பொருளாதார நடவடிக்கைகளால் இந்நிலை முன்னேற்றம் கண்டுள்ளது. தலைக் கணிப்பு சார் வறுமைக் குறிகாட்டி காட்டி 1990இல் 22% இலிருந்து 1995இல் 31% வரை வறுமை வீதத்திலான பாரிய அதிகரிப்பு மற்றும் பின்னைய நாட்களில் தலைக் கணிப்பு சார் வறுமைக் குறிகாட்டிணின் வீழ்ச்சிப் போக்கு என்பன புத்தளம் மாவட்டத்திலான பொருளாதார நிலைப்பாட்டில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் பங்களிப்பை எடுத்துக் காட்டுகின்றன.

இப்பிரதேசத்தில் விவசாயத் துறையில் ஏற்பட்ட சாதகமான போக்கும் வறுமை மட்டத்தை குறைப்பதற்கு பங்களிப்பு செய்திருக்கலாம். பல வருடங்களாக உலர் வலய மரக்கறி பயிர்செய்கை புத்தளத்தில் நடைபெற்று வந்தாலும் 2002இல் நுரைச்சோலையில் நிர்மாணம் செய்யப்பட்ட புதிய சந்தை போன்ற மேலதிக உட்கட்டமைப்பு வசதிகள் சிறிய அளவிலான விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மக்களின் பொருளாதார ஈட்டல்களின் அதிகரிப்புக்கு பங்களிப்பு செய்திருக்கலாம். இம்மாவட்டத்தின் பிரதான பயிர்களில் ஒன்றான தேங்காயின் விலையேற்றமும் பெரிய அளவிலான தோட்டங்கள் செய்கின்ற அதே போல் சிறிய அளவிலான உற்பத்திகளை மேற்கொள்பவர்களின் வருமானங்களை அதிகரித்திருக்கலாம்.

இவ்வாய்வுக்கான கள ஆய்வுச் செயற்பாடு 2006 நவம்பாரிலிருந்து 2007 ஒக்டோபர் வரை மேற்கொள்ளப்பட்டது. இக்காலப்பகுதிகளில் பதிலளிப்பாளர்களிடமிருந்து கிடைத்த தகவல்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சமூகங்களின் குடும்பங்களுக்கிடையிலான வறுமை மட்டங்கள் இன்னும் முன்னேற்றம் கண்டிருக்கவில்லை என்றே கூறின. 1995 களில் அடிப்படை உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருட்களிலான விலை அதிகரிப்பு என்பன இன்றைய வறுமை நிலைமை மேலும் மோசமடைய காரணமாயிருக்கலாம்.

ஆராயப்பட்ட அனைத்து முரண்பாட்டு நிகழ்வுகளும் மூல காரணமாக ஒரு சமூக பொருளாதார பிரச்சினையைக் கொண்டிருந்தன. தேசிய மட்டத்திலான தரவுகளின் படி வறுமை மட்டங்கள் குறைந்தாலும் இன்னும் நிலவுகின்ற சமூக பொருளாதார நிலைமைகள் இப்பிரதேசத்திலான சமூகங்களிடையே பல முரண்பாடுகளையும், பிணக்குகளையும் தோற்றுவித்துக் கொண்டேயுள்ளன.

எண்ணளவிலான முன்னேற்றம் ஒரு புறமிருக்க அம்மாவட்டத்துள் சமூக பொருளாதார காரணிகள் மிக முக்கியமானதாகவும் முரண்பாடுகளுக்குக் காரணமாகவும் தொடர்ந்தும் இருந்த வண்ணமே உள்ளன. புத்தளத்தின் வறுமை நிலையிலிருந்து அடைந்த முன்னேற்றத்தை சமூக ஒற்றுமை அல்லது சமாதானம் அடையவில்லை.

கீழே தரப்பட்டுள்ள 2001 இன் புள்ளிவிபரவியல் தரவுகளின் அடிப்படையில் இலங்கையின் 10 மிகவும் வறுமையான பிரதேச செயலகப் பிரிவுகளில் 3 பிரிவுகள் புத்தளம் மாவட்டத்திலுள்ளன. அவை கல்பிட்டி, முன்தல், மற்றும் வனாதவில்லு என்பனவாகும்.

புத்தளம் மாவட்டத்திலான வறுமை உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களால் ஏற்பட்டது எனும் உணர்வு அங்கு வாழும் உள்ளூர் மக்களிடம் பெருமளவு காணப்படுகிறது. இடம்பெயர்ந்த மக்களுக்கு

**அட்டவணை 2.2 மாவட்ட ரீதியான தலைக் கணிப்பு சார் வறுமைக் குறிகாட்டி**

| | 1990/91 | 1995/96 | 2002 | 2006/07 |
|---|---|---|---|---|
| இலங்கை | 26.1 | 28.8 | 22.7 | 15.2 |
| கொழும்பு | 16 | 12 | 6 | 5 |
| கம்பஹா | 15 | 14 | 11 | 9 |
| களுத்துறை | 32 | 30 | 20 | 13 |
| கண்டி | 36 | 37 | 25 | 17 |
| மாத்தளை | 29 | 42 | 30 | 19 |
| நுவரெலியா | 20 | 32 | 23 | 34 |
| காலி | 30 | 32 | 26 | 14 |
| மாத்தறை | 29 | 35 | 28 | 15 |
| ஹம்பாந்தோட்டை | 32 | 31 | 32 | 13 |
| குருணாகலை | 27 | 26 | 25 | 15 |
| புத்தளம் | 22 | 31 | 31 | 13 |
| அனுராதபுரம் | 24 | 27 | 20 | 15 |
| பொலன்னறுவை | 25 | 20 | 24 | 13 |
| பதுளை | 31 | 41 | 37 | 24 |
| மொனராகலை | 34 | 56 | 37 | 33 |
| இரத்தினபுரி | 31 | 46 | 34 | 27 |
| கேகாலை | 31 | 36 | 33 | 21 |
| மட்டக்களப்பு | * | * | * | 11 |
| அம்பாறை | * | * | * | 11 |

மூலம்: குடித்தெகை மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம்

**அட்டவணை 2.3 இலங்கையின் பத்து மிகவும் வறிய பிரதேச செயலகப் பிரிவுகள்**

| பிரதேச செயலாளர் பிரிவு (மாவட்டம்) | தலைக் கணிப்பு சார் வறுமைக் குறிகாட்டி |
|---|---|
| 1. சியம்பலந்துவை (மொனராகலை) | 51.8 |
| 2. ரிதீமாலியத்த (பதுளை) | 51.2 |
| 3. மீககிவுல (பதுளை) | 46.5 |
| 4. கந்தகெடிய (பதுளை) | 46.1 |
| 5. கல்பிடிய (புத்தளம்) | 45.3 |
| 6. முந்தல் (புத்தளம்) | 41.1 |
| 7. மதுள்ள (மொனராகலை) | 40.7 |
| 8. வனாதவில்லு (புத்தளம்) | 40.3 |
| 9. எலபாத (இரத்தினபுரி) | 40.1 |
| 10. வெலிகபொல (இரத்தினபுரி) | 39.2 |

குறிப்பு : தலைக் கணிப்பு சார் வறுமைக் குறிகாட்டிஎன்பது வறுமைக் கோட்டின் கீழான சனத்தொகை வீதமாகும்

மூலம்: குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், 2001

பல்வேறுபட்ட நிவாரண உதவிகள் வழங்கப்படுவதால் உள்ளூர் மக்கள் தமது வளங்கள் மற்றும் உதவிகளுக்கு இடம்பெயர்ந்த மக்களுடன் போட்டிபோடும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலைமையானது உள்ளூர் சமூகத்தில் வறுமை கோட்டின் ஓரத்தில் வாழும் குடும்பங்கள் இன்னுமின்னும் வறுமை நிலைக்கு தள்ளப்படுவதற்கு ஏதுவாகியுள்ளது. சில பிரதேச செயலகப்

பிரிவுகளிலான தேசிய மட்டத்திலான தரவுகள் இக்கருத்தினை ஆதரிக்கின்றன. கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையின்படி இம்மாவட்டத்தின் 55.14% ஆன உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் கல்பிட்டி பிரதேசத்தில் வாழ்வதுடன் கல்பிட்டியின் தலைக் கணிப்பு சார் வறுமைக் குறிகாட்டி 45.3% அக உள்ளதுடன் அதனை நாட்டின் 5வது வறிய பிரதேச செயலகப் பிரிவாகவும் ஆக்கியுள்ளது.

இதற்கு மாற்றமாக புத்தளப் பிரதேச செயலகம் மாவட்டத்தில் 33.25% ஆன புலம்பெயர்ந்த மக்களை கொண்டுள்ளது. எனினும் இது 25.08% ஆன தலைக் கணிப்பு சார் வறுமைக் குறிகாட்டியிணைக் காட்டுகின்றது.

துணையான தகவல்கள் மற்றும் மாவட்டத்தில் வாழும் சில மக்களின் நோக்கல்களிடையான இணைந்த கருத்துக்களை விடுத்து ஆய்வுக் குழுவானது நுகர்வு வறுமை வீதத்திற்கும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் இருக்கைக்குமிடையில் எளிய நேரான தொடர்பு ஏதும் இல்லை என்றே வாதாடுகின்றது.

**அட்டவணை 2.4 புத்தளம் மாவட்டத்தின் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் தொகை மற்றும் தலைக் கணிப்பு சார் வறுமைக் குறிகாட்டி**

| பிரிவு | 1990-1991 | 1995-1996 | 2001-2002 | 2006 |
|---|---|---|---|---|
| தலைக் கணிப்பு சார் வறுமைக் குறிகாட்டி | 22 | 31 | 31 | 13 |
| உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் தொகை | 80,000 | 52,555 | 81,707 | 63,145 |

மூலம்: குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், CPA, UNHCR

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் தொகை மற்றும் புத்தளம் மாவட்டத்திலான வறுமை தலைக் கணிப்பு சார் வறுமைக் குறிகாட்டிகளை அட்டவணை 2.4 காட்டுகிறது. இவ்வட்டவணை உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் உள்வருகை மற்றும் மாவட்டத்தின் வறுமை நிலைமைக்கிடையே தெளிவான எந்த தொடர்பினையும் காட்டவில்லை.

புத்தளத்தில் கூடியளவு உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் காணப்பட்டாலும் ஒப்பீட்டளவில் குறைந்த வறுமை வீதங்கள் காணப்படலானது அதனது நகர்புறத் தன்மை காரணமாக அங்குள்ள சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகள், சிறந்த ஜீவனோபாய வாய்ப்புக்கள் காரணமாக ஏற்பட்டதெனக் கொள்ளலாம்.

**அட்டவணை 2.5 தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் IDP களின் பரம்பல்**

| பிரிவு | மொத்தம் | வீதம் |
|---|---|---|
| கல்பிட்டி | 34,821 | 55.14 |
| வனாதவில்லு | 2,008 | 3.18 |
| புத்தளம் | 20,994 | 33.25 |
| முந்தல் | 5,322 | 8.43 |
| **மொத்தம்** | **63,145** | |

மூலம்: UNHCR, 2006

புத்தளத்தின் வறுமையானது உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் வாழும் பிரதேசங்களில் மாத்திரம் காணப்படுவதல்ல. மகாகும்புக்கடவல, நவகத்தேகம மற்றும் பல்லம பிரதேச செயலகங்கள் 20.2 - 30.9 இற்கிடைப்பட்ட தலைக் கணிப்பு சார் வறுமைக் குறிகாட்டினுடன் இலங்கையின் 119 மிகவும் வறிய பிரதேச செயலகப் பிரிவுகளுள் உட்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஆணைக் குழு (UNHCR) இன் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களிலான புள்ளிவிபரவியல்கள் இடம்பெயர்ந்த மக்கள் கல்பிட்டி, வனாதவில்லு, புத்தளம் மற்றும் முன்தல் போன்ற சில பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக காட்டுகின்றது.

## 2.4 இடம்பெயர்வின் போக்கு

இம்மாவட்டத்தின் சமூக பொருளாதார மாற்றங்கள் மற்றும் முரண்பாட்டுச் சூழலுடன் இணைந்ததாக இவ்வாய்வில் மீண்டும் மீண்டும் இடம்பெயர்வு தோன்றுகிறது. இம்மாவட்டத்தின் வரலாற்றினை பின்னோக்கிப் பார்க்கும் போது புத்தளமானது வழமையாக பெருமளவில் உள்வரும் இடம்பெயர்வுக்கான ஒரு மையமாகக் காணப்பட்டிருப்பது தெளிவாகின்றது. இம்மாவட்டத்தின் தனித்துவ குடித்தொகை அமைப்பானது பல்வேறு சந்தர்ப்பங்களில் இடம்பெயர்வின் காரணமாக மாற்றங்களுக்குள்ளாகியுள்ளது.

### புத்தளத்தில் இடம்பெயர்வு - ஒரு சுருக்கமான வரலாறு

புத்தளமானது இடம்பெயர்வுடன் தொடர்பான ஒரு நீண்ட வரலாற்றைக் கண்டுள்ளது. கி.மு. 543இல் விஜய மன்னன் இலங்கையின் தம்மண்ண எனும் பிரதேசத்துக்கு வந்தான். இப்பிரதேசம் இன்றைய வனாதவில்லு பிரதேச செயலகப் பிரிவில் உள்ளது. கோட்டே அரச காலப்பகுதியிலும் IVம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்திலும் ஏனைய வர்த்தக நாடுகளிலிருந்து வரும் பெருந்திரளான கப்பல்களை தக்கவைக்கும் வர்த்தக நிலையங்களாக சிலாபம், புத்தளம், மற்றும் மாதம்பே துறைமுகங்கள் காணப்பட்டன. 1505 இல் இலங்கைத் தீவுக்கு வந்த போர்த்துக்கேயர்களுக்கு 1559 இல் புத்தளத்தை அவர்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரக் கூடியதாக இருந்தது. முகாலயப் பேரரசினால் இந்தியாவின் தென்கோடி ராமேஸ்வரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதலைத் தொடர்ந்து 18 குடும்பங்கள் தலைமன்னார் பகுதியில் குடியமர்ந்தனர். பின்னர் அவர்கள் அங்கு குடிநீர் பிரச்சினைக்கு முகங்கொடுத்ததால் கல்பிட்டியவுக்கு இடம்பெயர்ந்து இறுதியில் உடப்புப் பிரதேசத்தில் குடியமர்ந்தனர். இவர்களின் சந்ததியினர் இன்றும் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வருவதுடன் இவர்கள் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். 1695 இல் கல்பிட்டி ஒல்லாந்தர்களால் கைப்பற்றப்பட்டது.

(மூலம்: மேலதிக ஆய்வறிக்கை - வினிவித)

### தப்போவ திட்டம்

உலர்வலய கிராம குடியமர்த்தல் அபிவிருத்தித் திட்டத்தின் முதல் கட்ட நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக நாச்சதுவ (அநுராதபுர மாவட்டம்) பேரகம (ஹம்பாந்தோட்டை மாவட்டம்) மற்றும் தப்போவ (புத்தளம் மாவட்டம்) போன்ற குடியிருப்புக்கள் அப்போதிருந்த நீர்த்தேக்கங்கள், வாய்க்கால்களை புனர்நிர்மாணம் செய்யும் நோக்கத்துடனும் குடிமக்களுக்கு நிலங்களைப் பிரித்து பகிர்ந்தளித்து நீர்ப்பாசன வசதிகளை வழங்கும் நோக்கத்துடனும் அபிவிருத்தி செய்யப்பட்டன (ஜீ.ச்.பீரிஸ் - 2006). புத்தளம் மாவட்டத்தின் தப்போவ, கொடுகச்சிய மற்றும் மகாஉஸ்வெவ என்பன இலங்கையின் முதல் 28 நீர்பாசன குடியமர்த்தல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பிரதேசங்களாகும். 1928 இல் தப்போவ திட்டத்தினூடு 29 விவசாயிகளுக்கு 5 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இவ்வாறு குடியமர்த்தப்பட்டோருள் சிங்கள, தமிழ், முஸ்லிம் மூன்று இனத்தவர்களும் அடங்குவர்.

### கிராம விஸ்தரிப்புத் திட்டம்

பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் 1927 இலிருந்து பல காணிப் பகிர்வுத் திட்டங்கள் காணப்பட்டாலும் சுதந்திரத்தின் பின் கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் காணிப் பகிர்வானது பெருமளவு அதிகரித்தது. கிராமப் பிரதேசங்களில் சனத்தொகை நெருக்கடி ஏற்பட்டு பிரதான நிலத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்ட 1950 இல் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன் அடிப்படையில் அரசாங்கம் தனியார் காணிகளை சுவீகாரம் செய்து கிராம விஸ்தரிப்புத் திட்டத்தை அமுலாக்கியது. இத்திட்டங்கள் காணியற்ற குடியேற்றவாசிகளுக்கு காணிகளைப் பகிர்ந்தளித்து வறுமையை ஒழிக்கும் நோக்கில் கிராம அபிவிருத்தி உபாயங்களின் கீழ் அமுலாக்கப்பட்டது.

## விஜயகடுபொத திட்டம்

இத்திட்டம் 1951 - 1953களில் மேற்கொள்ளப்பட்டது. இங்கு 327 குடும்பங்களிற்கு 3 ஏக்கர் விவசாய நிலமும் 1 ¾ ஏக்கர் வீட்டுக் காணியும் வழங்கப்பட்டன. 1956, 1960களில் வில்பொதகொட, ஜனபடய குடியமர்த்தல் திட்டத்தின் கீழ் 510 குடும்பங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5 ஏக்கர் காணி வீதம் வழங்கப்பட்டது. 1972 இல் அரசால் சுவீகரிக்கப்பட்ட ஏனைய நிலங்கள் காணியற்றோரிடையில் காலத்திற்கு காலம் பகிர்ந்தளிக்கப்பட்டது. 1988 இல் ஆனமடுவ பகுதியை மையப்படுத்தி கம்உதாவ செயற்திட்டம் அமுலாக்கப்பட்டது. இதே காலப்பகுதியில் சில தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்வதற்கான உதவிகளுடன் காணிகள் சொந்தமாக கொடுக்கும் உடாகம் எண்ணக்கரு அறிமுகப்படுத்தப்பட்டது.

1990/1991 களில் மோதல்கள் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து மக்கள் புத்தளம் மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்தனர். இம்மக்கள் அவர்களின் வீடுகளிலிருந்து அவர்களின் விருப்பத்திற்கு எதிராக வெளியேற்றப்பட்டவர்களாவர்.

மேலதிக ஆய்வுகள் 21ம் திகதி ஒக்டோபர் மாதம் 1990 இலேயே இம்மாவட்டத்தினுள் மக்கள் பெருமளவில் உள்வாங்கப்பட்டார்கள் என கூறுகின்றன. இவர்களுள் பெரும்பாலானோர் தமிழீழ விடுதலைப் புலிகளினால் (LTTE) வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து வடக்கின் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து குடிபெயர்ந்த முஸ்லிம்களாவர்.

இந்நிகழ்வுகளுக்கு ஒத்ததாக மேலதிக ஆய்வுகளின் படி மற்றுமொரு பெரிய மக்கள் குடிபெயர்வு மன்னார் மாவட்ட எல்லைக் கிராமங்களிலிருந்து வனாதவில்லு பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள தூரப் பிரதேசங்களை நோக்கி நிகழ்ந்தது. இவ்வாறு இரல்மடுவ கிராமத்திலிருந்து 85 குடும்பங்களும் பழைய எலுவன்குலம் பிரதேசத்திலிருந்து 60 குடும்பங்களும் புதிய எலுவன்குலம் பிரதேசத்திலிருந்து 97 குடும்பங்களும் குடிபெயர்ந்தனர். இக்காலப்பகுதியில் சிங்கள மற்றும் தமிழ் மக்களும் புத்தளத்திற்கு குடிபெயர்ந்தனர்.

இக்குடிபெயர்வுகளுக்கு வடக்கு மற்றும் எல்லைக் கிராமங்களிலான நேரடியான அச்சுறுத்தல்கள், பலவந்தமான வெளியேற்றங்கள் மற்றும் வன்முறைகள் பற்றிய பயம் என்பனவே காரணங்கள். இவ்வாறான காரணங்களால் இடம்பெயர்க்கப்பட்ட மக்கள் அக்காலத்திலிருந்தே முந்தல், கல்பிட்டி, புத்தளம் மற்றும் வனாதவில்லு பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றனர் என மேலதிக ஆய்வுகள் கூறுகின்றன. இவர்களுள் பெரும்பாலானோர் 18 வருடங்களுக்கும் மேலாக இப்பிரதேசங்களில் வசிக்கின்றனர்.

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கு உள்ளூர் மக்களால் முதலில் வழங்கப்பட்ட உதவி ஒத்தாசைகளே பின்னர் இடம் பெயர்ந்த மக்களின் உரிமைகளாகமாறி தற்போதுள்ள வளங்களும்

**அட்டவணை 2.6 பிறந்த இடம் தொடர்பாக குடும்பங்களின் எண்ணிக்கை**

| துற்போதைய வாழ்விட பிரதேச செயலகப் பிரிவு | சொந்த வதிவிடம் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வனாதவில்லு | மன்னார் | 585 |
| வனாதவில்லு | இரல்மடுவ, புதிய எலுவன்குளம், பழைய எலுவன்குளம் (எல்லைக் கிராமங்களிலிருந்து) | 242 |
| முந்தல் | மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் | 1442 |
| கற்பிட்டி | மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் | 8759 |
| புத்தளம் | யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு | 6156 |

மூலம்: வினிவித மாவட்ட ஆய்வு 2009

சேவைகளும் இடம் பெயர்ந்த மக்களால் கையாளப்படுவதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்குரிய உணர்வினை ஏற்படுத்தியுள்ளது என மேலதிக ஆய்வு குறிப்பிடுகின்றது.

இடம்பெயர்வின் விளைவுகள் சுருக்கமாக பின்வருமாறு முன்வைக்கப்படலாம்.


- உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையுடன் வளங்கள் பகிரப்படலில் சமனில்லாத தன்மையிலான அதிகரிப்பானது புத்தளம் மாவட்ட உள்ளூர் சமூகங்களால் பொதுவாக உணரப்பட்டு வந்துள்ளது.
- உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் உள்வாங்களுடன் தொழில் வாய்ப்புகளிற்கான போட்டி அதிகரித்துள்ளது. இது முன்னர் இம்மாவட்டத்தின் உள்ளூர் வாசிகளால் மாத்திரம் அனுபவிக்கப்பட்ட வாய்ப்புக்கள் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய ஒரு நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளது.
- சேவைகள் பற்றாக்குறையாக வழங்கப்பட்டமையால் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.
- உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் சமூகத்திற்கு வழங்கப்படுகின்ற உதவி ஒத்தாசைகள் குறிப்பாக மாவட்டத்தினுள் அவர்களின் இருக்கையை நிரந்தரமாக அனுமதிக்கும் தன்மை உள்ளூர் சமூகத்தால் அவர்கள் மீதான ஒரு சுமையாக உணரப்பட ஆரம்பித்துள்ளது.
- சில குறிப்பிட்ட சலுகைகள் புத்தளத்தின் ஏனைய சமூகங்களிற்கு வழங்கப்படாது இடம்பெயர்ந்த மக்களுக்கு மாத்திரம் வழங்கப்படுகின்றமை.
- உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் காணிகள்/நிலங்கள் வாங்கும் போக்கு காரணமாக இப்பிரதேச காணிகளின் விலையில் ஏற்பட்டுள்ள பாரிய அதிகரிப்பானது உள்ளூர் சமூகத்திற்கு பெரிய சவாலை உருவாக்கியுள்ளது.
- வனாதவில்லு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படுகின்ற தொடர்ச்சியான உலர் உணவு நிவாரணமானது வனாதவில்லு பிரதேசத்திலுள்ள ஏனைய சமூகங்களால் விஷேட சலுகையாகப் பார்க்கப்படுகின்றமை.
- சில பிரதேசங்களில் துஷ்பிரயோகங்கள் மற்றும் போதைப் பொருள் பாவனையிலும் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டுள்ளது. வழமையான நிர்வாக செயற்பாடுகளை பேணுவதிலான கஷ்டங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது செயற்திட்டங்களின் அமுலாக்கத்தில் இடம்பெயர்ந்த மக்களை மாத்திரம் இலக்காகக் கொண்டு செயற்பட்டமை இப்பிரதேசங்களில் இரு சமூகங்களுமிடையான வேறுபாட்டிற்கு பங்களிப்பு செய்துள்ளது.

இடம்பெயர்வின் தாக்கமானது உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் சொந்த இடங்களின் அரசியல் சூழ்நிலைகளிலும் காணக்கூடியதாகவுள்ளது. முஸ்லிம்கள் போன்ற பிணக்குகள் தோற்றுவிக்காத ஒரு சமூகத்தை வடக்கு மற்றும் கிழக்கு போன்ற மோதல்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து வெளியேற்றியமை இப்பகுதிகளின் மோதல் சூழ்நிலையின் தன்மையில் ஒரு மாற்றத்தை உண்டாக்குவதில் பங்களிப்பு செய்துள்ளது.

புத்தளம் வாழ் மக்களிடம் இம்மாவட்டத்துள்ளான மிகப் பெரிய மக்கள் உள்வாங்கலானது வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களாவர் எனும் உணர்வு நிலவி வருகிறது. இலங்கையின் வெவ்வேறு மாவட்டங்களிலிருந்து புத்தளம் மாவட்டத்துள் மக்களின் குடிபெயர்வு தொடர்பான வரலாரானது பெரும்பாலான குடிபுகுந்தவர்கள் குருணாகலை மற்றும் கம்பஹா மாவட்டத்திலிருந்து வந்தவர்களெனக் காட்டுகிறது. வடக்கிலிருந்து குடிபெயர்ந்த மக்களுள் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்களாகவும் அதே நேரம் புத்தளம் மாவட்ட உள்ளூர் சமூகத்தின் மொத்த குடித்தொகையில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் முஸ்லிம்களாகவும் இருப்பினும் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து உள்வந்த மக்களுக்கு வழங்கப்பட்ட தனிப்பட்ட அடையாளமானது இடம்பெயர்ந்த மக்களின் நிலைமையை, சமூகங்களிடையான உறவுகளை மற்றும் முழு ஒற்றுமையுடன் உள்ளூர் சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்கு இடம்பெயர்ந்த சமூகத்தின் பொருத்தப்பாட்டினைத் தீர்மானிப்பதில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்க அவர்களுக்கு உதவியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து 1990களில் மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் வந்து சேர்ந்தனர். பெரும்பாலான குடிபெயர்ந்தோர் முஸ்லிம்களாவர். ஏனைய சிங்கள, தமிழ் மக்கள் 1995 யுத்த காலப்பகுதியிலேயே புத்தளத்திற்கு குடிபெயர்ந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து முஸ்லிம்கள் திட்டமிட்டு வெளியேற்றப்பட்டமையால் அவர்கள் உள்வாங்கப்பட்ட மாவட்டங்கள் குறுகிய ஒரு காலப்பகுதியில் பெரும்தொகையான இடம்பெயர்ந்த மக்களால் நிரம்பியது.

மேலும் அப்பிரதேசங்களுக்கு வந்த அபிவிருத்தி நிறுவனங்கள் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையுடன் ஏனைய புவியியற் பிரதேசங்களின் பலவீனமான மக்களை விடுத்து இடம்பெயர்ந்த மக்களையே தனது இலக்குக்குரிய குழுவாக மையப்படுத்தியதாக சில பதிளலிப்பாளர்களின் பதில்கள் குறித்துக் காட்டுகின்றன. இவ்வுண்மையானது சமாதான செயற்குழுக்களின் அங்கத்தவர்களுடனான முக்கிய நபர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்களிலிருந்தும் வெளிக்காட்டப்பட்டது. குறிப்பாக புத்தளத்திற்கு உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையின் முதல் சில வருடங்களின் போதான பெரும்பாலான செயற்றிட்ட தலையீடுகள் இடம்பெயர்ந்த மக்களையும் அவர்கள் செறிவாக வாழ்ந்த பிரதேசங்களையுமே இலக்காகக் கொண்டதாக இவ்வங்கத்தவர்களும் கருதினர். இவர்கள் இவ்வாறான அமுலாக்கம் செய்பவர்கள் இன்னும் இந்நிறுவனங்களின் உதவி தேவைப்படுகின்ற வேறு குழுக்களும், பிரதேசங்களும் உள்ளன என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டுள்ளனர். அநுராதபுர மாவட்டத்தை நோக்கியுள்ள புத்தளத்தின் உற்புறப் பிரதேசங்களிலுள்ள பெரும்பாலும் தனிப்படுத்தப்பட்ட நிலையிலுள்ள சமூகங்களின் அதிருப்தி நிலையானது ஒரு கடுமையான மோதல் நிலைக்கு கொண்டு செல்லலாம் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.




**படம் 2.4 சொந்த மாவட்டங்கள் அடிப்படையில் இடம்பெயர்ந்த மக்கள் தொகை**
*மூலம்: குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் 2001*

## 2.5 ஆய்வு செயன்முறை

ஆய்வுச் செயன்முறையானது தொடர்பாடற் தத்துவங்களை கருத்திற் கொண்டு வடிவமைக்கப்பட்டதுடன் இதன் முடிவுகள் உள்ளூர் நிறுவனங்களுக்கு/அமைப்புகளுக்கு பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கக் கூடியவாறு நடத்தப்பட்டன. ஆரம்ப கட்ட நேர்காணல்கள் மூலம் இத்தகவல்களை எதிர்காலத்தில் பயன்படுத்தக் கூடிய நிறுவனங்களும் முக்கிய பங்காளர்களும் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டனர். ஆய்வின் பல்வேறு கட்டங்களில் ஆய்வின் முன்னேற்றம் மற்றும் பெறப்படுகின்ற

பெறுபேறுகள் பற்றிய விரிவான பின்னூட்டல்களைப் பெற்றுக் கொள்வதில் இவர்களின் ஈடுபாடு பெற்றுக் கொள்ளப்பட்டது. இவர்களே ஆய்வின் இறுதி முடிவுகளை பயன்படுத்துபவர்களாவர்.

## ஆரம்ப கள ஆய்வு

ஆரம்ப கட்ட கள நேர்காணல்கள் ஆய்வுக் குழுவினர் உள்ளூர் நிறுவனத்தின் மற்றும் வினிவித நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு உதவின. வினிவித நிறுவனத்தின் தலைவரே இவ்வாய்வினை முதலில் முன்மொழிந்தவராவர். இப்பயணங்கள் ஆய்வுக் குழுவினருக்கு ஏனைய முக்கிய பங்காளர்களை இனங்காண உதவியதுடன் ஆய்வுக்குரிய விடயத்துடன் இணைந்த பல்வேறு அரசியல் மற்றும் சமூக இரசனைகளுடனான முதல் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் உதவின.

ஸ்னோபோலிங் (Snowballing) முறையினை (Snowballing முறை : தகவல் பந்து பரிமாற்றம்: தொடர்புகளினூடாக தொடர்புகளை உருவாக்குதல்) பதிலளிப்பாளர்களை அடையாளம் கண்டுகொள்வதற்கு ஆய்வுக் குழுவினர் பயன்படுத்தினர். புத்தளத்தின் முரண்பாட்டு சூழலை ஆழமாக விளங்கிக் கொள்வதற்கும் முக்கிய பாத்திரங்களுக்குரியவர்களை அடையாளம் கண்டுகொள்வதற்கும் மற்றும் மேலதிய ஆய்வுகளுக்கு அடிப்படையாக அமையக் கூடிய வெவ்வேறு முரண்பாட்டு நிகழ்வுகளை அடையாளம் காண்பதற்குமாக ஐந்து களப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## முரண்பாட்டு நிகழ்வுகளையும் முரண்பாட்டு பிரிவினரையும் அடையாளம் காணுதல்

நிறுவன மற்றும் முக்கிய தனிநபர்களுடனான நேர்காணல்களின் தரவுகள் N6 பண்பறிரீதியான ஆய்வு மென்பொருளை பயன்படுத்தி ஆராயப்பட்டது. ஆரம்ப கட்ட ஆய்வானது, 2ம் கட்ட ஆய்வுகளில் விரிவாக விபரமாக ஆய்வு செய்யப்படுவதற்கு பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து 6 முரண்பாட்டு நிகழ்வுகளை அடையாளம் கண்டு கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு முரண்பாட்டு நிகழ்விலும் ஈடுபட்ட மற்றும் இவற்றால் பாதிக்கப்பட்ட தனிநபர்கள், குழுக்களையும் இவ்வாய்வு இனங்கண்டது. மேலும் வெவ்வேறு முரண்பாட்டு குழுக்கள் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக பயன்படுத்திய நுட்பங்கள், அமைப்புக்களையும் இது இனம் கண்டது.

## முரண்பாட்டு நிகழ்வுகளின் அடிப்படையிலான உத்தேச மாதிரி

ஆய்வின் 2ம் கட்டம் முக்கிய குழுக்களுடனான கலந்துரையாடல்கள் மற்றும் தனி நபர் நேர்காணல்களினூடு 6 முரண்பாட்டு நிகழ்வுகளையும் ஆழமாக ஆராய்ந்தது. இதன் போதான மாதிரி கட்டமைப்பானது ஒவ்வொரு முரண்பாட்டு நிகழ்விலிருந்தும் பெறக்கூடிய பொருத்தமான கருத்துக்களை முடியுமான அளவு பெற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் உருவாக்கப்பட்டது.

## துணைத் தரவு மதிப்பீடு

ஆய்வுச் செயன்முறையின் ஒரு பகுதியாக தேசிய மற்றும் மாவட்ட மட்டத்திலான புள்ளிவிபரவியற் சுருக்கங்கள், ஊடக அறிக்கைகள், மற்றும் மனித உரிமை நிறுவனங்களிலிருந்தான அறிக்கைகள் உட்பட பொருத்தமான துணைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டன. இம்மூலங்களிலிருந்தான தகவல்கள் இம்மாவட்டத்தின் குடித்தொகை மற்றும் சமூக பொருளாதாரம் தொடர்பான பின்னணியை வழங்குகின்றன. இது மேலும் தெரிவு செய்யப்பட்ட 6 நிகழ்வுகளையும் சந்தர்ப்பங்களுடன் இணைந்து புரிந்து கொள்ளவும் ஆய்வுக் குழுவினருக்கு உதவியது. இம்முரண்பாடுகள் மற்றும் சமுதாய முரண்பாடுகளிற்கு காட்டிய துலங்கள்களினை ஆராய்வதிலும் இத்துணைத் தரவுகள் உட்கொண்டுவரப்பட்டன.

## முதலாவது பகிர்ந்து கொள்ளல் செயலமர்வு

முதலாவது பகிர்ந்து கொள்ளும் செயலமர்வு பின்வரும் குறிக்கோள்களுடன் நடாத்தப்பட்டது.

## மாதிரி கட்டமைப்பு

அட்டவணை 2.7 மாதிரி கட்டமைப்பு

| முரண்பாட்டு நிகழ்வு | பதிலளிப்பாளர்கள் | மாதிரி |
|---|---|---|
| 1. நாகவில்லு - முச்சக்கர வண்டி தரிப்பிடம் | சிங்கள முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள்<br>முஸ்லிம் முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள்<br>பள்ளி நிர்வாகக் குழு<br>சமுக நிறுவன பிரதிநிதி<br>முந்தல்பிரதேச செயலர் | 1 முக்கிய குழு கலந்துரையாடல்<br>1 முக்கிய குழு கலந்துரையாடல்<br>1 முக்கிய நபர் நேர்காணல<br>1 முக்கிய நபர் நேர்காணல்<br>1 முக்கிய நபர் நேர்காணல் |
| 2. பாலாவி நிலம் | பௌத்த மதகுரு<br>நில உரிமையாளர்<br>கோவில் நிர்வாகக் குழு (தாயக்க சபாவ)<br>நிலத்தைக் கொள்வனவு செய்த IDPகள்<br>பள்ளி நிர்வாகத் தலைவர் (சமாதான ஆணைக்குழு)<br>முஸ்லிம் வியாபாரி | 1 முக்கிய நபர் நேர்காணல்<br>1 முக்கிய நபர் நேர்காணல்<br>1 முக்கிய குழு கலந்துரையாடல்<br>2 தனி நபர் நேர்காணல்கள்<br>1 முக்கிய நபர் நேர்காணல<br>1 தனி நபர் நேர்காணல |
| 3. சிரிமாபுர அடக்கஸ்தலம் | முஸ்லிம் சமூகம்<br>கத்தோலிக்க சமூகம்<br>பௌத்த சமூகம் | 3 தனி நபர் நேர்காணல்கள்<br>3 தனி நபர் நேர்காணல்கள்<br>3 தனி நபர் நேர்காணல்கள் |
| 4. நுரைச்சோலை மருத்துவ சகாய நிலையம் | கிராம அபிவிருத்தி தாபனம்<br>NGO பிரதிநிதி<br>உள்ளூர் முஸ்லிம் சமூகம்<br>உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்கள்<br>சுகாதார மருத்துவ அதிகாரி (MOH) | 1 முக்கிய நபர் நேர்காணல்<br>1 முக்கிய நபர் நேர்காணல்<br>3 தனி நபர் நேர்காணல்கள்<br>3 தனி நபர் நேர்காணல்கள்<br>1 முக்கிய நபர் நேர்காணல் |
| 5. கடற்றொழில் வனாதவில்லு | எலுவன்குலம் மீனவர்<br>கங்கைவாடி மீனவர்<br>சேரக்குலிய மீனவர்<br>பிரதேச சபைத் தலைவர் | 1 முக்கிய குழு கலந்துரையாடல்<br>1 முக்கிய குழு கலந்துரையாடல்<br>1 முக்கிய குழு கலந்துரையாடல்<br>1 முக்கிய நபர் நேர்காணல் |
| 6. உடப்பு கோவில் - தேவாலய நிலம் | கோவில் ஐயர்<br>கோவில் நிர்வாகிகள்<br>தேவாலய மதகுரு<br>தேவாலய நிர்வாகிகள் | 1 முக்கிய நபர் நேர்காணல்<br>1 முக்கிய குழு கலந்துரையாடல்<br>1 முக்கிய நபர் நேர்காணல்<br>1 முக்கிய குழு கலந்துரையாடல் |

- ஆய்வின் பங்குதாரர்களுடன் நிறுவன மட்டத்திலான பதிலளிப்பாளர்களுடன் கண்டு பிடித்த உண்மைகளை பகிர்ந்து கொள்ளுதல்.
- ஆரம்ப பதிலளிப்பாளர்களிடமிருந்து பின்னூட்டல்களைப் பெற்று ஆரம்ப ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளை மேலும் செம்மைப்படுத்துதல்.
- இவ்வறிவினை உள்ளூர் அபிவிருத்தி நிறுவனங்களின் குறிப்புப் புத்தகங்களில் இடம்பெறச் செய்தல்.

செயலமர்வின் முடிவில் பங்குபற்றியவர்கள் பிரதான ஆராய்ச்சியை முழுமைப்படுத்தக் கூடிய மேலதிக ஆய்வுகளுக்குரிய பிரதேசங்களையும் விடயங்களையும் முன்வைத்தனர். பொதுவான இயல்புகளுள் பலம் வாய்ந்ததாக அரசியல் பலம் எடுத்துரைக்கப்பட்டதுடன் குறிப்பாக புத்தளம் மாவட்டத்துடன் தொடர்பாக இடம்பெயர்வு போக்கின் வரலாற்றுப் பின்னணி ஆராயப்பட வேண்டும் எனவும் கருத்துரைக்கப்பட்டது. மேலும் முரண்பாடு மற்றும் பிணக்குகளின் சிக்கல்களுக்கு, தாக்கங்களுக்கு ஏனையோரிலும் வேறுபட்ட விதங்களில் முகம்கொடுத்த 3 பலவீனமான குழுக்கள் விஷேட குழுக்களாக இனங்காணப்பட்டன.

## மேலதிக ஆய்வுகள்

ஆரம்ப நிலை ஆய்வுகளின் முடிவுகளிலான முதலாவது பகிர்ந்து கொள்ளல் செயலமர்வு புத்தளத்தில் இடம்பெற்ற போது பின்வரும் விடயப் பரப்புகள் மேலதிக ஆய்வுக்காக பங்காளர்களால்

முன்வைக்கப்பட்டன. பிரதான ஆய்வின் முடிவுகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் மேலதிக ஆய்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எமது ஆய்வுடனிணைந்த சக நிறுவனமான வினிவித நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது. மேலதிக ஆய்வுக்குட்படுத்தப்பட்ட தலைப்புக்களாவன :

- அரசியல் பலம்
- புத்தளத்தில் ஒரு வரலாற்று காலத் தொடருடனான இடம் பெயர்வின் போக்கு
- பாதிப்புறு நிலையிலுள்ள குழுக்கள்
  - பெண்களால் தலைமை தாங்கப்படும் குடும்பங்கள்.
  - பருவகாலத்துடன் இடம் பெயருவதில் ஈடுபட்டுள்ள பாரம்பரிய மீனவர்கள்.
  - வெளிநாட்டுக்கு இடம்பெயர்ந்த தாய்மார்களும் அவர்களால் குடும்பங்களில் ஏற்பட்ட தாக்கங்களும்.

மேலதிக ஆய்வுகளுக்கான மாதிரி மற்றும் சாதனங்கள் வினிவித நிறுவனத்தின் ஆலோசனைகளுடன் வறுமை ஆராய்ச்சி மையத்தினால் விருத்தி செய்யப்பட்டன. மேலும் வினிவித நிறுவன உதவி ஆராய்ச்சியாளர்களுக்கு ஆய்வுச் சாதனங்கள் மற்றும் செய்முறைகளிலான ஒரு குறுகிய கால பயிற்சியும் வழங்கப்பட்டது.

மேலதிக ஆய்வின் தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்விற்கு வினிவித நிறுவனம் பொறுப்பாகும்.

## இரண்டாவது பகிர்ந்து கொள்ளல் செயலமர்வு

இச்செயலமர்வின் குறிக்கோள்களாவன :

- ஆய்வினால் கண்டறியப்பட்ட உண்மைகளின் தன்மையை முன்னேற்றுதல்.
- மாவட்டத்தினுள் உள்ள நேரடியான பங்காளர்களுக்கு மேலதிகமாக பெருமளவிலான மக்கள் கூட்டத்துடன் கண்டறியப்பட்ட உண்மைகளைப் பகிர்ந்து கொள்ளல்.

இச்செயலமர்வானது கூடிய பங்காளர்களை ஒன்று திரட்டி மாவட்ட மட்டத்திலான பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டதுடன் முன்னர் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்காத பல பாத்திரங்களை ஒன்று சேர்த்தது. இது இச்செயற்திட்டத்தின் தரத்தைப் பேணவும் உதவியது.

இச்செயலமர்வின் போது பெறப்பட்ட சில கருத்துக்கள் ஆய்வுக் குழுவினர் உருவாக்கியிருந்த சில ஆரம்ப கருத்துக்களை செயற்திட்டத்துடன் முன்னெடுத்துச் செல்வதற்கு சவாலாக அமைந்தன. குறிப்பாக பயிற்சி பட்டறைகளின் ஒப்பீட்டளவான வினைத்திறனற்ற தன்மை உள்ளூர் பங்காளர்களால் குறிப்பிடப்பட்டது. இது செயற்திட்டத்தின் இறுதிப் பகுதிகளை மீள் மதிப்பீடு செய்வதை தூண்டியது. இதனால் பொதுவான பயிற்சிகளிலிருந்து விலகி எளிய தொடர்பாடல் மற்றும் திறமைகள் பகிரப்படல் பயிற்சிகளுக்குச் செல்லத் தூண்டியது.

## 3. முக்கிய பதங்கள்

### *முரண்பாடு*

ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட சிக்கலான சமூக சூழலில் முரண்பாடு நிலவியது. சமாதானத்தை உருவாக்குதல், சமாதானத்தைப் பேணுதல் எனும் இரட்டை விடயங்களை ஆராய்வதற்கு இப்பரந்த சூழலிலிருந்து முரண்பாட்டுச் சம்பவங்கள், சந்தர்ப்பங்கள் தெரிவு செய்யப்பட்டன.

முரண்பாடு என்பது பொதுவாக ஒவ்வாத நோக்கங்கள் உள்ள அல்லது உள்ளதாக நினைக்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவினரிடையேயான உறவாக வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது (Working with Conflict, 2000). இவ்வரைவிலக்கணத்தின் படி முரண்பாடு என்பது ஒவ்வாத குறிக்கோள்களின் அடிப்படையிலமைந்தது என்பதை ஏற்றுக் கொள்வதற்கு அனுமதிக்கிறது. தற்போதைய ஆய்வில் ஏதோ ஒரு மட்டத்திற்கு தீர்க்கப்பட்ட முரண்பாடுகள் இவ்வொவ்வாத தன்மை பற்றிய தோற்றம் நேரடியாக, முடிவாக செயற்படுத்தப்பட்டவையாகும்.

முரண்பாடு என்பது ஒரே வளங்களுக்காக இரு பிரிவினர் போட்டியிடும் சமூக சூழ்நிலையெனவும் வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது (வலன்ஸ்டீன், 2002). இவ்வாய்வானது எளிய இரு பிரிவினரை சம்பந்தப்படுத்திய வரைவிலக்கணத்தின் சிக்கற்தன்மையை சுட்டுவதில் பங்களிப்புச் செய்கிறது. ஆய்வுக்குரிய சம்பவங்கள் முரண்பாடுகளின் அடிப்படை பொதுவாக வளங்களுக்கான போட்டி என கூறுகின்றன. இருந்தாலும் இரு பிரிவினரிடையான இப்போட்டியானது இனம் மதம் போன்ற ஏனைய சமூக சச்சரவுகளுக்குரிய விடயங்களுடன் இணைந்தே வழமையாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் இரு பிரிவினரிடையேயான உண்மையான போட்டி நிலையை விளக்குவதை மற்றும் அதைத் தீர்த்து வைப்பதைக் கடினமாக்குகிறது.

முரண்பாடு என்பது கட்டாயமாக எதிர்மறையாக இருக்க வேண்டும் என்பதில்லை. இது சிலவேளை தீங்கு பயக்கக் கூடிய மற்றும் விரோதமான சமூக உறவுகளை நன்மையானதாக மாற்றுவதற்கான வாய்ப்பினையும் வழங்குகிறது. இது முரண்பாட்டிற்குரிய பிரிவினர் மற்றும் அதற்கு வெளியே உள்ளோர் சமூக சூழ்நிலைகளை மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றனர் என்பதில் தங்கியுள்ளது. வலன்ஸ்டீனும் இக்கருத்துடன் போட்டிகளால் இல்லையெனின் ஒவ்வாத இரசனைகளால் ஏற்படும் முரண்பாடுகளிலிருந்து நன்மையான சமூக மாற்றங்கள் தோன்றுகின்றன (2002) எனக் கூறி உடன்படுகிறார். புத்தளத்தில் ஏற்பட்ட முரண்பாட்டுச் சம்பவங்களும் பரபரப்புகளுக்கு இட்டுச் சென்ற சமூக சூழ்நிலைகளை முன்னேற்றுவதற்கு இவ்வாறான பல வாய்ப்புகளை வெளிக்காட்டியுள்ளன. எனினும் எந்தவொரு வாய்ப்பும் நேரான ஒரு மாற்றத்த ஏற்படுத்தும் விதத்தில் பயன்படுத்தப்படவில்லை.

### ***துலங்கல் / மறுமொழி***

முரன்பாட்டினை விளக்குவதற்கு பல சக்திவாய்ந்த அணுகுமுறைகளும் அதனை தோற்றுவிக்கின்ற நிபந்தனைகளும் / நிலைமைகளும் உள்ளன. பல்வேறு கட்டங்களில் முரண்பாடு நிர்வகிக்கப்பட்டுள்ளது. முரண்பாட்டினை நோக்கும் பல்வேறு வழிகளை விளக்குவதற்காக முரண்பாட்டினைத் தவிர்த்தல், முரண்பாட்டினை முடிவுக்குக் கொண்டுவரல், முரண்பாட்டை முகாமைத்துவம் செய்தல், முரண்பாட்டினைத் தீர்த்தல் மற்றும் மோதல் நிலை மாற்றம். என்பன உள்ளடங்களாக பல்வேறு வித்தியாசமான பதங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

முரண்பாட்டினைத் தவிர்த்தல் என்பது முரண்பாடுகள் வன்முறைகளாக வெளிப்படுவதை தடுக்கும் நோக்கத்தைக் குறிக்கிறது. வன்முறைகளுடனான நடத்தைகள் ஒரு சமாதானமான உடன்படிக்கையுடன் முடிவடைகின்ற போது இது முரண்பாட்டினை முடிவுக்கக் கொண்டு வரல் எனப்படும். ஆனால் முரண்பாட்டில் ஈடுபட்டுள்ள பிரிவினரிடம் நல்ல நடத்தை மாற்றங்களைத்

தூண்டுவதன் மூலம் எதிர்கால வன்முறைகள் மட்டுப்படுத்தப்பட்டு தவிர்க்கப்படுவதானது முரண்பாட்டு முகாமைத்துவம் எனப்படும். முரண்பாட்டினைத் தவிர்த்தல் என்பது மற்றுமொரு கட்டமாகும். இங்கு முரண்பாட்டுக்கான காரணங்கள் எடுத்துக் காட்டப்பட்டு புதிய நிலையான உறவுகள் பகைமை கொண்டுள்ள இரு பிரிவினரிடையேயும் உருவாக்கப்படுகின்றன. இறுதியாக மோதல் நிலை மாற்றம் என்பது முரண்பாட்டுக்கான பரந்த சமூக மற்றும் அரசியல் மூலங்களை விலக்கி யுத்தத்தால் ஏற்படுகின்ற எதிரான தாக்கங்களை நேரான சமூக மற்றும் அரசியல் மாற்றங்களாக உருவாக்கும் முயற்சிகளாகும் (Working with Conflict, 2000).

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 6 முரண்பாட்டு நிகழ்வுகளிலும் முரண்பாடுகளைத் தவிர்த்தல், முடிவுக்குக் கொண்டுவரல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் தீர்த்தல், அணுகுமுறைகள் பல்வேறு பிரிவினர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வறிக்கையின் முரண்பாட்டின் பகுப்பாய்வு மற்றும் முரண்பாட்டினைத் தீர்த்தல் எனும் பகுதியில் இன்னும் விபரமான ஆய்வு தொடரும். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட முரண்பாடுகள் போதுமான பரந்த, செறிவான வீச்சைக் கொண்டிராமையால் முரண்பாட்டு நிகழ்வுகள் மற்றும் துலங்கள்களில் மோதல் நிலை மாற்றங்களை அவதானிக்க முடியவில்லை.

## ஆய்வுக்குரிய வரைவிலக்கணங்கள்

இவ்வாய்வின் நோக்கங்களில் முரண்பாட்டிற்குரிய வரைவிலக்கணமானது சமூக வன்முறைகளாக உருமாறக் கூடிய சமூகத்தின் அழுத்தமான / பரபரப்பான சூழ்நிலைகள் எனத்தரப்படுகிறது. இது ஆய்வுக்குரிய சம்பவங்களைத் தெரிவு செய்வதற்கு சூழ்நிலைகளின் வீச்சைத் தீர்மானிக்கின்றது. ஆய்வானது அழுத்தம், போட்டி, மற்றும் அதிருப்தி நிறைந்த சமூக சூழலினுள் நடாத்தப்பட்டது. ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட முரண்பாட்டு சம்பவங்கள் மட்டுமே புத்தளம் பிரதேசத்தில் காணப்படும் முரண்பாடுகளல்ல. ஆனால் தெரிவு செய்யப்பட்ட சம்பவங்கள் ஆய்வின் சூழலிலான மறுமொழிகள் / துலங்கள்கள் பொதுவான மற்றும் முரண்பாட்டிற்கு பங்களிப்பு செய்த விடயங்கள் மற்றும் முரண்பாடுகள் தீர்க்கப்பட்ட கட்டங்கள் என்பவற்றைப் பிரதிபலிக்கக் கூடியவையாக இருந்தன.

பதற்றத்தைக் குறைப்பதற்கு, சமூக வன்முறைகளைக் குறைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளே துலங்கல்களாகும். மோதல் நிலை மாற்றம் தவிர்ந்த முரண்பாட்டிலான எல்லா மட்ட செயற்பாடுகளையும் இத்துலங்களிற்கான வரைவிலக்கணம் காட்டுகின்றது. முரண்பாட்டில் ஈடுபட்டுள்ளோருக்கு ஆற்றல் இருந்தாலும் மோதல் நிலை மாற்றங்கள் ஏற்படுவதற்கு அவர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்கள் அனுமதி அளித்தாலும் அவர்கள் மோதல் நிலை மாற்றங்களை ஏற்படுத்துவதில் விருப்பமுடன் இருக்கிறார்கள் என்பதில் சந்தேகம் உள்ளது. இவ்வாறான கட்டுப்பாடுகளின் விளைவாக ஆய்வுச் சம்பவங்களிலான துலங்கள்கள் குறைவாக மோதல் நிலை மாற்றங்களில் அவதானிக்கப்பட்டதுடன் இவை கூடுதலாக முரண்பாடு தீர்த்தல், முரண்பாடு தவிர்த்தல், மற்றும் முரண்பாடு முகாமைத்துவம் செய்தல் என்பனவாகவே அவதானிக்கப்பட்டன.

இவ்விரு வரைவிலக்கணங்களும் ஆய்வின் ஆரம்ப கட்டங்களில் நடந்த முக்கிய நபர் மற்றும் நிறுவன நேர்காணல்களின் போது உருவாக்கப்பட்டன. இவ்வரைவிலக்கணங்கள் ஆய்வின் 6 முரண்பாட்டு நிகழ்வுகளை அடையாளம் காணவும் மேலதிக ஆராய்ச்சிகளுக்கான துலங்கள்களைப் பெற்றுக் கொள்வதற்குமாக ஆய்வினை இலகுவாக்கியது.

## 4. முரண்பாட்டு சூழல்

ஆய்வானது புத்தளத்தின் ஆறு பிரதான முரண்பாட்டு நிகழ்வுகளை ஆராய்ந்தது. இவை அவற்றின் வேறுபட்ட தன்மை, அவை தீர்க்கப்படுகின்ற கட்டங்கள் மற்றும் ஈடுபட்டுள்ள பிரிவினர்களை மையப்படுத்தி தெரிவு செய்யப்பட்டன. இம்முரண்பாடுகள் மற்றும் அவற்றுக்கான துலங்கள்கள் சமுதாய மட்டத்திலான தீர்வுகளை அடையாளம் கண்டு கொண்டு அவற்றை இதே போன்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ள ஏனைய சமுதாயங்களுக்கு உதவும் ஆய்வின் நோக்கத்தை அடைவதற்காக திட்டமிடப்படுகின்றன. இந்த 6 முரண்பாட்டு நிகழ்வுகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்த, ஒரு மறைமுகமான முரண்பாட்டு சிக்கல் நிலைக்கு பங்களிப்பு செய்துள்ள பல சிக்கலான சமூக அழுத்தங்கள் காணப்பட்ட, ஒரு பரந்த சூழலுள் நடைபெற்றவையாகும்.

சிரிமாபுரத்தின் அடக்கஸ்தலத்தில் பங்குரிமை கொண்டுள்ள மூன்று சமூகங்களிடையுமான மோதல்களில் ஒன்றானது குறித்த அம்மூன்று சமூகங்களிடையேயும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தக் கூடியதாக காணப்பட்டது. இச்சம்பவத்தில் உள்வாரியாக இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் வருகை வரைக்கும் பௌத்தர்களும், இந்துக்களுமே இவ்வடக்கஸ்தலத்தைப் பயன்படுத்தினர். உள்வாரியாக இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் தமக்கும் அங்கு ஒரு பகுதியைக் கேட்ட போது ஏனைய இரு பிரிவினரிடமிருந்தும் தோன்றிய உடன்பாடின்மையால் சில சமூக அழுத்தங்கள் தோன்றின.

நுரைச்சோலை மருத்துவ சகாய சிகிச்சை நிலையத்திலான சம்பவமானது ஒரு பள்ளிவாயிலின் ஒரு பகுதி மருத்துவ சகாய சிகிச்சை நிலையமாகப் பயன்படுத்துவதுடன் தொடர்புபட்டது. பள்ளிவாயல் நிர்வாகக் குழுவானது பள்ளிவாயில் மருத்துவ சகாய சிகிச்சை நிலையமாகப் பயன்படுத்தப்படும் போது அங்கு வரும் சனத்திரளினால் பள்ளிவாயிலின் செயற்பாடுகளிற்கு (தொழுகைகள் மாத்திரமன்றி பாடசாலை சிறுவர்களுக்கு குர்ஆன் கற்பிக்கும் வகுப்புக்கள் - மத்ரஸா) பெரும் இடையூறு விளைவிப்பதாக கருதியது. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையின் பின்னர் மருத்துவ சிகிச்சை நிலையத்தை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை எதிர்பார்க்காத அளவு அதிகரித்தமையால் பள்ளிவாயில் கட்டிடத்தை இதற்காக பயன்படுத்துவது பெரும் பிரச்சினையாக அமைந்தது.

> "ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இப்பிரதேசத்தில் சனம் நிரம்பி வழிகின்றது. மக்கள் தொழுகைக்காகவும் குர்ஆன் வகுப்புகளுக்காகவும் மருத்துவ சிகிச்சைக்காகவும் ஒரே இடத்திற்கு வருகின்றனர். பெண்கள் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றனர். இப்பிரச்சினை உள்ளூர் மக்களுக்கும், உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்குமிடையான ஒரு பிரச்சினையாக நோக்கப்படுவதால் இது சில சமூக அழுத்தங்களுக்கு இட்டுச் சென்றுள்ளது."
>
> (பெண், 32, நுரைச்சோலை)

பள்ளிவாயில் கட்டிடங்களுள் மருத்துவ சிகிச்சை நிலையம் அமைந்திருந்தால் குர்ஆன் வகுப்புக்கள் நடத்தப்படுவதில் மாத்திரமன்றி மருத்துவ நிலையத்திற்கு வரும் நோயாளர்களும் கஷ்டங்களை அனுபவித்தனர் மருத்துவ நிலையத்திற்கு வரும் மக்கள் பள்ளிவாயில் கட்டிடங்களை சனத்திரல் நிறைந்ததாக்குவதுடன் அதனை அசுத்தம் செய்கின்றனர். ஒரு வணக்கஸ்தலம் சுத்தமானதாக, ஒழுங்கானதாக வைக்கப்பட வேண்டும் என்ற விதத்தில் இது பள்ளிவாயில் நிர்வாகக் குழுவிற்கு ஒரு பிரச்சினையாய் இருந்தது. இதே போல் பெண்களுக்காகவும், கர்ப்பிணித் தாய்மார்களுக்காகவுமே மருத்துவ நிலையம் அமைக்கப்பட்டது. எனினும் பள்ளிவாயிலில் சனம் நிரம்பி இருக்கும் போது மருத்துவ நிலையத்திற்கு வருவது அவர்களுக்கு கடினமாகவே இருந்தது.

நாகவில்லுப் பிரதேசத்தில் தம் வாகனங்களை நிறுத்துவதற்கான இடத்திற்காக சிங்கள, முஸ்லிம் முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் இரு பிரிவினரிடையே மோதல் ஒன்று உருவானது. இம்மோதல் வன்முறையாக மாறி அப்பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

"உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் பள்ளிவாயிலின் முன்பாக முச்சக்கர வண்டிகளை நிறுத்துவதற்கு சிங்களவர்களுக்கு அனுமதிப்பதில்லை. இது உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கும் உள்ளூர் மக்களுக்குமிடையே முரண்பாடுகளைத் தோற்றுவித்ததுடன் இம்மோதல் சில நாட்களுக்குத் தொடர்ந்தது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பொலிஸார் தலையிட்டனர். அவர்கள் இப்பிரதேசத்தில் புதிய ஒரு பொலிஸ் சோதனைச் சாவடியை அமைத்தனர். இக்குழுக்களிடையே இன்னும் அழுத்தங்கள் உள்ளன."

(முக்கிய நபர் நேர்காணல், பெண், நாகவில்லு)

உடப்புச் சம்பவத்தில் ஒரு இந்துக் கோயில் கட்டப்பட்டிருந்த காணியின் மீது இந்துக்களுக்கும், கத்தோலிக்கர்களுக்குமிடையில் மோதல் ஏற்பட்டது. இரு சமூகங்களதும் இளைஞர்களின் இம்மோதல்களால் அப்பிரதேசத்தின் சமாதானமும் அமைதியும் பெரிதும் குலைக்கப்பட்டன.

"பூனபிடிக் கிராமம் எமது கிராமத்திலிருந்து 1/2 km தூரத்தில் உள்ளதாகும். சில இளைஞர்கள் எமது கிராமத்திற்கு வந்து மதுவும் அருந்தினர். அவர்கள் எங்களைத் தாக்கி மோசமான வார்த்தைகளால் வைதனர். ஆனால் நாம் அவர்களுடன் வன்முறைக்குச் செல்லவில்லை."

(குழுக்கலந்துரையாடல், உடப்பு)

வனாதவில்லுப் பிரதேசத்திலான பெரிய மோதல் கங்கைவாடி மற்றும் சேரக்குலிய சமுதாயங்களிடையே மீன் பிடித்தலிலான ஒரு போட்டி காரணமாக விளைவானதாகும். ஏனைய இரு சமுதாயங்களினளவு இல்லாவிடினும் எலுவன்குலம் சமுதாயமும் இதில் ஈடுபட்டிருந்தது.

"இக்காலத்தில் கங்கைவாடி பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் இப்பிரதேசத்திற்கு (எலுவன்குலம்) இடம் பெயர்ந்திருக்கவில்லை. இப்பிரதேசம் (கங்கைவாடி) மீன்பிடித்தலிற்கு பயனுள்ளதாக இருந்தமையால் ஏறத்தாழ *50* சிங்கள, கிறிஸ்தவ குடும்பங்கள் சேரக்கலிய பிரதேசத்திற்கு குடிபெயர்ந்தனர். எனவே இப்போது அவர்கள் இம்முஸ்லிம் மக்களுக்கு அவர்கள் அதே பிரதேசத்திலிருந்து வந்தவர்களாயினும் மீன் பிடிக்க அனுமதிப்பதில்லை."

(முக்கிய நபர் நேர்காணல், ஆண், வனாதவில்லு)

## 4.1 முரண்பாட்டு சம்பவங்கள் - சிறு சம்பவக் கற்கைகள்.

விபரமாக ஆராயப்பட்ட முரண்பாடுகள் சம்பவக்கற்கைகளாக கீழே முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான மிகவும் விபரமான ஆராய்ச்சிகள் இறுதிப் பகுப்பாய்வான புத்தளத்தில் சமாதானம் எவ்வாறு உருவாக்கப்படுகிறது மற்றும் பேனப்படுகிறது என்பதன் ஆழ்ந்த விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கு கை கொடுக்கின்றது.

### *வனாதவில்லு*

வனாதவில்லுப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள முறையே சேரக்குலிய, கங்கைவாடி, மற்றும் எலுவன்குலம் பிரதேசங்களிலிருந்து மூன்று சமூக மக்களிடையே இம்முரண்பாடு நிலவியது. இப்பிரதேச மக்கள் தம் பிரதான வருவாயாக மீன் பிடித்தொழிலையே நம்பியிருப்பதுடன் குறித்த பிரதேசத்திலுள்ள ஒரு பிரிவினர் மற்றைய பிரிவினரை மீன் பிடிப்பதிலிருந்தும் தடுப்பதன் விளைவாகவே இம்முரண்பாடு தோன்றின.

கங்கைவாடி பிரதேசமானது வில்பத்துவை எல்லையாகக் கொண்டுள்ள உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள ஒரு பாதுகாப்பு இராணுவச் சோதனைச் சாவடியைக் கொண்டுள்ள ஒரு சிக்கலான பிரதேசமாகவும் அதே நேரம் பிரதான மீன்பிடித் தளமொன்றாகவும் கருதப்படுகிறது. இப்பகுதி *1986* இல் தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு (PLOTE) எனும் தமிழ் ஆயுதக்

குழுவினரால் தாக்கப்பட்டதுடன் 1993, 1994, 1995 மற்றும் 1996 களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பாலும் தாக்குதல்களுக்குள்ளாகியுள்ளது. தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பின் தாக்குதலைத் தொடர்ந்தும் நாடோடி மீனவர்களாக வாழ்ந்த சில மக்கள் சேரக்குலிய மற்றும் எலுவன்குலம் பகுதிகளுக்கு குடிபெயர்ந்தனர். 1996 இலான தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலே 17 கிராமத்தவர்களைக் கொன்றதுடனான மிகவும் மோசமான தாக்குதலாகும்.

சேரக்குலிய மற்றும் எலுவன்குலம் பிரதேச மீனவர்கள் அவர்கள் 1986இல் கங்கைவாடி பிரதேசத்திலிருந்து வெளியேறும் வரை கங்கைவாடி பிரதேசத்தை அண்டியுள்ள கடற்பரப்பில் மீன்பிடித்து வந்தனர். இப்பிரதேசம் அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படாத பகுதிகளுக்கு மிக அண்மித்திருந்ததால் மீன்பிடித்தலானது மு.ப. 5 மணியிலிருந்து பி.ப. 6 மணி வரையே அனுமதிக்கப்பட்டிருந்தது. தற்போது சிலாபத்தை சொந்த இடமாகக் கொண்ட 50 - 60 வரையான சிங்கள, கிறிஸ்தவ குடும்பங்கள் கங்கைவாடி சமூகத்தில் உள்ளனர். ஆண், பெண் இருபாலாருமே ஜீவனோபாயத்திற்காக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சேரக்குலிய பிரதேசமும் சிலாபத்திலிருந்து குடிபெயர்ந்த சிங்களக் கிறிஸ்தவர்கள் பல தலைமுறைகளாக செறிவாக வாழும் பிரதேசமாகும். இவர்களும் மீன்பிடியைத் தமது ஜீவனோபாயத் தொழிலாக கொண்டவர்களாவர். எலுவன்குலத்தில் பிரதானமாக முஸ்லிம்களே வாழ்கின்றனர். இவர்களின் பிரதான ஜீவனோபாயத் தொழிலாக மீன்பிடித் தொழில் இருப்பதுடன் சில விவசாயச் செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றனர்.

மக்கள் 1996 இற்கு முன்னர் கங்கைவாடிப் பிரதேசத்தில் வாழ்ந்தவாறு கங்கைவாடியை அண்டியுள்ள கடல் பிரதேசத்தில் மீன்பிடித்து வந்தனர். மீனவப் பருவ காலங்களில் சேரக்குலிய மீனவர்கள் கங்கைவாடிப் பகுதியில் வசிக்கின்றனர். ஆனால் சேரக்குலிய பிரதேச மீனவர்களின் பிள்ளைகள் சேரக்குலியவிலேயே படிக்கின்றனர். பாடசாலை விடுமுறைகளில் பிள்ளைகளும் ஏனைய குடும்பத்தவர்களும் இம்மீனவர்களுடன் கங்கைவாடியில் சந்திக்கின்றனர். 1996 இலான தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குத்லினைத் தொடர்ந்து இவர்களுக்குப் போதுமான அளவு பாதுகாப்பினைத் தர முடியாது என இராணுவம் கூறியது. இதனால் மக்கள் கங்கைவாடியிலிருந்து மீண்டும் சேரக்குலியவிற்குச் சென்றனர்.

சேரக்குலிய சமூகத்தவர்களின் தகவல்களின் படி அவர்கள் களப்பில் இறால் பிடித்தலில் ஈடுபட்டிருந்தார்களென்றும் அதே நேரம் கங்கைவாடிய மக்கள் கலாஓயாவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்றும் கூறப்படுகின்றது. சேரக்குலிய மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலைத் தொடர்ந்து வெளியேறிய பின்னர் அவர்கள் கடலில் மீன் பிடிக்கத் தொடங்கினர். சேரக்குலிய மீனவர்களே பெரிய அளவிலான மீன் பிடித்தலில் ஈடுபட்டுள்ளாரென்றும் இவர்களே மீன் அல்லது இறால் குடித்தொகையைச் சுரண்டி முரண்பாடுகளை உருவாக்குகின்றனர் என்றும் கங்கைவாடிய மக்கள் கூறுகின்றனர்.

கங்கைவாடியை அன்மித்துள்ள களப்பினைப் பயன்படுத்த சேரக்குலிய மக்கள் மறுக்கப்பட்டுள்ளதால் அவர்கள் தமது மீன்பிடித் தொழிலுக்காக கங்கைவாடியிலிருந்து 15 மைல் தூரமாகவுள்ள கடற்பரப்பிற்கு பயணம் செய்ய வேண்டியுள்ளனர். சேரக்குலியவுக்கு அண்மையில் அரசாங்கம் படகுகளிலிருந்து சரக்குகளை இறக்குவதற்கான சிறிய படகுத் துறைகளை (Jetty) அமைத்துக் கொடுத்திருந்தாலும் அவர்கள் அதனைப் பயன்படுத்துவதில்லை. சேரக்குலிய மக்கள் குறித்த சில பருவங்களில் மாத்திரம் மீன் பிடித்தலிற்கு வருவதாகவும் ஒரு முறை அவர்கள் கங்கைவாடி மீனவர்களின் மீன்பிடி வலைகளை சேதப்படுத்தியதாகவும் கங்கைவாடி மக்கள் கூறுகின்றனர். இதற்குப் பதிலாக கங்கைவாடி மக்கள் சேரக்குலிய மக்களை கங்கைவாடியை அண்டியுள்ள களப்பில் மீன் பிடிக்க விடுவதற்கு மறுத்தனர்.

**தீர்வு முயற்சிகள்**

2006ம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் திகதி புத்தளத்தில் ஒன்று கூடிய பொலிஸ், இராணுவத் தலைவர்கள், கடற்படை அதிகாரிகள், மற்றும் உதவி அரசாங்க அதிபருடன் இணைந்து


அரசாங்க அதிபரால் ஒரு தீர்வு வழங்கப்பட்டது. கடற்கரைப் பிரதேசத்தில் படகுகள் வலைகள் வைத்திருப்பதற்கும் மீன் வலை இறக்குவதற்கும் மற்றும் மொத்த வியாபாரச் சந்தையாகவும் பயன்படுத்திய ஒரு 4 ஏக்கர் இடம் காணப்பட்டது. அரசாங்க அதிபரும் ஏனைய மக்களும் இந்நான்கு ஏக்கர் நிலத்தை படகு, வலைகள் வைப்பதற்காகவும், மீன் வலைகள் இறக்குவதற்கும் மற்றும் மொத்த வியாபார சந்தைகளை நடத்துவதற்காகவும் மூன்று சமூகத்திற்கும் பின்வரும் விதத்தில் பகிர்ந்து கொடுக்க தீர்மானித்தது.

1. எலுவண்குலம் - 1 ஏக்கர்
2. கங்கைவாடி - 2 ஏக்கர்
3. சேரக்குலிய - 1 ஏக்கர்

ஆனால் அரசியல் தலையீடுகள் காரணமாக இத்தீர்மானம் இன்னும் அமுலாக்கப்படவில்லை. எல்லாப் பிரிவினருக்கும் பலமான அரசியல் தொடர்புகள் இருந்தன. கங்கைவாடி மக்கள் இராணுவம் மற்றும் கடற்படை அதிகாரிகளின் பெரிய ஆதரவுடனும் அவர்களது பிரதேசத்திலிருந்து உள்ள ஒரு பாராளுமன்ற அங்கத்தவரின் ஆதரவாலும் அரசாங்க அதிபரின் இத்தீர்மானத்தை அமுல் படுத்துவதற்கு தடையாக நின்றனர்.

அண்மையில் 2007 இல் மூன்று சமூகப் பிரதிநிதிகள், உதவி அரசாங்க அதிபர் மற்றும் அரசாங்க அதிபரிடையில் ஒரு சந்திப்பு நிகழ்ந்தது. இங்கு 2006 இல் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மீள் அமுலாக்கம் செய்வதற்கு உடன்பாடு எய்தப்பட்டது. ஆனால் இன்னும் இவ்வுடன்படிக்கை உண்மையிலேயே செயற்படுத்தப்படுமா என்பது பற்றி சந்தேகம் நிலவுகின்றது.

**2006 இல் அரசாங்க அதிபருடனான உடன்படிக்கையைக் காட்டும் திட்டப்படம்.**



## நாகவில்லு முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள்

இம்மோதலானது நாகவில்லுப் பிரதேசத்தில் முச்சக்கரவண்டித் தரிப்பிடத்திற்கான போட்டி காரணமாக சிங்கள, முஸ்லிம் முச்சக்கரவண்டி ஓட்டுநர்களிடையே 2006 இல் ஏற்பட்ட எதிர்ப்புடன் ஆரம்பித்தது. முஸ்லிம் முச்சக்கர வண்டிகளின் தரிப்பிடம் இப்பிரதேசத்தின் பள்ளிவாயிலின் மதிலிற்கு எதிர்புறமாக பிரதான பாதையிலிருந்து 75 - 100m தூரத்தில் ஒரு சிறிய பாதையில் இருந்தது. சிங்கள முச்சக்கர வண்டி ஓட்டுநர்களின் தரிப்பிடமானது பிரதான பாதைக்கு எதிர்புறமாக பள்ளிவாயிலிலிருந்து ஏறத்தாழ 50m தூரத்திலிருந்தது. சிங்கள ஓட்டுநர்கள் பயன்படுத்திய பகுதியில் ஒரு கடை கட்டப்பட்டதன் காரணமாக அவர்கள் பிரதேச சபையிடம் (அல்லது நகரசபை) வேறு இடத்தைக் கோரினர். இக்கோரிக்கைக்குப் பதிலாக சிங்கள ஓட்டுநர்களுக்கு பிரதான பாதையில் பள்ளிவாயிலுக்கு முன்பாக ஓர் இடம் வழங்கப்பட்டது.

இவ்விடம் வழங்கப்பட்ட பின்னர் சிங்கள ஓட்டுநர்கள் பக்கப்பாதைக்குக் குறுக்காக பள்ளிவாயிலுக்கு சமாந்தரமாகச் சென்ற ஒரு வாய்க்காலினை கொன்கிரீட் கற்கள் கொண்டு மூடவும், அந்நிலத்தை வண்டிகளை நிறுத்துவதற்கு ஏற்றதாக மட்டம் செய்யவும் திட்டமிட்டனர் இவ்விடம் பள்ளிவாயிலுக்கு மிகவும் அண்மையிலுள்ளதாகவும் இது வைத்தியசாலைகள், பாடசாலைகள் அல்லது மத புனிதஸ்தலங்களிற்கு அருகாமையில் வாகனம் நிறுத்துவதற்கு அனுமதி இல்லை என்ற சட்டத்தினை மீறுவதாகவும் கருதியதால் இத்திட்டத்திற்கு முஸ்லிம் ஓட்டுனர்கள் எதிர்புத் தெரிவித்தனர்.[2] இதற்கு மறுமொழியாக சிங்கள ஓட்டுநர்களும் 100m தூரத்துள் இரண்டு முச்சக்கரவண்டி தரிப்பிடங்கள் தொழிற்பட முடியாதென்று ஒரு சட்டம் உள்ளதாகவும் அவர்களது தற்போதைய இடமும் அடுத்த பிரிவினரின் தரிப்பிடமும் 75m தூரத்திலேயே உள்ளதாகவும் கூறி வாதிட்டனர். இதன் விளைவாக இரு பிரிவினரும் சட்டத்தை மறுத்து முரண்பட்டனர்.

முஸ்லிம் பிரிவினர் பள்ளிவாயில் போன்ற ஒரு வழிபாட்டுத் தலம் மதிக்கப்பட வேண்டியிருப்பதால் பள்ளிவாயிலுக்கு அண்மையிலான ஒரு பகுதியைத் தரிப்பிடமாகப் பயன்படுத்த முடியாது என கூறினர். மேலும் அடுத்த பிரிவினரும் அதே பிரதேசத்தில் வாகனம் நிறுத்தும் போது ஏற்படும் சத்தமும், பயன்படுத்தும் இசையும், வழிபாட்டுச் செயற்பாடுகளிற்கு தொந்தரவு செய்யும் என்று கூறினர்.

முஸ்லிம் முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் சிங்கள பிரிவினர் அவர்களின் பிரதேசத்திற்கு வந்தது சிங்கள ஓட்டுநர்கள் பயன்படுத்திய வாகன நிறுத்துமிடத்தில் ஒரு பொலிஸ் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டதால் என கருதுகின்றனர். ஆனால் சில பதிலளிப்பாளர்களிடமிருந்து கிடைத்த தகவல்கள் இச்சோதனைச் சாவடிகள் இரு முச்சக்கர வண்டி குழுவினரிடையேயும் முரண்பாடுகள் தோன்றியதன் பிற்பாடே அமைக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். இம்முரண்பாட்டிற்குப் பதிலாக முச்சக்கரவண்டி ஓட்டுனர்கள் அவர்களது தரிப்பிடம் பிரதேச சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் அதற்கு பணம் செலுத்தி வருவதாகவும் வாதிடுகின்றனர்.

அரசியல் வாதிகள், பிரதேச சபை அங்கத்தவர்கள் மற்றும் பொலிஸார் என இம்முரண்பாட்டை முடிவுக்குக் கொண்டுவருவதில் ஈடுபட்டவர்கள் யாரும் வெற்றியடையவில்லை. முஸ்லிம் முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் அருகிலுள்ள பஸ் தரிப்பிடத்திற்கு அண்மையிலுள்ள ஒரு இடம் தம்மிரு பிரிவினருக்கும் தமது முச்சக்கரவண்டிகளை நிறுத்துவதற்கு போதுமானளவு இருப்பதால் அவ்விடத்தை தமக்கு வழங்குவதையே ஒரு தீர்வாகக் காண்கின்றனர். முரண்பாடு இன்னும் தொடர்கிறது.

2. 1951 இன் மோட்டார் வாகனச் சட்டம்

## நுரைச்சோலை மருத்துவ சகாய நிலையம்.

ஒரு முரண்பாடு அது மோதலாக முன்னமே தடுக்கப்பட்ட ஒரு தலையீட்டுச் செயன்முறைக்கு நுரைச்சோலை கர்ப்பிணித் தாய்மார்களுக்கான மருத்துவ சகாய நிலைய சம்பவம் ஒரு சிறந்த உதாரணமாகும். இம்மருத்துவ சகாய நிலையமானது வெள்ளிக்கிழமைகளில் பள்ளிவாயிலின் ஒரு கட்டிடத்தில் நடைபெற்று வந்தது. இதே கட்டடம் பாடசாலைச் சிறுவர்கள் குர்ஆனைப் படிக்கும் வகுப்புக்களான மத்ரஸாக்கள் நடக்கும் இடமாகவும் இருந்தது. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் இப்பிரதேசத்திற்கு வருவதற்கு முன்னர் இந்நிலையம் உள்ளூர் முஸ்லிம் பெண்களால் பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையுடன் இம்மருத்துவ சகாய நிலையத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை எதிர்பார்க்காதளவு உயர்ந்தது. சனம் நிறம்பி வழிந்த மருத்துவ நிலையம் குர்ஆன் வகுப்புகளுக்கும், அதே போல் பள்ளிவாயிலில் வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகைக்கும் இடையூறு விளைவித்தது. இவ்வாறான பிரச்சினைகள் காரணமாக உள்ளூர் முஸ்லிம் சமூகத்தினர் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களை மனக்கசப்புடன் நோக்கினர்.

இஸ்லாமிய நிவாரண செயற்குழு (ISRC) உடன் இணைந்த பல முஸ்லிம் பெண்கள் அமைப்புக்கள் ISRC இடம் ஒரு தீர்வு வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர். சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய இராச்சிய அமெரிக்க ஸ்தாபனத்திலிருந்து (USAID) கிடைத்த பண உதவியைக் கொண்டு ஒரு புதிய மருத்துவ சகாய நிலையத்தை கட்டுவதற்கு கெயார் இன்டெர்நெஷனல் (Care International) நிறுவனம் உதவி வழங்கியது. ISRC பள்ளிவாயிலுக்கு சொந்தமான இடப்பரப்பொன்றில் முற்றிலும் வேறாக்கப்பட்ட ஒரு கட்டடத்தை மருத்துவ சகாய நிலையத்திற்காக கட்டி இத்திட்டத்தை அமுல்படுத்தியது. அதிலிருந்து இம்மருத்துவ சகாய நிலையத்தின் சேவையானது மூன்று இன மக்களையும் கொண்ட 5 கிராமத்தவர்களுக்காக (பள்ளிவாசல் துறை, சம்மட்டிவாடி, வேள்ளாங்கேணி, பெரியசண்டிக் கிராமம், மற்றும் அம்மத்தோட்டடம்) விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இன்று இம்மருத்துவ சகாய நிலையமானது அதனைப் பயன்படுத்தும் பலரால் சமாதானத்தின் ஒரு சின்னமாகக் கருதப்படுகிறது.

## பாலாவி நிலம்

பாலாவியின் முரண்பாட்டு நிலையானது ஒரு துண்டு நிலத்தின் மீது கோரப்படுகின்ற உரிமை தொடர்பாக எழுந்ததாகும். இப்பிரச்சினை சிக்கலானதுடன் ஆய்வு நடத்தப்பட்ட காலப்பகுதியிலும் தீர்க்கப்படாமலேயே இருந்தது. இதில் பல பிரிவினர் சம்பந்தப்பட்டுள்ளமையும் சில பிரிவினர் முறையான நீதித் திட்டத்தின் உதவியை நாடியமையும் இப்பிரச்சினையின் சிக்கற்தன்மையைக் கூட்டியது.

பிரச்சினைக்குரிய நிலமானது 29 ஏக்கராகும். இது மூன்று முஸ்லிம் வியாபாரிகளால் சேர்ந்து வாங்கப்பட்டு பின்னர் சிறு சிறு காணித்துண்டுகளாக பிரித்து உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கு விற்கப்பட்டது.

மொத்தமாக 29 ஏக்கர் காணியானது முஸ்லிம் நில உரிமையாளர்களால் கூட்டாக வாங்கப்பட்டு பின்னர் 170 - 215 வரையிலான மக்களுக்கு விற்கப்பட்டது. இந்நிலமானது 10 பேர்சஸ் (Perches) காணித்துண்டுகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் 15,000/- வீதம் விற்கப்பட்டு அக்காணிகளின் உரிமைப் பத்திரங்கள் வாங்கியவர்களுக்கே வழங்கப்பட்டன.

இந்நிலத்தின் உரிமையானது பல வழக்கு விசாரனைகளுக்கு சவாலாக உள்ளது. அண்மையில் உயர் நீதிமன்றம் இவ்வழக்கை முஸ்லிம் காணி உரிமையாளர்களுக்கு ஆதரவாக தீர்ப்பாக்கியது. இருந்தாலும் பிரிதொரு பிரிவினரான பௌத்த விகாரை மற்றும் தாயக சபாவ (விகாரை

நிர்வாகக் குழு) என்பன மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முதலில் கொடுக்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக மேன் முறையீடு செய்துள்ளது.

தாயக சபாவயிற்கு ஏற்ப சமன்த மன்டலய (Samantha Mandalaya) எனும் உள்ளக மத்தியஸ்தக அமைப்பொன்றினாலும் அப்பிரதேசத்தில் செயற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களாலும் இம்முரண்பாட்டை முடிவுக்குக் கொண்டு வர பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இருந்தாலும் முஸ்லிம் காணி உரிமையாளர்கள் இவ்வாறான மாற்று வழிமுறைகளில் பெரிய விருப்பம் எதுவும் காட்டவில்லை.

முஸ்லிம் காணி உரிமையாளர்களிற்கேற்ப பிரச்சினைக்குரிய இந்நிலமானது புத்தளத்திலிருந்து குடி வந்த ஒரு முஸ்லிமுக்கு சொந்தமாக இருந்தது. 1996 இல் தற்போதைய உரிமையாளர்கள் அதனை வாங்கினர். 10 ¾ , 2, 2, 2, மற்றும் 12 ஏக்கர் கொண்ட 5 வெவ்வேறு காணித் துண்டுகளின் உரிமைப் பத்திரங்களை இவர்கள் வைத்திருந்தனர்.

விகாரையால் உரிமை கோரி பிரச்சினைப்படுத்தப்படுகின்ற 2 ஏக்கர் காணிக்கு மேலதிகமாக சில காணிப் பகுதிகளும் வழக்குகளில் உள்ளன.

தொக்கியுள்ள சட்டப் பிரச்சினையால் இந்நிலத்தை யாராலும் பயன்படுத்த முடியாதுள்ளது. காணியின் உரிமையாளர்கள் இக்காணியில் நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலையானது உயர்நீதிமன்றத் தீர்ப்பின் பின் உடனடியாக கட்டப்பட்டது என்று கூறுகின்றனர். இதற்கும் மேலாக பிரச்சினைக்குரிய காணிப்பகுதியை அடுத்துள்ள பகுதியின் உரிமையாளரும் எவ்வித கட்டட வேலைகளையும் முன்னெடுக்கக் கூடாதென அச்சுறுத்தல்கள் பெற்றுள்ளதுடன் இதற்குப் பிற்பாடாக அவரின் கடை மற்றும் வியாபாரப் பொருட்களும் தாக்கப்பட்டு ஏறத்தாழ ரூபா 2,00,000/= வரை சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வும் விகாரையுடனான பிரச்சினையுடன் தொடர்புபட்டதென காணி உரிமையாளர் குற்றஞ் சாற்றுகின்றார். விகாரையின் பிரதான மத குருவை அப்பிரதேசத்தில் தமது சொந்த அரசியல் நிகழ்ச்சி, முயற்சிகளை முன் வைக்க முயற்சிக்கின்ற ஒரு இளைஞர் குழுவின் செல்வாக்கின் கீழ் உள்ளதாகவே முஸ்லிம் காணி உரிமையாளர்கள் காண்கின்றனர். மேலும் அவர்கள் அதிகரித்து வரும் முஸ்லிம் சனத்தொகையினர் தொடர்பாக இப்பிரதேச சிங்கள மக்கள் சிரத்தையுடனிருப்பதாயும் எனவே மேலும் மேலும் முஸ்லிம் மக்கள் இப்பிரதேசத்தில் குடியேறுவதைத் தடுக்கவே இம்மோதலென்றும் நினைக்கின்றனர்.

தாயக சபாவ (Dhayaka Sabhawa) இன் படி இந்நிலமானது காணி மீள் சீரமைப்பு ஆணைக்குழு (LRC) இற்கு சொந்தமாயிருந்தாலும் ஏறத்தாழ 15 வருடங்களுக்கு முன்பு இக்குழு அங்கத்தவர்களால் 20 ஏக்கர் நிலப்பரப்பில் இவ்விகாரை கட்டப்பட்டதாகவும் அந்நாளிலிருந்தே இந்நிலத்தை அவர்கள் பயன்படுத்துவதாகவும் கூறப்படுகிறது. முதலில் கிராமத்தவர்கள் இந்நிலம் LRC இற்கு சொந்தமானதென நினைத்து சட்டவிரோதமான முறையில் ஆக்கிரமித்து விகாரையைக் கட்டினர். அவர்களின் பிரதானமான விவாதமானது அவர்கள் 15 வருடங்களாக பயன்படுத்தும் நிலத்தை முஸ்லிம் காணி உரிமையாளர்கள் அதே நிலத்திற்கான உரிமைப்பத்திரங்களுடன் தமது உரிமையை நிரூபிக்க முயற்சிக்கின்றனர் என்பதாகும். விகாரை நிர்வாகக் குழுவிலிருந்த பதிலளிப்பாளர்கள் ஒரு முஸ்லிம் நபர் சட்ட விரோதமான உரிமைப் பத்திரங்களை LRC இற்காக தயாரித்து அதனை மேலே கூறப்பட்ட மூவருக்கும் விற்றதாகவும் பின்னர் 215 பகுதிகளாக பிரிக்கப்பட்டு யாழ்ப்பானத்திலிருந்து வருகின்ற உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கு விற்கப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டுகிறது.

மாவட்ட செயலாளர், பிரதேச சபைப் பொலிஸ் மற்றும் சில அரசியல் வாதிகளும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஈடுபட்டுள்ளனா. ஆனால் தற்போது இவ்விடயம் நீதித்துறையிடம் உள்ளது.

### சிறிமாபுரம் அடக்கஸ்தலம்

ஏறத்தாழ 2 - 3 தசாப்தங்களாக சிறிமாபுர கிராமமானது பிரதானமாக சிங்களக் கிறிஸ்தவர்களையும் பௌதர்களையுமே கொண்டிருந்தது. 2002 இலிருந்து இதனை அண்டிய பகுதியில் உள்வாரியாக இடம்பெயர்ந்த முஸ்லிம் சமூகம் குடியேறியது. ஆரம்பத்தில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகைக்கு அங்கிருந்த குடிமக்களால் சில எதிர்ப்புக்கள் காட்டப்பட்டாலும் பின்னர் இரண்டு பிரிவினர்களிடையேயுமான ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டதன் பின்னர் இந்நிலை இலகுவானது. இது பிரதானமாக வீடு கட்டுவதற்கான கடன் வசதிகள் உள்வாரியாக இடம்பெயர்ந்து குடியேறிய மக்களுக்கு மட்டுமன்றி உள்ளூர் சமூகத்திலும் உள்ள தேவையான மக்களுக்கும் ஒதுக்கப்பட்டமையால் ஏற்பட்டதாகும்.

அப்போது வேறொரு கிராமத்திலிருந்து ஒரு திட்டமிட்ட குழுவானது சில உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வீடுகளிற்கு நெருப்பு வைத்த சம்பவமொன்று நடந்தது. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களில் சிலர் இந்நடவடிக்கை அரசியல் தூண்டுதல்களால் நடந்தது என நம்புகின்றனர். இந்நிகழ்வு அடக்கஸ்தலம் பிரச்சினையிலிருந்து வேறுபட்டதொன்றாகும்.

2 ஏக்கர் பரப்பான தொகுதியொன்று பௌத்தர்களாலும், கத்தோலிக்கர்களாலும், அடக்கஸ்தலமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையின் பின்னர் அவர்களால் பயன்படுத்தப்பட்டு வந்த முஸ்லிம் அடக்கஸ்தலம் இதற்கான கணிசமான அளவு தூரத்தில் அமைந்திருந்ததால் இங்கு இடத்திற்கு போட்டி ஏற்பட்டது. இப்போட்டியானது சமூகத்தில் பரபரப்புக்களை உருவாக்கியதுடன் ஒரு நோயாளியான மனிதனின் குடும்பத்தின் சவத்திற்கு சிறிமாபுர அடக்கஸ்தலத்தில் புதைப்பதற்கான ஒரு இடம் அனுமதிக்கப்படாமையால் ஒரு சவ ஊர்வலத்தை பிளவுபடுத்துமளவுக்கு கூடியது.

இப்பரபரப்பை அடுத்து சமூகத்தலைவர்கள் மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனமான கிராம அபிவிருத்தி தாபனத்தின் (RDF) பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. USAID இன் நிதியுதவியுடன் கிராம அபிவிருத்தி தாபனமானது கத்தோலிக்கர்கள், பௌத்தர்கள் மற்றும் முஸ்லிம்கள் வேறுவேறாகப் பிரிக்கப்பட்ட பகுதிகளை அடக்கஸ்தலமாக வழங்குவதற்கு உதவியது. கிராம அபிவிருத்தி தாபனமானது சிறிமாபுர சமூகத்தவர்களிடையே சமாதானமும், நல்லுறவும், நிலவ வேண்டும். என்ற எண்ணத்துடன் இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தது.

### உடப்பு

இம்மோதலானது பாரிப்படு கிராமத்திலிருந்தான இரு குழுக்களிடையே ஏற்பட்டதாகும். இதற்கான உடனடிக்காரணமானது ஒரு கோவிலை அண்டியுள்ள, சரியான சட்ட ஆதாரங்கள் இல்லாத, உரிமையாளர் பற்றித் தெளிவில்லாத ஒரு காணித்துண்டில் கத்தோலிக்கச் சமூகத்தைச் சேர்ந்த சில இளைஞர்கள் ஒரு சிலையைக் கட்ட எடுத்த முயற்சியாகும்.

பாரிப்படு கிராமமானது கடந்த 2 தசாப்தங்களாக பிரதானமாக உடப்பு மாவட்ட செயலாளர் பிரிவிலிருந்து வந்த தமிழ் இந்துக்கள் செறிந்து வாழும் பிரதேசமாகும். பாரிப்படு கிராம மக்கள் அவர்களது கிரமத்தை சூழவுள்ள கடலில் மீன் பிடித்தலில் ஈடுபட்டிருக்கும் அதே நேரம் உடப்புவிலிருந்து மக்கள் இதே பிரதேசத்திற்கு மீன் பிடிக்க வருகின்றனர். முன்னர் பாரிப்படுவில் 10 குடும்பங்களே இருந்தன. பின்னர் உடப்புவிலிருந்து மக்கள் பாரிப்படுவின் வெற்று நிலங்களில் வசிப்பதற்காக பாரிப்படுவினை நோக்கிக் குடிபெயர்ந்தனர். ஆய்வு நடத்தப்படும் போது பாரிப்படுவில் 150 - 160 வரையான இந்து தமிழ் மக்கள் வாழ்கின்றனர்.

பாரிப்படு மக்களின் தகவல்களிலிருந்து காணி மீள் சீரமைத்தல் ஆணைக்குழுவிற்கு (LRC) சொந்தமான நிலத்தில் அவர்கள் கோயில் (இந்துக்களின் வழிபாட்டுத் தலம்) கட்டியதாகவும் பின்னர் 2007ல் இந்நிலம் தேவாலயத்தின் பூமி (கோயில் நிலம்) என

அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 2002 வரை கோவிலானது ஓலைகளால் வேயப்பட்ட கூரைகளுடனான எளிய ஒரு அமைப்பிலிருந்தது. பின்னர் மக்கள் அதனை ஒரு நிலையான உறுதியான கட்டடமாக கட்டத் தொடங்கினர். சனத் தொகை விரைவாக வளர அதிகமான மக்கள் வணக்க வழிபாடுகளிற்காக கோவிலைப் பயன்படுத்துகின்றனர்.

பாரிப்படு பிரதேசத்தை அண்டியுள்ள பூனப்பிடிய கிராமம் கடலிலிருந்து சிறிது உள்நோக்கி அமைந்துள்ளது. பிரதேசத்திலுள்ள கடலோரமாகச் செல்லும் பாதையில் அமைந்துள்ள பிரதான கிரிஸ்தவ தேவாலயத்துக்கு திரும்பும் திருப்பத்திலேயே கோவில் நிற்கின்றது.

பூனாப்பிடிய கிராம சமூகம் கோவில் கட்டப்பட்டுள்ள நிலமானது அவர்களுக்கு சொந்தமானதென ஏற்கனவே பிரிக்கப்பட்டு விட்டதாகவும் பாரிப்படு கிராம மக்களின் கோரிக்கையின் பின்னர் அதனை அவர்களுக்குக் கொடுத்து அதில் அவர்கள் ஒரு முன் பள்ளியைக் கட்டுவதற்கு தாம் அனுமதியளித்ததாயும் கூறுகின்றனர். அவர்கள் பாரிப்படு மக்கள் முன்பள்ளி கட்டுவதற்கு பதிலாக ஓலைகளால் வேயப்பட்ட ஒரு கோவிலைக் கட்டிக் கொண்டதாகவும் குற்றம் சாட்டுகின்றனர். இப்போது பூனாப்பிட்டிய மக்களின் ஒரு குழுவினர் பிரதான கிறிஸ்தவ தேவாலயத்திற்குத் திரும்ப வேண்டியதை அடையாளம் காட்டுவதற்காக இக்குறித்த இடத்தில் ஒரு சிலை அல்லது சிலுவை நிறுவுவதற்கு வேண்டுமென்கின்றனர்.

சிலை அல்லது சிலுவை (சுருவம்) கட்டுவதற்காக கோவில் உள்ள இடத்தை அளப்பதற்கு பூனாபிட்டிய மக்கள் முயன்ற போதே பிரச்சினை தோன்றியது. பாரிப்படு மக்கள் கோவில் நிலத்தை அளப்பதை முறையீடு செய்வதற்காக பொலிசாரை வரவழைத்தனர்.

இப்பிணக்கினைத் தீர்ப்பதற்கு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. உடப்புக் கோவிலின் ஐயர் இப்பிணக்கினைத் தீர்ப்பதற்காக தனிநபரொருவர் பூனப்பிட்டிய மக்கள் தமது தேவாலயத்திற்காக ஒரு சிலையை நிறுவுவதற்குத் தனது சொந்த நிலத்தை அளித்ததுடன் இம்மோதல் முடிவுக்குக் கொண்டுவந்ததெனக் கருதுகின்றனர்.

உதவி அரசாங்க அதிபர் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயன்றதாக இரு பிரிவினருமே தெரிவிக்கின்றனர். சிலையைக் கட்டுவதற்காக 10′ X 10′ பருமனுள்ள காணித்துண்டொன்று வேறாக்கப்பட்டு வழங்கப்பட்டதாகவும் ஆனால் பூனப்பிட்டிய பிரிவினர் அதனை மறுத்ததாகவும் பாரிப்பாடு மக்கள் கூறுகின்றனர். அவர்களின் கூற்றுப்படி பாரிப்பாடு மக்களுடனான பேச்சுவார்த்தைகளின் பின் அவர்கள் 10′ X 10′ பரப்பினைக் கொடுப்பதற்கு இணங்கினாலும் கிறிஸ்தவ பாதிரியாருடனான (மதகுரு) சந்திப்பின் பின் அத்தீர்மானத்தில் அதிருப்தி கொண்டதுடன் பிரச்சினைக்குரிய காணியின் அரைப்பங்கு வேண்டுமென்றும் கூறினர். அவர்கள் இதனை உதவி அரசாங்க அதிபருடன் மேலும் விவாதித்து அரைவாசியைப் பெற்றுக் கொள்வதற்கான இணக்கத்தைப் பெற்றாலும் கோவில் திருவிழாக் காலங்களில் கோவிலைச் சுற்றி போதுமானளவு இடம் வேண்டுமென்று அடுத்த பிரிவினர் இதனை எதிர்த்தனர்.

## 4.2 ஒன்றுடனொன்று இணைந்த நிகழ்வுகளும் பங்களிப்பு செய்யும் காரணிகளும்

புத்தளம் மாவட்டத்தின் சமூகங்களிடையான முரண்பாடானது பொதுவாக ஒன்றுடனொன்று இணைந்ததாகும். மேலும் ஓர் இடத்தில் உருவாகும் அழுத்த நிலையானது/பரபரப்பானது இன்னுமொரு இடத்தில் பரபரப்பையும் மோதலையும் பற்றவைக்கிறது. ஆய்வுக்கு தெரிவு செய்யப்பட்ட ஆறு முரண்பாட்டு நிகழ்வுகளாக ஆய்வின் முக்கிய நோக்கத்தினுள் அடக்கப்படாத ஆனால் ஆய்வுச் செயற்பாடுகளின் போது உருவாகி வெடித்த பல சம்பவங்களில் ஒரு இடத்தின் நிகழ்வு வேறொரு இடத்தின் அமைதியைக் குலைக்குமியல்பு அவதானிக்கப்பட்டது.

"2001 இல் மதுரன்குளிப் பிரதேசத்தில் சிங்கள மற்றும் முஸ்லிம்களுக்கிடையில் இனக்கலவரம் ஏற்பட்டது. அவர்கள் இங்கும் மதுரன்குளியில் நடப்பதைப் போன்றே கலவரத்தை ஆரம்பித்தனர்"

(மகளிர் சங்கம், சிறிமாபுர அடக்கஸ்தலச் சம்பவம்)

சில வேளைகளில் ஒரு அல்லது இரண்டு சமூகங்களின் அங்கத்தவர்களின் தனிப்பட்ட செயல்களின் விளைவாக சமூகங்களிடையான மோதல்கள் ஏற்படுகின்றன.

"கும்புக்கடவல மாவட்ட செயலாளர் பிரிவிலுள்ள ஜயராஜபுர கிராமத்தில் மந்தை களவில் ஈடுபட்டுள்ள குடிப்பழக்கமுள்ள ஒரு குழு இருக்கின்றது. 2001 இல் இவர்களிடையில் மதுரன்குளியில் நடந்த ஒரு சன்டையில் இவர்களின் தலைவரின் கை வெட்டப்பட்டு விட்டது. இது மதுரன்குளியில் முஸ்லிம் சிங்கள மக்களிடையேயான ஒரு மோதலுக்கு இட்டுச்சென்றது. இதன் போது சிங்களவர்களுக்கு சொந்தமான பல கடைகளும் சில முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகளும் அழிக்கப்பட்டன"

(ஆண், 41, சிறிமாபுரம்)

அடையாளம் காரணமான வித்தியாசங்கள் வன்முறைகளுக்கும் வளங்களிடையான போட்டி காரணமாக பொதுவாக வெளிப்படுத்தப்படாத முரண்பாடுகளுக்கும் இட்டுச் சென்றன. இப்பொருளாதார பிரச்சினைகள் அரசியல் பிரச்சினைகளாக, இனத்துவேஷங்களாக மாறி சமுதாயங்களிடையேயான அழுத்தங்களாக வெளிக்காட்டப்பட்டன.

"2001இற்கு முன்பு மருத்துவ சகாய நிலையம் பள்ளிவாயிலின் கட்டிடமொன்றிலேயே நடந்தது. பள்ளிவாயில் குர்ஆன் வகுப்புகளாக மத்தரஸாக்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. மருத்துவ சகாய நிலையமானது வெள்ளிக்கிழமைகளில் மாத்திரமே திறந்திருப்பதுடன் இந்நாளிலேயே முஸ்லிம்களின் விஷேட தொழுகையான ஜும்ஆ தொழுகையும் நடைபெறுகிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தொழுகைக்கென்றும் குர்ஆன் வகுப்புகளுக்கும் அதே நேரம் மருத்துவ சகாய நிலையத்திற்குமென ஒரே இடத்திற்கு மக்கள் வருவதால் பள்ளிவாயில் சன நெருக்கடி உள்ள இடமாகின்றது. குறிப்பாக பெண்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். எனவே இங்கு குறிப்பாக முஸ்லிம் மக்களிடையில் ஒரு கசப்புணர்வு இருந்தது. இப்பிரச்சினையானது உள்ளூர் சமூகத்திற்கும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்குமிடையான ஒரு பிரச்சினையாக உருவெடுத்தது."

(பெண், 32, நுரைச்சோலை)

"தம் சொந்த இடமான நீர்கொழும்பிலிருந்து குடிபெயர்ந்துள்ள 50 - 60 சிங்கள கிறிஸ்தவக் குடும்பங்கள் இங்குள்ளன. ஆண், பெண் இருபாலாரும் பிரதானமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் பிரதானமாக தம் குடும்பங்களை மீன் பிடித் தொழிலைக் கொண்டே நடத்தி வருகின்றனர். இங்கு எலவன்குலம், சேரக்குலிய தவிர்ந்த வெளியாட்களும் கூட மீன்பிடிப்பதுண்டு. இவ்வாகள் அரசாங்க அதிபர் இறுதித் தீர்வொன்று தந்த பின்னரும் எலவன்குலம் மக்களை மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பதில்லை."

(முக்கிய நபர் நேர்காணல், ஆண், வனாதவில்லு)

சில முரண்பாட்டு நிகழ்வுகள் அரசியல் நிகழ்ச்சிகள் மற்றும் மாவட்ட மட்ட, தேசிய மட்டத்திலான மாற்றங்கள் காரணமாக தூண்டப்பட்டு தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. வனாதவில்லுப் பிரதேசத்தில் கங்கைவாடிப் பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு அருகிலிருந்த கடற்படை முகாமிலான தாக்குதலைத் தொடர்ந்து இப்பிரதேசத்திலிருந்து வெளியேற வேண்டி வந்தது. அவர்கள் வெளியேறியதும் கடற்படையுடன் கூடிய உறவுகளைக் கொண்டுள்ள மற்றுமொரு சமுதாயம் அங்கு வந்து இவர்களது மீன் பிடித்தளங்களை அபகரித்துக் கொண்டது. இந்நிலைமை வளங்கள்

தொடர்பான ஒரு மோதலாக மாறி தேசிய மட்டத்திலான அரசியல் குறுக்கீடுகளுடன் பெரியளவான முரண்பாடுகளிற்கு இட்டுச் சென்றது.

> "கங்கைவாடிப் பிரதேசத்தில் ஒரு கடற்படை முகாம் இருந்தது. 1980ல் தமிழீழ விடுதலை அமைப்பு இம்முகாமைத் தாக்கியது. அந்நேரம் அங்கு வாழ்ந்த எமது முஸ்லிம்கள் அப்பிரதேசத்தை விட்டும் இப்பிரதேசத்திற்கு குடிபெயர்ந்தனர்."
>
> (முக்கிய நபர் நேர்காணல், ஆண், வனாதவில்லு)

ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ள ஆறு முரண்பாட்டு நிகழ்வுகளையும் தவிர மாவட்டத்திலுள்ள வேறு சில மோதல்கள் வன்முறைகளாக மாறி சமூகங்களிடையே பரபரப்புகளை உருவாக்கி, அவை பிளவுபட்டு உருமாறி, கடுமையான நிலைகளை அடைந்துள்ளன.

> "2006 இல் பொலிசார் வாகனத்தை நிறுத்துமாறு பணித்தும் அவர்கள் நிறுத்தாமல் சென்ற சம்பவமொன்றுள்ளது. பின் பொலிசார் வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இச்சம்பவம் அப்பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மக்கள் பாதைகளை மூடியும், டயர்களை எரித்தும் மேலும் பாதையில் செல்லும் வாகனங்கள், பாதசாரிகளை இடையூறு செய்தும் இச்செயலுக்கு எதிர்ப்புக் காட்டினர்"
>
> "சில மாதங்களின் பின்னர் இப்பிரதசத்தில் அழுகிய நிலையில் ஒரு உடல் கண்டெடுக்கப்பட்டது. அது முழுதும் அழுகியிருந்ததால் உடலை அடையாளம் காண முடியவில்லை. பொலிசாராலும் கூட கொலையாளியைக் கண்டுபிடிக்க முடியவில்லை."
>
> (முக்கிய நபர் நேர்காணல், பெண், நாகவில்லு)

புத்தளமானது இவ்வாறான வன்முறைகள் தொடர்பான ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. இன்னும் ஒரு சம்பவம் 1979 இல் முந்தல் பிரதேச செயலகப் பிரிவில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் குடியேறத் தொடங்கிய போது நடந்தது. சிங்கள மக்களால் வெளிக்காட்டப்பட்ட எதிர்ப்பானது சீமெந்துத் தொழிற்சாலையில் வைத்து முஸ்லிம்களின் குழுவொன்றினால் சிங்களத் தொழிலாளி ஒருவர் முரட்டுத்தனமாகத் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து வன்முறையாக வெடித்தது.

> "1976 இல் சீமெந்துத் தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருந்த சிங்களவர்கள் முஸ்லிம்களால் தாக்கப்பட்டதால் சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையில் மோதல் ஏற்படட்டது. அம்முஸ்லிம்கள் அந்நிலங்களிலிருந்து விரட்டப்பட்டனர்."
>
> (ஆண், 62, சிறிமாபுரம்)

இவ்வாறாக ஒவ்வொரு நேரமும் பரபரப்புக்கள் தோன்றி நீண்ட காலத்திற்குத் தொடர்கின்ற, பல போட்டி போடும் அழுத்தங்களும் இணைப்புக்களும் சூழ்நிலையை பெரிய அளவிலான வகுப்புக்கலவர வன்முறைகளுக்குள்ளாக்குகின்ற ஒரு சிக்கலான சூழலிலேயே ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. புத்தளத்தின் சார்பளவான வெற்றியானது சமூக அடிப்படையிலான செயற்பாடுகள் மூலம் இவ்வாறான அழுத்தங்கள் வன்முறைகள் வெடிப்பதைக் கட்டுப்படுத்துவதில் உள்ளது.

## 4.3 முரண்பாட்டிற்கான துலங்கல்கள்

அடக்கஸ்தலம் தொடர்பான விடயத்தில்; கிராம அபிவிருத்தித் தாபனம் (RDF) எனும் அரச சார்பற்ற நிறுவனமானது ஒரு நடுநிலையான பாத்திரமாக தலையிட்டது. இதைத் தொடர்ந்து முரண்பட்ட பிரிவினர் அடக்கஸ்தலத்தை உள்வாரியாக இடம்பெயர்ந்த முஸ்லிம்களுடன் பகிர்ந்து கொள்ள உடன்பட்டனர். மூன்றாம் தரப்பினரின் தலையீடு இச்சூழ்நிலையை சுமூகமாக்குவதில்

வெற்றியளித்தது. ஆனால் இதைப் போன்ற ஏனைய முரண்பாட்டு நிகழ்வுகளிலும் எப்போதும் இம்முறை வெற்றியளிப்பதில்லை.

> "இங்கு பெரிய பிரச்சினைகள் ஏதுமில்லை. ஆனால் மரணங்கள் (ஜனாஸா) ஏற்படும் போது பெரிய பிரச்சினைக்குள்ளாகின்றோம். எமது மகள் இறந்த போதும் முஸ்லிம்களுக்கு ஒரு தனியான அடக்கஸ்தலம் இல்லாமையால் அவரைப் புதைக்க முடியவில்லை. உள்ளூர் மக்கள் இந்த அடக்கஸ்தலத்தை பயன்படுத்த எமக்கு அனுமதிக்கவில்லை. நாம் RDF இன் தலைவர் அவர்களை அணுகினோம். அங்கு ஒரு சமாதான ஒன்று கூடல் இடம்பெற்றது. முஸ்லிம், சிங்கள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்நிகழ்வில் ஈடுபட அவர்களிடையில் முரண்பாடு தோன்றியது. இறுதியில் RDF இனால் பிரச்சினை தீர்க்கப்பட்டது. அவர்கள் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எமக்கு உதவினர்."
>
> (பெண், 39, சிறிமாபுரம்)

நுரைச்சோலை மருத்துவ சகாய நிலையத்திலான மோதலில் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் தாபனத்துடன் (USAID) இணைந்த இஸ்லாமிய நிவாரண செயற்குழுவின் (ISRC) தலையீட்டால் பள்ளிவாயிலுக்கு வெளியிலேயே புதிய ஒரு மருத்துவ சகாய நிலையம் அமைக்கப்பட்டது. இம்முரண்பாடுகள் பொதுவான இடம் மற்றும் வளங்களின் பகிர்விலான கஷ்டங்களின் அடிப்படையிலானதாகையால் புதிய வளங்கள் வழங்கப்பட முரண்பாட்டு சூழ்நிலைகள் விலகி சூழ்நிலைகள் மாற்றப்பட்டன.

> "இறுதியாக பள்ளிவாயிலுக்கும் ISRC இற்கும் மக்களால் முறையீடுகள் செய்யப்பட்டன. பின் ISRC பிரச்சினைகளை உணர்ந்து மருத்துவ சகாய நிலையத்தை பள்ளிவாயிலிலிருந்து வேறாக்குவதற்கு திட்டமிட்டது. இறுதியாக பள்ளிவாயிலுக்கு அண்மையில் புதிய ஒரு கட்டிடத்திற்கு அது மாற்றப்பட்டது. இச்செயற்திட்டத்திற்கு USAID நிதியுதவி அளித்தது. இதன் பின் மக்கள் பிரச்சினையின்றி இந்நிலையத்தை பயன்படுத்தனர். ஆனால் இன்னும் எமக்கு அதற்கு ஒரு வைத்தியரைப் பெற முடியவில்லை. இது பற்றி நாம் பல முறை சுகாதார மருத்துவ அதிகாரியுடன் (MOH) பேசியும் இன்னும் தீர்வு கிடைக்கவில்லை."
>
> (பெண், 32, நுரைச்சோலை)

சில முரண்பாடுகளிற்குத் துலங்களாக சமாதான ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. இவை உள்ளூர் மத மற்றும் சமூக தலைவர்களைக் கொண்டு அமைக்கப்பட்டன. இவர்கள் சம்பந்தப்பட்ட குழுக்களால் மதிக்கப்படுவதுடன் முரண்பாட்டுக்குரிய பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளனர்.

> "சமாதான ஆணைக்கழுக்களின் அங்கத்தவர்கள் எமது விடயங்கள், பிரச்சினைகள் தொடர்பான ஆலோசனைகளை பெறுவதற்கு எமக்கு சட்டத்தரணிகள், அமைச்சர்கள் மற்றும் ஏனையோருடன் தொடர்புகளை ஏற்படுத்தித் தருதல் போன்ற பல விடயங்களில் எமக்கு உதவி செய்கின்றனர்."
>
> (முக்கிய நபர் நேர்காணல், ஆண், பாலாவி)

சில நேரம் பிணக்குகளிற்கான தீர்வுகள் தெளிவற்றதாக இருப்பதுடன் ஒரு தனியாளது அல்லது குழுவினது விசேடமான சில செயல்களில் தங்கியுள்ளது. உதாரணமாக உடப்புச் சம்பவமானது நீண்ட காலப் பேச்சுவார்த்தைகளின் பின் பிரச்சினைக்குரிய ஒரு பிரிவினருக்கு தனியாள் ஒருவருக்கு சொந்தமான காணியை அவர் தர்மமாக வழங்கியதுடன் தீர்க்கப்பட்டது.

“உதவி அரசாங்க அதிபர், உடப்பு கோவில் நிர்வாக சபை, கிறிஸ்தவ தேவாலயத்தின் மதகுரு, பாரிப்படு கிராம செயற்குழு, மற்றும் அமைச்சர் போன்ற பலர் இவ்விடயத்தில் கலந்துரையாடல்களை நிகழ்த்தியும் ஒரு தீர்வினைக் கொண்டுவர முடியவில்லை”


(குழு கலந்துரைாடல் 1, உடப்பு)

“மதத் தலைவர்கள் இப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைத் தேடுவதில் ஈடுபட்டனர். ஆனால் ஒரு தனிநபர் தனது சொந்த நிலத்தை சிலையை நிறுவுவதற்கு வழங்கியதுமே இப்பிரச்சினை தீர்க்கப்பட்டது”

(முக்கிய நபர் நேர்காணல், ஆண், உடப்பு)

முரண்பாடுகளின் தீவிரத் தன்மையும் அவற்றுக்கு வழங்கப்பட்ட துலங்கள்களின் வீச்சும் ஆய்வுக்குரிய பின்னணியை வழங்குகின்றன. அவை சமூக சூழலின் சிக்கற் தன்மையையும் முரண்பாடு மற்றும் தீர்த்தல் இடையிலான தொடர்புகளையும் அறிமுகம் செய்கின்றன.

# 5. புத்தளத்தில் முரண்பாடு, மாறும் தன்மை, பங்களிப்புச் செய்யும் காரணிகள் மற்றும் பொதுவான விடயங்கள்




படம்: *5.1* **ஆய்வுக்குற்படுத்தப்பட்ட மோதல்களின்/முரண்பாடுகளின் வகைகள்**

## 5.1 மோதல்களின்/முரண்பாடுகளின் வகைகள்

ஆய்வின் போது பிரதானமாக இருவகையான மோதல்கள் அவதானிக்கப்பட்டன. அவை சமூகங்களிடையான முரண்பாடுகள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் தனியாட்களிடையான முரண்பாடுகள் என்பவையாகும். பெரும்பாலான இம்முரண்பாடுகள் ஆரம்பத்தில் வளங்களுக்கான போட்டிகளின் அடிப்டையிலானவையாகும்.

சமூகங்களிடையான முரண்பாடுகள் இரு இனங்களிடையில் இரு மதச் சமூகங்களிடையில் அல்லது வித்தியாசமான / ஒரே மாதிரியான அடையாளங்களைக் கொண்டுள்ள இரு சமுதாயங்களிடையிலானதாக இருக்கும். இரண்டாவது வகை நிறுவனங்கள் மற்றும் தனியாட்களிடையே ஏற்படும் மோதல்களாகும்.

நாகவில்லுப் பிரதேசத்தில் முச்சக்கர வண்டிகள் நிறுத்தும் இடத்திற்கான பிணக்கு முஸ்லிம் சிங்கள இனங்களிடையிலானதாகும். உடப்பு இலான மோதல் இந்துக் கோவிலுள்ள ஒரு காணியில் கத்தோலிக்க சிலையொன்றை அமைப்பதற்காக இடம் எடுப்பதற்கு கத்தோலிக்கர்களுக்கும் இந்துக்களுக்குமிடையே ஏற்பட்ட இரு வித்தியாசமான மதக் குழுக்களிடையிலானதாகும். சிறிமாபுரத்தில் பௌத்த மற்றும் கத்தோலிக்க மதக் குழுக்கள் முஸ்லிம்களுடன் அடக்கஸ்தலத்துக்கான ஒரு நிலத்துக்காக பிணக்குற்றிருந்தனர். பள்ளிவாயில் கட்டிடங்களுள் அமைந்த மருத்துவ சகாய நிலையத்தின் மீதான நுரைச்சோலையிலான முரண்பாடானது முஸ்லிம் சமூகத்திளுள்ளேயாயினும் உள்ளூர் முஸ்லிம்கள் மற்றும் உள்வாரியாக இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் என வித்தியாசமாக தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட இரு பிரிவினரிடையானதாகும்.

முரண்பாடுகள் ஒரே அடையாளத்தைக் கொண்டுள்ள மற்றும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களிடையேயும் ஏற்படலாம். உதாரணமாக வனாதவில்லு முரண்பாட்டுச் சம்பவத்துடன் ஈடுபட்டிருந்த கங்கைவாடி மற்றும் சேரக்குளிய சமூகங்களைக் கூறலாம். இவ்விரு சமூகமும்

சிங்களக் கத்தோலிக்கர்களாயிருந்த மீனவச் சமூகங்களாவர். இங்கு முரண்பாடானது ஒரு பிரிவினர் மற்றைய பிரிவினரை மீன்பிடிப் பிரதேசத்தை பயன்படுத்துவதிலிருந்தும் தடுத்ததால் ஏற்பட்டது.

பாலாவி நிலத்திற்கான மோதலானது நிறுவனங்களிடையில் மற்றும் தனியாற்களிடையான மோதலாக நோக்கப்படுகிறது. சில தனிநபர்கள் புத்தளத்திலிருந்தான உரிமையாளரிடமிருந்து நிலத்தை வாங்கி அந்நிலத்திற்கு உரிமை கோருகின்றனர். அதே நிலத்தை பௌத்த விகாரையின் நிர்வாகக் குழு இந்நபர்கள் LRC இடமிருந்து இந்நிலத்தை அபகரித்ததாகக் கூறியும் தாம் அதனை ஏறத்தாழ 12 வருடங்களாகப் பயன்படுத்துவதாகவும் கூறி அதற்கு உரிமை கோருகின்றனர். மேலும் இம்மோதல் மதங்களிடையான, இனங்களிடையான கோணத்திலும் நோக்கப்படுகிறது. நிலத்தை வாஙகியவர்களுக்கு முஸ்லிம்கள் என்றும் பௌத்த விகாரை மற்றும் நிர்வாகக் குழுவினருக்கு பௌத்தர்கள் என்றும் வழங்கப்பட்ட அடையாளமானது இம்முரண்பாட்டின் அதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்துள்ளது எனலாம்.

## 5.2. அபிவிருத்தி மற்றும் தீர்வின் பல்வேறு கட்டங்கள்

சில முரண்பாடுகள் குறுகிய காலத்துள் தீர்க்கப்பட்டு விடுகின்றன. என்றாலும் இன்னும் சில பல வருடங்களாக தொடர்ந்தும் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றமை தெளிவாகும். ஒரு முரண்பாட்டு நிலைமை தொடர்ந்தும் நிலவுவதானது பிரச்சினைக்குரிய விடயம், முரண்பாட்டின் சிக்கற் தன்மை, முரண்பாட்டின் வகை, சம்பந்தப்பட்டுள்ள வித்தியாசமான பிரிவினர் மற்றும் முரண்பாட்டினைத் தீர்ப்பதில் ஈடுபட்டுள்ள உள்ளூர் அமைப்புக்களின் ஆற்றல் என்பவற்றில் தங்கியுள்ளது.

குறுகிய காலத்திற்கு மாத்திரம் நிலவிய முரண்பாடுகள் பல நிறுவனங்களினதும் தனிநபர்களினதும் தலையீடுகளால் தீர்க்கப்பட்டன. உள்ளூர் அமைப்புக்கள் ஆற்றலுடன் / சக்திவாய்ந்ததாக உள்ள போது புதிதாக உருவாகும் பிரச்சினைகள் மற்றும் சிக்கற் தன்மை குறைந்த பிணக்குகள் அதிகக் கஷ்டமின்றி தீர்க்கப்படலாம். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட முரண்பாட்டுச் சம்பவங்கள் இவற்றில் தலையிட்ட அமைப்புக்கள் / நபர்கள் (பாத்திரங்கள்) முரண்பாட்டினைத் தீர்ப்பதற்கான ஆவலையும் இதற்கு பயன்படுத்தத் தக்கவாறு போதியளவு வளங்களையும் கொண்டிருந்ததாகக் காட்டுகின்றன. சில நிறுவனங்கள் முரண்பாட்டிற்குரிய தீர்வு தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தமையால் தலையிட்டன.

நுரைச்சோலை முரண்பாடானது ISRC இன் தலையீட்டினால் தீர்க்கப்பட்டது. ஏனைய சில முரண்பாட்டு நிகழ்வுகளுடன் ஒப்பிடும் போது இப்பிரச்சினை சிக்கற் தன்மை குறைந்ததாக இருந்ததால் இது சிறிது இலகுவாகத் தீர்க்கப்பட்டது. இம்முரண்பாட்டின் இரு குழுக்களும் உள்ளூர் முஸ்லிம்கள் மற்றும் உள்வாரியாக இடம்பெயர்ந்த முஸ்லிம்களாவர். முரண்பாட்டில் சம்பந்தப்பட்டிருந்த குழுக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தமையும் இலகுவாகத் தீர்வு ஒன்று எய்தப்பட ஏதுவானது. உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனமான ISRC, USAID உதவியுடன் இணைந்து வளங்களுக்கான சாத்தியமான முரண்பாடுகளினை அடையாளம் கண்டு அவ்வளங்களை வழங்கி முகாமைத்துவம் செய்வதற்கு முயற்சி எடுத்தது. சில சந்தர்ப்பங்களில் வளங்ள் அல்லது சேவைகள் பற்றாக்குறையால் ஏற்படும் முரண்பாடுகளிற்கு வளங்கள் வழங்குவதன் மூலம் அல்லது சேவைகளை விருத்தி செய்து கொடுப்பதன் மூலம் இப்பிரதேசத்திலுள்ள சில அபிவிருத்தி நிறுவனங்களும் தலையிட்டு தீர்வுகளை வழங்குகின்றன. உள்வாரியாக இடம்பெயர்ந்த முஸ்லிம்களால் அடக்கஸ்தலம் பயன்படுத்தப்பட சிரிமாபுரத்தில் எழுந்த மோதலானது உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனமொன்றான RDF ஈடுபட்டதால் அந்நிலம் சிங்களக் கத்தோலிக்கர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டது. USAID ஆனது அதன் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்திட்டத்தினூடு நிதியுதவி செய்தது.

சில முரண்பாடுகள் நீண்ட காலத்திற்கு நிலவுகின்றன. இன்னும் இன்னும் வெவ்வேறு மக்கள் அதில் ஈடுபட பிரச்சினையின் சிக்கற் தன்மை வளர்கின்றது. உதாரணமாக வனாதவில்லு மீன் பிடித்தலத்திலான முரண்பாடானது பல குழுக்கள் அதில் சம்பந்தப்பட்டுள்ளதால் இன்னும்

தீர்க்கப்படாமலுள்ளது. இம்முரண்பாட்டில் மூன்று சமூகங்கள் முரண்படுகின்றன. கங்கைவாடி மற்றும் சேரக்குலிய சமூகங்கள் பிரதான முரண்பாட்டு பிரிவினர்களாக இருப்பினும் எலுவன்குளம் எனும் மற்றுமொரு சமூகமும் அதில் சம்பந்தப்படுகிறது. இம்மூன்று முரண்படும் பிரிவினர்களையும் பிரதிநிதிததுவப்படுத்தும் அரசியல் வாதிகள் இப்பிரச்சினைக்கு இன்னுமொரு சிக்கல் நிலையை சேர்த்துள்ளனர். இம்முரண்பாடு ஏற்படும் கால முரண்பாடு தொடரும் கால இடையானது பிரச்சினை எவ்வளவு உணர்வுபூர்வமானது (Sensitive) என்பதிலும் தங்கியுள்ளது. உதாரணமாக முரண்பாடானது ஒரு பொதுவான வளத்திற்காக இரு மதங்களிடையில் அல்லது இரு இனங்களிடையிலானதாயின் நிறுவனங்களும், தனிநபர்களும், இதில் தலையிடுவதைக் கடினமானதாக உணர்வதுடன் உள்ளூர் நிறுவனங்களுக்கு இதனைத் தீர்ப்பதற்கான ஆற்றலும் போதாதாகும். வழமையாக இவ்வகையான முரண்பாடுகள் நீதிமன்றம் மற்றும் பொலிஸ்துறை போன்ற முறையான நீதித்திட்டத்தின் உதவியை நாடுகின்றன. முரண்பாடுகள் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

## 5.3. தீவிர தன்மையின் வீச்சு

முரண்பாட்டின் வகைக்கேற்ப முரண்பாடுகளின் தீவிரத் தன்மை வேறுபடுகின்றன. ஆய்வின் போது பல்வேறு தீவிரத் தன்மையுள்ள பரந்தளவில் வேறுபட்ட முரண்பாட்டுச் சம்பவங்களை சந்திக்க முடிந்தது. ஆய்வு செய்யப்பட்ட எல்ல முரண்பாடுகளும் வன்முறைகளாக மாறவில்லை. சில முரண்பாடுகள் முரண்பாடுகளுக்குரிய விடயங்கள் மற்றும் சம்பந்தப்பட்டுள்ள பிரிவினரைக் கருதும் போது அவ்வளவு தீவிரமானதல்ல. மக்களின் மனங்களுள் மறைந்து இருக்கும் சில முரண்பாடுகள் வெளிக்காட்டப்படாமலிருந்து எவ்வித வன்முறைகளையும் தோற்றுவிக்கவில்லை. நுரைச்சோலையில் மருத்துவ சகாய நிலையத்திலான பிணக்கானது கிட்டத்தட்ட கண்ணுக்குப் புலப்படாத ஒன்று போல் இருந்ததுடன் எவ்வித வன்முறையையும் தோற்றுவிக்கவில்லை. 10 வருடங்களுக்கும் மேலாக புத்தளத்தில் குடியிருக்கின்ற உள்வாரியாக இடம்பெயர்நத மக்களுடன் வரையறுக்கப்பட்ட அளவான வளங்களைப் பகிர்ந்து கொள்ளல் போன்ற விடயங்களால் உள்ளூர் மக்கள் விரக்தியடைந்த நிலையிலும் புறக்கணிக்கப்பட்ட உணர்வுடனும் இருக்கின்றனர். ஆனால் இவ்வுணர்வுகள் வித்தியாசமான வேறொரு உடனடிக் காரணத்தினால் முரண்பாடாக மாறலாம். அல்லது பிணக்குகளைத் தூண்டலாம்.

> "உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்களின் வருகையால் தமது தொழில்கள் மற்றும் அரசாங்க தொழில் வாய்ப்புக்களுக்கான சாத்தியங்களை இழந்துள்ளதாக உள்ளூர் சமூகம் கருதுகின்றது"
> (பெண், 22, நுரைச்சோலை)

வெளிப்படையாக தெரியும் சில முரண்பாடுகளும் வன்முறைகளுக்கு இட்டுச் செல்லாதிருந்திருக்கின்றன. சிறிமாபுர முரண்பாடானது சமூகங்களிடையே சில பதற்றங்களைத் தோற்றுவித்தாலும் தீர்ப்பதற்கான தலையீடுகள் அவை வன்முறைக் கட்டத்தை அடைய முன்னர் ஏற்பட்டதால் அவை வன்முறைகளாக மாறவில்லை.

முரண்பாடுகள் வன்முறைகளாக மாறுவதற்கு ஒரு காரணம் பிரச்சினைகள் சர்ச்சைக்குரியவையாக இருப்பதும் பொறுப்பான அதிகாரிகளால் சரியாக முன்னெடுத்துச் செல்லப்படாமையுமாகும். குறித்த சில சந்தர்ப்பங்களில் மக்களால் சரியாக தீர்வுகளை அடைய முடியாமையால் உருவாகின்ற மன முறிவுகளும் முரண்பாடுகளை வன்முறைகளிற்கு இட்டுச் செல்கின்றன. ஒரு பிரிவினர் தலையீடு செய்யும் தனிநபர் அல்லது நிறுவனம் அடுத்த பிரிவினருக்கு சார்பாக செயற்படுவதாக நினைக்கும் போது முரண்பாடுகள் வன்முறைகளாகக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு. நாகவில்லு முச்சக்கர வண்டி ஓட்டுநனர்களிடையான முரண்பாடு இரு தரப்பினரும் தலையீடு செய்தவர்களை ஏற்றுக் கொள்ள மறுத்ததாலேயே வன்முறையாக மாறியது. முஸ்லிம் சமூகம் சிங்கள ஓட்டுநர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய நிறுவனம் அவர்களுக்குச் சார்பாகச் செயற்படுவதாக நம்பினர். அவ்வாறே மறு தரப்பினரும். ஏனைய சில தலையீடுகள் முஸ்லிம் ஓட்டுனர்களை சார்ந்துள்ளதாக

நம்பினர். சூழ்நிலை வன்முறையாக மாற இறுதியில் இப்பிரதேசத்தில் பொலிஸ் சோதனைச் சாவடி ஒன்றை அமைத்து பொலிசாரின் ஈடுபாட்டுடன் நிலைமை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. நிச்சயமாக பௌதீக வன்முறைகள் பிணக்குகளை இன்னும் தீவிரமாக்குகின்றன. இவ்வன்முறையானது தனிநபர்களினதும் அதே போல் சமுதாயத்தினதும் பௌதீகச் சொத்துக்களை அழிப்பதுடன் சில நேரங்களில் உயிர்ச்சேதங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

## 5.4 முரண்பாடுகளின் சிக்கற் தன்மை

இவ்வாய்வில் ஆராயப்பட்ட முரண்பாடுகள் பொதுவாக சம்பந்தப்பட்ட பாத்திரங்கள், விடயம் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பாக பெரிய சிக்கற்தன்மையைக் கொண்டுள்ளன. சம்பந்தப்பட்டுள்ள பாத்திரங்களின் எண்ணிக்கையில் நிச்சயமாக முரண்பாட்டின் சிக்கற் தன்மை தங்கியுள்ளது. ஆய்வு செய்யப்பட்ட பல முரண்பாடுகளில் இரண்டு குழுக்களின் ஈடுபாடே காணப்பட்டாலும் குறித்த ஒரு சம்பவத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பிரிவினரின் ஈடுபாடு காணப்பட்ட சந்தர்ப்பங்களுமுள்ளன. வனாதவில்லு முரண்பாடானது ஒரு மீன்பிடி நிலத்தின் மேலாக மூன்று பிரிவினரிடையில் (கங்கைவாடி, சேரக்குலி மற்றும் எலுவன்குலம் சமூகங்கள்) ஏற்பட்டதாகும். இன்னும் சில நேரங்களில் முரண்பாட்டு நிகழ்வின் வெளியேயுள்ளோரும் அதிக ஈடுபாட்டை காட்டுகின்றனர். மேலும் சில சந்தர்ப்பங்களில் முரண்படும் பிரிவினருடன் சம்பந்தப்படாத பாத்திரங்கள் சூழ்நிலையை இன்னும் மோசமாக்குகின்றன. அவர்கள் வித்தியாசமான உள்நோக்கங்களுடன், அவர்களது நோக்கங்களுக்காக முரண்பாட்டு சூழ்நிலைகளை மாற்றியமைக்கவும் சிலவேளைகளில் தீர்வுத் திட்டங்களை தடுக்கவும் செய்கின்றனர். உதாரணமாக நாகவில்லுப் பிரச்சினையானது வெளியிலிருந்தான பாத்திரங்களின் ஈடுபாடு அதிகரித்ததால் சிக்கற் தன்மை காலத்துடன் அதிகரித்துச் சென்றது. அபிவிருத்தி நிறுவனங்கள், மத நிறுவனங்கள், அரசியல் வாதிகள், பொலிஸ்துறை மற்றும் சமூகத் தலைவர்களின் ஈடுபாடும் சூழ்நிலையை இன்னும் சிக்கலாக்குகிறது. ஒவ்வொரு பிரிவினருக்கும் தீர்வுகளை வழங்குவதாக வாக்குறுதிகளை வழங்கியவாறு காலத்திற்குக் காலம் அரசியல் வாதிகள் இப்பிரதேசத்திற்கு வருகை தருகின்றனர்.

> "இப்பிரச்சினையில் பல்வேறு அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் ஈடுபட்டுள்ளதால் இது அதிகளவில் அரசியலாக்கப்பட்ட நிகழ்வாகியுள்ளது."
>
> (முக்கிய நபர் நேர்காணல், ஆண், நாகவில்லு)

முரண்பாடுகளில் சம்பந்தப்பட்டவர்களின் வகையும் தன்மையும் முரண்பாடுகளின் இயல்பிற்கேற்ப வேறுபடுகின்றன. முரண்பாடானது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான வளங்களுக்கான போட்டியின் அடிப்படையிலானதெனின், அப்பிரதேசத்திலுள்ள ஒரு அபிவிருத்தி நிறுவனம் அதில் ஈடுபடுவதற்கு வாய்ப்புண்டு. நுரைச்சோலை மருத்துவ சகாய நிலையத்தின் (கிளினிக்) சம்பவத்தில் ISRC இன் ஈடுபாட்டினை இதற்கு உதாரணமாகக் கூறலாம். ஆனால் இரு மதக்குழுக்களோ அல்லது இரு இனங்களிடையிலோ முரண்பாடுகள் ஏற்படும் போது விரைவில் அதிக பிரிவினர் ஈடுபடத் தொடங்குவதால் நிலைமை மிகவும் கடினமாகின்றது. உடப்பில் கத்தோலிக்கர்கள் இந்துக்கோயிலுக்கு அண்மையில் ஒரு சிலையை நிறுவ முயன்ற போது அதுவொரு மோதலாக மாறியது. இரு குழுவினரும் இம்முரண்பாட்டிற்கான விடயத்தின் மீது கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும் இம்முரண்பாட்டினைக் கையாள்வதைக் கடினமாக்குகின்றது. இக்குழுக்கள் வித்தியாசமான விதங்களில் செயற்படுகின்றன. சிலர் பிரச்சினையைத் தீர்வுக்குக் கொண்டுவர முயலும் அதே வேளை வேறு சிலர் நிலைமையை மேலும் சீர்கெடச் செய்கின்றனர். இவ்வாறான சூழ்நிலைகளில் சம்பந்தப்பட்ட மத நிறுவனங்களும் தனி நபர்களும் தலையிடுகின்றனர்.

> "இப்பிரச்சினையை நாம் கிராம சேவகர் (GS), பிரதேச செயலாளர் (DS), உதவி அரசாங்க அதிபர் (AGA), அரசாங்க அதிபர் (GA), அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்திய போதும் இப்பிரச்சினைக்கு எவ்விதத் தீர்வையும் நாம் காணவில்லை."
>
> (முக்கிய நபர் நேர்காணல், ஆண், நாகவில்லு)

சிங்கள – முஸ்லிம் முரண்பாடுகளில் இவை முதலில் வழமையாக விகாரை நிர்வாகக் குழுவிற்கும் பள்ளிவாயில் நிர்வாகக் குழுவிற்கும் தெரிவிக்கப்படுவதால் இங்கு இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இக்குழுக்களும் இதன் தலைவர்களும் ஈடுபடுகின்றனர். இவ்வமைப்புக்களும் தனிநபர்களும் தமது கருத்துக்களை வழங்குவதன் மூலம் அல்லது இரண்டு குழுவினரிடையேயுமான உரையாடல்களை ஊக்குவிக்கப்படுத்துவதன் மூலமே பிணக்கினைத் தீர்ப்பதற்கு முயல்கின்றனர்.

முரண்பாடு வன்முறையாக மாறினால் மேலும் வன்முறை தீவிரமாவதை நிறுத்துவதற்கு பொலிஸார் தலையிடுகின்றனர். இது தற்காலிகமான ஒரு தீர்வாக இருப்பினும் முக்கியமான கட்டங்களில் நிலைமை மேலும் மோசமடைவதைத் தடுப்பதில் முக்கியத்துவம் பெறுகின்றது.

முரண்பாடுகள் இயற்கை வளங்கள், சலுகைகள் மற்றும் ஜீவனோபாயத்திற்கான போட்டிகளால் ஏற்படும் போது அரசாங்க அதிகாரிகள் தலையிடுகின்றனர். இவர்கள் பல்வேறுபட்ட பிரிவு மக்களின் ஜீவனோபாய செயற்பாடுகளுக்கு பௌதீக எல்லைகளை வகைப்படுத்தி தீர்வுகளை வழங்க முயல்கின்றனர். வனாதவில்லுவில் கடற்கரையோரத்தில் முஸ்லிம்களின் படகுகளை நிறுத்துவதற்கு இடத்தைப் பெறுவதில் ஏற்பட்ட போட்டியில் அரசாங்க அதிபர் மற்றும் உதவி அரசாங்க அதிபரின் தலையீட்டில் அவர்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தி முரண்படும் மூன்று பிரிவினருக்கும் எல்லைகள் வகுக்கப்பட்டன. முந்தல் உதவி அரசாங்க அதிபர் உடப்பு மோதலின்போது சிலையை நிறுவதற்காகக் கத்தோலிக்கச் சமூகத்துக்கு ஒரு காணியை வழங்கியதன் மூலம் தீர்வினைக் கொண்டுவர முயன்றார்.

சில முரண்பாடுகளில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அவர்களது உள்ளூர்ப் பங்குதாரர்களும் குறிப்பிடத்தக்களவு தாக்கம் செலுத்துகின்றனர். இவர்கள் உள்ளூர் அரச சார்ப்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் வழமையாக புதிய உட்கட்டமைப்புக்களை அமைப்பதற்கு நிதி உதவிகளை வழங்குவதன் மூலம் அல்லது அங்கு நிலவுகின்ற மனக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு ஏனைய உதவிகளை வழங்குவதன் மூலம் தலையிடுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்கு உதாரணமாக சிறிமாபுரம் மற்றும் நுரைச்சோலை முரண்பாடுகளில் RDF மற்றும் ISRC நிறுவனங்களினூடாக USAID வழங்கிய நிதி உதவிகளைக் கூறலாம். இவ்வகையான தலையீடு மிகவும் சிக்கலற்ற மற்றும் ஒரு பொதுச் சொத்தின் மீது ஏற்படுகின்ற முரண்பாடுகளைத் தீர்ப்பதில் உதவுகின்றன.

வடக்கிலிருந்து உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் வெளியேற்றப்பட்டு புத்தளத்துக்கு வருகை தர ஆரம்பித்த காலங்களில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் குறுகிய கால அவசர நிவாரணச் செயற்பாடுகளை மேற்கொண்டது. இவர்களது உதவித்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் உள்ளூர்ச் சமூகத்தினைத் தவிர்த்து உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களை மையப்படுத்தி நீண்டகாலமாக தொடரப்பட்டமை போட்டியுணர்வுகளையும் மனக் கசப்புக்களையும் ஏற்படுத்தியது. இந்நீக்கமானது உள்ளூர் சமூகத்துக்கும் உள்வாரியாக இடம்பெயர்ந்த சமூகத்துக்கும் இடையில் அழுத்தங்களை ஏற்படுத்தியது. இப்பரப்புக்களைப் படிப்படியாக அறிந்து கொண்டமையும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் பாதிப்புறு நிலையை விடவும் கூடியளவு பாதிப்புறு நிலை உள்ளூர் சமூகத்து மக்களிடம் காணப்பட்டதை அறிநதமையும் இச்சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் அண்மைக்காலங்களில் அவர்களது பார்வையை உள்ளூர் சமூகத்தின் மீது திருப்ப வைத்துள்ளது.

> "உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையின் முன்னர் இங்கு எந்தவொரு அரச சார்பற்ற நிறுவனமும் இருக்கவில்லை. சிங்கள, முஸ்லிம் மக்களிடையே எவ்வித பிரச்சினையும் இருக்கவில்லை. இப்போது உள்ளூர் மற்றும் உள்வாரியாக இடம்பெயர்ந்த முஸ்லிம்களிடையிலுமே பிரச்சினைகள் உள்ளன. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையொன்று சிங்கள மக்கள் மற்றும் உள்ளூர் முஸ்லிம்கள் இரு சாராருக்குமே அனுகூலமானதல்ல. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் சிறந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு வாகனங்களும்

காணிகளுக்கான உரிமைப் பாத்திரங்களும் கூட உள்ளன. ஆனால் உள்ளூர் மக்கள் இன்றும் அதே நிலையில் உள்ளனர்."

(முக்கிய நபர் நேர்காணல், ஆண், பாலாவி நிலம்)

## 5.5 பொதுவான விடயங்கள்

ஆராயப்பட்ட பல முரண்பாடுகளில் பின்வரும் விடயங்கள் பொதுவானவையாக காணப்பட்டன. இவ்விடயங்கள் புத்தளத்தின் முரண்பாட்டுச் சூழலை வரைவிலக்கணப்படுத்துவதுடன் அவை தீர்க்கப்படுவதற்கான முயற்சிகள் பல்வேறு பரிமாணங்களை உருவாக்கும் வண்ணம் இம்மாவட்டத்திலான முரண்பாடுகளிற்கான பல அடிப்படைக் காரணங்களுடன் இணைந்துள்ளன.

### *அடையாளம்*

ஆய்விலிருந்து அடையாளம் என்பதற்கு முரண்பாடுகள் தூண்டப்படுவதிலிருந்து முரண்பாடு தீர்த்தல் வரை முழு வீச்சையும் பாதிக்கும் ஒரு விடயமாக பரந்தளவிலான ஒரு கருத்து கொடுக்கப்படுகிறது. அடையாளம் என்னும் எண்ணக்கருவுடன் தொடர்பாக இரு பிரதான அணுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றன. முதலாவதாக அடிப்படை அணுகுமுறை (Primodialist approach). அடிப்படை அணுகுமுறை என்பது பொதுவான பரம்பரை மற்றும் பொதுவான உயிரியல் பண்புகள் போன்ற நோக்கங்களால் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்ற தன்னைப் பற்றி அல்லது தன்மை சூழவுள்ள தனது குழுக்களைப் பற்றிய உணர்வைக் கொண்ட அணுகுமுறையாகும். இரண்டாவது அணுகுமுறையானது அடையாளப்படுத்தல் பிரதானமாக அரசியல் ரீதியான சில பண்புகளால் உருவாக்கப்படுகின்ற சமூகம் உருவாக்கிய அணுகுமுறையிலிருந்து தருவிக்கப்படுகின்றது. இவ்விரண்டு அணுகுமுறைகளுக்குமிடையில் வேறு பல மாற்று அணுகுமுறைகளும் அடையாளம் காணப்படலாம். பல்வேறுபட்ட, என்றும் மாறுகின்ற சமூக அனுபவங்களில் செயற்படுகின்ற தொடர்ச்சியான செயன்முறையொன்றாக அடையாளத்திற்கு கருத்துக் கொடுப்பது ஆய்விலிருந்து அறியப்பட்ட ஒரு மாற்று அணுகுமுறையாகும். இது தொடர்பாக அடையாளமானது நிலையாக அல்லது தேவைக்கேற்ப மாறுபடக் கூடியதாக இருப்பது இதன் முக்கிய பண்பாகும். இவ்வரைவிலக்கணத்தின் தாராளத் தன்மையானது சமூக உறவுகளில் மற்றும் அடையாளத்தை மாறும் சமூக அனுபவங்களின் அடிப்படையில் அடையாளங்கள் உருவாக்கப்படுவதாகவும் ஆய்வு கண்டுபிடித்துள்ளது.

"1990 களில் நாம் வந்தபோது எல்லா இடத்திலும் சிதறி வாழ்ந்திருந்தோம். பின்னர் நாம் மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இவ்விடத்தைக் கண்டெடுத்தோம். இங்கிருந்த காட்டினை நாமாகவே மட்டம் செய்து நாமாக வீடுகளைக் கட்டி எமது சமூகத்தை இந்த அளவுக்கு விருத்தி செய்தோம். அதனாலேயே இவ்விடத்தை நாம் எருக்கலம்பிட்டி - நாகவில்லு என அழைக்கின்றோம். ஏனெனில் நாம் இக்கிராமத்தை உருவாக்கினோம். இதற்கு முன்னர் யாரும் இதனை அடையாளம் கண்டிருக்கவில்லை."

(முக்கிய நபர் நேர்காணல், ஆண், நாகவில்லு)

ஆய்வின் சில சந்தர்ப்பங்களில் அடையாளம் என்பது ஒரு பொதுப் பரம்பரையால் அல்லது வரலாற்றினால் இணைக்கப்பட்டுள்ள குறித்த குழுக்களுக்குச் சொந்தமாயிருத்தல் என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. ஆனால் இந்த பொதுவான பரம்பரை அல்லது வரலாறும் கூட வித்தியாசமான சந்தர்ப்பங்களின் வேறுபடுகின்றன. ஒரே சமூகத்துள்ளேயும், ஒதே மத/இனப் பிரிவுகளுள்ளேயும் உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் உள்ளூர் மக்கள் என்பது போன்ற வெவ்வேறு அடையாளங்கள் காணப்படுகின்றன.

> "அவர்கள் முஸ்லிம்களாயிருப்பினும் எங்களுக்கும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்குமிடையில் கருதத்தக்க பல கலாசார வித்தியாசங்களுள்ளன."
>
> *(ஆண், 50, நுரைச்சோலை)*

மனிதநேய அமைப்புகளுக்கான ஒன்றியம் (CHA) அதனது 2004 இன் செயற்பாட்டாளர்களுக்கான அறிவுறுத்தற் தொகுப்பில் (practitioner's kit) இடம்பெயர்ந்தவங்களின் அனுபவங்கள் வேறுபட்டதாக கண்டுபிடித்துள்ளது. அவர்கள் வேருடன் பிடுங்கப்பட்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள் என்ற ரீதியில் ஒரு பொதுவான அனுபவத்தில் ஒன்றுபடுகினறனராக இருந்தாலும் அவர்களது புவியியல் பிரதேசம், இனப் பின்னணி, உள்ளூர் சமூகத்துடனான அவர்களது உறவு மற்றும் ஏனைய காரணிகளுக்கேற்ப அவர்களது குறிப்பிட்ட சூழ்நிலைகள் வேறுபடுகின்றன.[3] இவ்வாய்வும் இக்கருத்துடன் பெரிய அளவுக்கு இணங்குகின்றது. இவ்வாய்வும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களிடையேயும் அவர்களது ஆரம்ப புவியியற் பிரதேசத்திற்கேற்ப பிரிவுகள் உள்ளதை கண்டறிந்துள்ளது. இவ்வித்தியாசங்கள் வளங்களின்

பகிர்வு மற்றும் ஒரு குறித்த குழுவினருக்கு சாத்தியமாக சமூக வலையமைப்புகளை வரைப்படுத்துவதில் தமது செல்வாக்குகளைக் காட்டுகின்றமை அவதானிக்கப் பட்டுள்ளது.

> "யாழப்பாணத்திலிருந்து குடிபெயர்ந்த IDP கள் தமக்கென பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கவில்லை. ஆனாலும் மன்னாரிலிருந்து குடிபெயர்ந்த IDP கள் கொண்டுள்ளனர். ஆவர்களது பாராளுமன்ற உறுப்பினர் அனைத்துக்கும் பொறுப்பாக இருக்க வேண்டும். ஆனால் அவரது செயற்பாடுகளில் மன்னார் மக்களுக்கு கூடிய முன்னுரிமை கொடுப்பதாக பாரபட்சம் காணப்படுகின்றது."
>
> *(ஆண், 60, சிறிமாபுரம்)*

> "மீள்குடியமர்த்தல் அமைச்சு யாழ்ப்பாண மற்றும் மன்னாரிலிருந்து உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களிடையே வித்தியாசம் காட்டுகின்றது. மன்னாரிலிருந்து உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்களின் அபிவிருத்தியைத் தெளிவாகக் காணக்கூடியதாய் உள்ளது."
>
> *(ஆண், 60, சிறிமாபுரம்)*

அடையாளம் என்பது பயன்படுத்தப்படுகின்ற அல்லது அடையாளம் எனும் விடயம் வெளிக்கொண்டு வரப்பட்ட விதம் கவனத்தைக் கவரக்கூடியதாயுள்ளது. சிலவேளை அடையாளம் எனும் பக்கமானது மக்கள் அச்சுறுத்தப்படும் போது அல்லது குறித்த ஒரு கூட்டத்தில் சேர்ந்திருப்பதால் குறித்த நன்மைகள் கிடைக்கப்பெறும் போது முக்கியமானதாவதும் காணப்பட்டுள்ளது. இதே அடையாளம் சூழ்நிலைகளுக்கேற்ப அனுகூலங்களையும் வேறு சில சூழ்நிலைகளில் பிரதி கூலங்களையும் கொண்டு வரலாம்.

அடையாளம் என்பது பலத்துடனும் இணைந்துள்ளது. பிரதேசத்தில் அவன்/அவள் ஏதும் பலங்களை வைத்துள்ள அல்லது பிரச்சினைக்குரிய விடயம் என்பனவாறான குறித்த சூழ்நிலைகளில் தனிமனித அடையாளம் முக்கியத்துவம் பெறுகின்றது. இது பலர் ஒரு குறித்த குழுவாக இணைந்து தமது குழுவிற்கு அடையாளம் வழங்கும் எண்ணிக்கையிலான சக்தியாக இருக்கலாம். இரண்டு அல்லது பல குழுக்களிடையேயான முரண்பாட்டுச் சூழ்நிலைகளில் இவ்வெண்ணிக்கையிலான சக்தியானது மிகத் தெளிவாகக் காட்டுகின்றது.

குறித்த ஒரு குழுவிற்குள் அடையாளப்படுத்திக் கொள்ளல் என்பதானது ஒருவர் அதன் பகுதியாக இணையக் கூடிய சமூக வலையமைப்பானது அக்குழுவிலேயே தங்கியுள்ளது என்பதாகும். இது

---

3. CHA மற்றும் புருகிங்ஸ் (Brookings) இனது மீளுதல், மீள்குடியேற்றம், புனர்நிர்மானம் மற்றும் அபிவிருத்திக்கானசெயற்பாட்டாளர்களுக்கான அறிவுறுத்தற் தொகுப்பு- உள்வாரியாக இடம்பெயர்தலிலான SAIS செயற்றிட்டம் (2004).

எண்ணிலடங்கா கருத்துக்களைக் கொண்டுள்ளது. பொதுவாக கூறின், ஒருவருக்கு உள்ள வாய்ப்புக்களானவை அவரது குழு குறித்த அதிகாரிகளுடன் கொண்டுள்ள தொடர்பின் தன்மையில் தங்கியுள்ளது. இவ்வதிகாரிகளுடனான தொடர்புகள் மேலும் ஒருவர் கொண்டுள்ள அடையாளத்தில் தங்கியுள்ளது. ஒரு முரண்பாடு அல்லது பிணக்கான சந்தர்ப்பத்தில் அதைத் தீர்த்து வைக்கும் செயன்முறையில் சமூக வலையமைப்புக்கள் மிகவும் முக்கியமானவையாகும். கூடிய பலத்துடன் கூடிய பிரிவினர் உங்களது சார்பாக தலையிட முடியுமெனின் பிணக்கானது உங்களது சார்பாக முடிக்கப்படுவதற்கான சாத்தியம் கூடுதலாகும்.

பதிலளிப்பாளர்களின் பார்வையிலிருந்து (கலாசாரங்களின் கலப்பு) கலாசாரங்கள் ஒன்றுடன் ஒன்று கலந்தமையானது நேரான மற்றும் மறைமுகமான விளைவுகளைக் கொண்டுவந்துள்ளது. உள்வாரியாக இடம்பெயர்ந்த மற்றும் உள்ளூர் மக்களிடையேயான திருமணங்கள் புதிய உறவுகள் மூலம் இரு குழுவினரையும் இணைத்து அவர்களிடையேயான இடைவெளியைக் குறைப்பதாக பதிலளிப்பாளர்கள் உணர்கின்றனர். நேரான மாற்றத்திற்கான இரண்டாவது உதாரணம் சிங்கள சமூகம் மற்றும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களிடையிலான கலத்தலாகும். ஆரம்பத்தில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையுடன், அவர்களுக்கு சிங்கள மொழியைப் பேசவோ மற்றும் விளங்கிக் கொள்ளவோ முடியாதிருந்தமையால் அங்கு முரண்பாடுகள் தோன்றின. ஆனால் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் சிங்கள மக்களுடன் தொடர்பாடக்கூடியவர்களாக மாறியதால் இம்முரண்பாடுகள் குறைந்தன.

புதிய கலாசாரங்கள் சமூகத்தினுள் கொண்டுவரப்பட்டமையால் இக்கலாசாரங்களின் கலப்பானது எதிர்மறையான விளைவுகளை உண்டு பண்ணுவதாக சிலர் உணர்கின்றனர். உதாரணமாக இப்போது சமூகத்திலுள்ள சீதன முறையானது இக்கலாசாரங்கள் கலந்ததன் விளைவாக உருவானது என உள்ளூர் மக்கள் நம்புகின்றனர்.

> "அவர்கள் முஸ்லிம்களாயிருப்பினும் எமக்கும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்குமிடையே கலாசார வித்தியாசங்கள் உள்ளன. அவர்களது வருகைக்கு முன்னர் புத்தளத்தில் சீதனப் பிரச்சினை காணப்படவில்லை. ஆனால் அவர்களது கலாசாரம் காரணமாக எமது சமூகத்தில் இப்போது சீதனப் பிரச்சினை நிலவுகின்றது."
>
> *(ஆண், 51, நுரைச்சோலை)*

### *நிலம்*

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஒவ்வொரு நிகழ்வினதும் அடித்தளத்தில் குறிப்பிடத்தக்களவுக்கு நிலம் தொடர்பான பிரச்சினை அல்லது இடத்திற்கான போட்டி பொதுவானதாக காணப்பட்டுள்ளது. புத்தளத்தில் நெருக்கமற்ற அதன் சனத்தொகை காரணமாகவும், விவசாயம் மேற்கொள்ள முடியாத புவியியலமைப்பு காரணமாகவும் கணிசமானளவு நிலம் பயன்படுத்தப்படாது வெற்றாக காணப்படுகின்றது. பின்னணி பகுதியில் இடம்பெயர்வின் போக்கு எனும் தலைப்பின் கீழ் கலந்துரையாடப்பட்ட போது அங்கு மக்களுககு குறித்த அளவு நிலம் விவசாயத்திற்கெனவும் மேலும் வீடமைப்புக்கெனவும் நிலம் வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் காணப்பட்டுள்ளன.

> "தவசமடு பகுதியில் எமக்கு பயிர்ச்செய்கை நிலங்கள் பகிரப்பட்டு வழங்கப்பட்டன. அவர்கள் ஒரு குடும்பத்திற்கு 1 ஏக்கர் நிலம் வீதம் வழங்கினர். இது எமக்குப் போதவில்லை. எனவே நாம் இரண்டு காரணங்களிற்காக இத்திட்டத்திற்கு ஒத்துழைக்கவில்லை. முதலாவது நிலம் போதாமை. அதாவது இந்நிலத்தைப் பராமரிப்பதற்கான செலவு உண்மையில் எமது வருவாயிலும் கூடுதலாக உள்ளதாகும். இது நட்டமாகின்றது. இரண்டாவதாக இந்நிலம் அதிகளவில் யானைகளின் தாக்குதலுக்குள்ளாகின்றது. பின்னர் இந்நிலம் வனாதவில்லு மற்றும் காரைத்தீவைச் சேர்ந்த சில 300 வெளியாட்களுக்கு வழங்கப்பட்டது."
>
> (கலந்துரையாடல், வனாதவில்லு)

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகைக்கு முன்னர் இப்பிரதேசத்தில் காணிகளின் விலை ஒப்பீட்டளவில் குறைவாகவே இருந்தது. ஆனால் இவர்களது வருகையானது காணிகளின் பயன்பாட்டின் போக்கையும் காணிகளின் விலைகளையும் பெரியளவில் மாற்றியுள்ளது. ஆரம்பத்தில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களிற்கு LRC இனால் நிலம் வழங்கப்பட்டது அல்லது அரசாங்கம் தனியார் காணிகளை வாங்கி உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்களுக்குப் பகிர்ந்தளித்தது.

"முன்னர் இந்நிலங்களனைத்தும் வெற்று நிலங்களாய் இருந்தன. ஆனால் இப்போது பாராளுமன்ற அங்கத்தினர் ரிஷாத் பதியுத்தீன் அவர்கள் தனியார் காணிகளை வாங்கி அதில் ஏறத்தாழ 700 வீடுகளை உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்களுக்காக கட்டுகிறார்."

(குழுக் கலந்துரையாடல், பாலாவி)

"முன்னைய காலங்களை விட புத்தளத்தின் சனத்தொகை பெருகியுள்ளது. தேர்தல் இடாப்பின் படி பெரும்பான்மையானோர் 78% ஆன சிங்கள பௌத்தர்களாவர். இப்போது இங்கு பெருமளவான உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் இருப்பதுடன் ஏறத்தாழ 200 இடம்பெயர்ந்த மக்கள் குடும்பங்கள் ஒரு இடம் பெயர்ந்தோர் முகாமில் உள்ளனர். 700 வீடுகள் கட்டி அங்கு உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களைக் குடியமர்த்தும் திட்டமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது."

(முக்கிய நபர் நேர்காணல், ஆண், பாலாவி)

புத்தளத்தில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் கூடுதலாக குடியமரத் தொடங்கியதும் அவர்கள் உள்ளூர் முஸ்லிம்களிடமிருந்தும் சிங்கள மக்களிடமிருந்தும் நிலங்களை வாங்கத் தொடங்கினர். உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் தாம் தமது சொந்த ஊருக்கு அண்மைக் காலங்களில் திரும்பப் போவதில்லை என்பதை உணர ஆரம்பித்ததும் அவர்களது சேமிப்புக்கள், நகைகள் மற்றும் அவர்களது வியாபார ஈட்டல்களை இப்பிரதேசத்தில் நிலங்களை வாங்குவதற்காகப் பயன்படுத்தினர். சிலர் அவர்களது சொந்த இடங்களிலிருந்த சொத்துக்களை விற்றும் புத்தளத்தில் காணிகள் வாங்கினர். காணிகளுக்கான கேள்வி அதிகரிக்க, காணிகளின் விலைகள் திடுக்கிட வைக்குமளவுக்கு அதிகரித்தன.

முன்னர் இக்காணிகளிற்கு அதிக பெறுமதி இருக்கவில்லை. இருந்தாலும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையின் பின்னர் காணிகளிற்கான கேள்வி அதிகரித்ததுடன் யாராலும் ஒரு சிறிய காணித் துண்டையேனும் சில இலட்சங்களின்றி வாங்க முடியவில்லை.

(முக்கிய நபர் நேர்காணல், பாலாவி நிலம்)

"நாம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏறத்தாழ 20 பேச்சர்ஸ் வரை விற்றோம். நாம் 10 பேச்சர்ஸ் நிலத்தை 15,000 ரூபாவுக்கு விற்றோம். ஆனால் இப்போது எமக்கு அதற்கு ரூபா. 2,000,000 பெற்றிருக்க முடியும். நாம், நாமெல்லோரும் ஒன்றாக ஒரு பிரதேசத்தில் வாழ்வதற்கு நினைத்தோம்."

(ஆண், 50, பாலாவி)

பல்வேறு குடும்ப அங்கத்தவர்களுக்கும் காணி தேவைப்படும் போது காணி வழங்க வேண்டிய தேவை இருப்பதால் தற்போதைய சூழ்நிலை இன்னும் மோசமாகின்றது. இது புத்தளப் பிரதேசத்தில் எந்நேரமும் வன்முறையாக வெடிக்கக்கூடியதாக உள்ள இச்சூழ்நிலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுவதற்காக நிலப் பயன்பாட்டிற்கான நன்கு திட்டமிடப்பட்ட ஒரு யுக்தி அரசாங்கத்தால் அவசரமாக வழங்கப்படல் வேண்டும் என்ற அவசரத் தேவையை உணர்த்திக்காட்டுகின்றது.

"பயிர்ச்செய்கைக்காகவும் அதே நேரம் குடியிருப்பதற்காகவும் உள்ள நில அளவு குறைந்து கொண்டே வருகிறது. இப்பிரச்சினை உள்ளூர் மற்றும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களையும் பாதிக்கும். வீடு கட்டுவதற்காக இடம்பெயர்ந்த மக்கள் 10 பேச்சர்ஸ் காணியையே பெறுகின்றனர். இது இப்போது அவர்களது பிள்ளைகளுக்கு சீதனமாக வழங்கப்பட துண்டுபட்டுள்ளது."

(ஆண், 51, நுரைச்சோலை)

"இப்பாலாவி நிலமானது 1997 இல் எனது உறவினர் ஒருவரின் உதவியுடன் வாங்கப்பட்டது. எனது பிள்ளைகளை நினைத்து, அதாவது எனக்கு இரண்டு மகள்கள் உள்ளனர், எனவே எதிர் காலத்தில் அவர்களுக்கு சீதனம் வழங்க வேண்டும். மேலும் எம் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் ஒரே இடத்தில் வாழ வேண்டும் எனும் இரண்டு காரணங்களுக்காக அதனை வாங்கத் தீர்மானித்தேன்."

(ஆண், 52, பாலாவி)

"இப்போது பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்தும் போது சில விடயங்களில் உள்ளூர் மக்களுக்கும் உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்களுக்குமிடையில் அதிருப்தி நிலை தோன்றியுள்ளது. இப்போது அதிக சனத்தொகை பெருக்கம் காரணமாகவும் அதிக நிலப்பயன்பாடு காரணமாகவும் ஆலங்குடா மற்றும் பள்ளிவாசல் துறை பகுதிகளில் பயிர்ச்செய்கைக்கான நிலத்தினளவு தட்டுப்பாடாகி வருகின்றது. இது இன்னும் 10 வருடங்களில் பெரும் பிரச்சினையை உருவாக்கலாம். மேலும் இவ்வாறான பிரச்சினைகளிற்குத் தீர்வு காண்பதும் கடினமாகும்."

(பெண், 52, நுரைச்சோலை)

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களால் LRC நிலங்கள் அத்துமீறப்பட்டமை உள்ளூர்வாசிகளால், விசேடமாக சிங்கள சமூகத்தினால் அவநம்பிக்கையுடன் நோக்கப்படுகிறது.

"புத்தளத்தில் காணிகள் காரணமாக பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. சில மக்கள் அரச காணிகளை புல்டோசர்களுடன் (Bulldozer) விருத்தியாக்குகின்றனர். யாரும் தலையிடாவிட்டால் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் அங்கு குடியேறுகின்றனர். அமைச்சரும் இதனையே செய்கின்றார். போலிஸாரே இதற்கு பிரதான பொறுப்பாளிகளாகின்றனர். அவர்கள் இலஞ்சங்களைப் பெற்றுக் கொண்டு தீர்வுகளைத் தருவதற்கு முயற்சிக்கிறார்களில்லை."

(முக்கிய நபர் நேர்காணல், ஆண், பாலாவி)

"ஏனைய கிராமத்தவர்களுடன் முரண்பாடுகளில்லை. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் வந்தபோது அவர்களுக்கு முகாம் அமைப்பதற்காக சிங்கள மக்களுக்குச் சொந்தமான காணிகள் பெறப்பட்டதால் சில பிரச்சினைகள் தோன்றின. பின்னர் வேறு பிரதேசங்களில் அச்சிங்கள மக்களுக்கும் காணி வழங்கப்பட பிரச்சினை தீர்க்கப்பட்டது."

(பெண், 39, சிறிமாபுரம்)

சுருக்கமாகச் சொன்னால் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கு நிலம் வழங்கப்பட்டாலோ, அரசாங்கத்தினால் காணிகள் வழங்கப்பட்டாலோ, LRC நிலங்களில் அவர்கள் அத்துமீறினாலோ அல்லது உள்ளூர் வாசிகளிடமிருந்து அவர்கள் காணிகளை வாங்கினாலோ, எதுவாயினும் பிரதானமாக சிங்களச் சமூகத்தினரிடம் புதிதாக வந்தவர்கள் காணிகளின் மீது அதிக ஆட்சி கொள்கின்றனர் எனும் எண்ணமுள்ளது.

"எமது கிராமத்தைச் சூழவும் முஸ்லிம் கிராமங்களுள்ளன. இப்பிரதேசங்களில் அவர்களது ஆட்சியே நிலவுகின்றது. முதலில் அவர்கள் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் முகாம்களுக்கு அகதிகளாக வந்து பின்னர் இப்பிரசேத்தில் காணிகள்

வாங்கினர். இப்பிரதேசத்து மக்களே தமது காணிகளைப் பிரித்து பகுதிவாரியாகக் கட்டக்கூடிய விதத்தில் விற்றனர். இதனால் நாமே இப்போது பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றோம். எமது வளங்களையே அவர்கள் பயன்படுத்துகின்றனர். இதனைப்பற்றி யாரிடமும் கூற முடியாது. கூறினாலும் நாமே பிழை செய்தவர்களாகின்றோம்."

(குழுக் கலந்துரையாடல், பாலாவி)

"யுத்தம் முடிவடைந்து சமாதான உருவாகியுள்ள போதும் அவர்கள் திரும்பப் போவதில்லை. அவர்களுக்குத் தமது சொந்த இடங்களிலும் நிலமுண்டு இங்கும் நிலமுண்டு, ஆனால் நாம் நிலத்தை இழக்கிறோம். அவர்கள் எமது நிலததைக் கொஞ்சம் கொஞ்சமாக எடுக்கின்றனர்."

(குழுக் கலந்துரையாடல், பாலாவி)

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களும் தமது குழு அடையாளத்தை உருவாக்க அல்லது அவர்களது அடையாளத்தை பாதுகாப்பதற்காக முயல்கின்றனர். இவர்கள் பெரிய நிலப்பரப்புகளை மொத்தமாக வாங்கி தாம் முன்னர் தமது சொந்த இடங்களில் இருந்தது போன்றே ஒன்றாக குடியேறி தமது அடையாளத்தை நிலைநிறுத்த முயல்கின்றனர்.

"நாம் (4300 குடும்பங்கள்) யாழ்ப்பாணத்திலிருந்து 1990 இல் வெளியேற்றப்பட்டோம். முதலில் நாம் கொழும்பு மற்றும் நீர்கொழும்புப் பிரதேசங்களிற்குச் சென்றோம். நாம் அங்கு 1990 களிலிருந்து 1996 வரை வாழ்ந்து வந்தோம். திரு. அஷ்ரப் அவர்களின் மீள்குடியேற்றத்திட்டத்தின் கீழ் 1996 இல் நாம் இங்கு வந்தோம். பின்னர் நாம் ஏறத்தாழ 300 குடும்பங்கள் இங்கு (பாலாவி) ஒரு நிலத்தை வாங்கி யாழ்ப்பாணத்தை சேர்ந்த நாங்கள் அனைவரும் ஒன்றாக வாழ திட்டமிட்டோம்."

(முக்கிய நபர் நேர்காணல், ஆண், பர்லாவி)

வாழத் தகுதியில்லாத நிலங்களில் மேலதிக காணி அபிவிருத்திகள் எதுவும் மேற்கொள்ளப்படாது உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் குடியேறுதல் அல்லது குடியேற்றப்படல் இப்பிரதேசத்தில் ஒரு பிரச்சினையாக மாறிவருகிறது. அவர்கள் வீடுகளைக் கட்டும்போது இது பல கஷ்டங்களுக்கு இட்டுச் செல்கின்றது. சில வீடுகள் இயற்கை நீரோடைகள் அல்லது வடிகாலமைப்புத் திட்டங்களிற்கு குறுக்காக அமைக்கப்பட்டுள்ளன. இப்பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்கெனவே ஒரு பெரிய பிரச்சினையாக இருக்க, சனத்தொகை பெருக்கத்தால் இந்நிலை மேலும் சீர்கெடச் செய்யலாம்.

"நாம் இங்கு வந்த போது இவ்விடம் ஒரு காடாகவே இருந்தது. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களை விட வேறு யாரும் இதனை வாங்கியிருப்பார்களென்றே நான் நினைக்கவில்லை. இந்நிலத்தில் நுழைய முன்னர் இதனை பல நாட்களாக சுத்தம் செய்ய வேண்டியிருந்தது."

(பெண், 22, சிறிமாபுரம்)

## பலம் (சக்தி)

புத்தளத்தின் சமூக மட்டத்திலான முரண்பாடுகளினைப் பற்றிய கலந்துரையாடல்கள் எவ்வளவு சிக்கலானது மற்றும் பலம் சுமத்தப்பட்டது (பல்வேறு சக்திகளில் தங்கியுள்ளது) என்பதை ஆய்வு வெளிக் கொண்டு வருகிறது. உணர்ச்சியற்ற, நாசகார விதத்தில் பலத்தைப் பிரயோகித்தலானது இம்முரண்பாடுகள் பலவற்றுக்குப் பங்களிப்புச் செய்துள்ளது. முறையாக ஆலோசனைகள் இன்றி ஒரு சமூகத்தின் நன்மைக்காக மற்றைய சமூகம் பாதிக்கப்படுமாறு மாற்றங்கள் கொண்டுவரப்படல் போன்ற வேறு நிகழ்வுகளும் தொடர்ந்தும் நடந்து கொண்டே இருக்கின்றன. இது அடிக்கடி கிராமங்களின் மற்றும் பொது இடங்களின் பெயர் மாற்றங்களில் அவதானிக்கப்படுகின்றது. பெயர்கள் அடையாளங்களுடன் தொடர்புற்றுள்ளன. பொது இடங்களின் பெயர் மாற்றப்படலானது

இம்மாவட்டத்தில் பெருமளவு மக்களின் உணர்ச்சிகளைத் தொடுகின்றது. பெயர் மாற்றப்பட்ட இடங்களானவை அங்கு பல வருடங்களாக வாழ்ந்து வருகின்ற மக்களுக்கு நன்கு தெரிந்தவையாகும்.

> "இவ்வெல்லாப் பிரதேசங்களையும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் அடைத்துக் கொண்டுள்ளனர். இப்போது அவர்கள் இக்கிராமத்தின் பெயரை எருக்கலம்பட்டி என மாற்றியுள்ளனர். இப்பிரதேசத்தின் உண்மையான பெயர் நாகவில்லு என்பதாகும். இவர்கள் மன்னார் அல்லது யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பிரதேசத்தின் பெயரை எமக்கு மாற்ற விடுவார்களா? இவர்களுக்கு வீடு மற்றும் சொத்துக்கள் புத்தளத்திலும் மன்னாரிலும் கூட உள்ளன. ஆனால் எமது மக்களுக்கு என்ன இருக்கிறது எனப் பாருங்கள்? அவர்களது வீடுகளுக்கு யார் யார் வருகிறார்கள் எனத் தெரியாது. அவர்களது நண்பர்களும் உறவினர்களும் எமது பிரதேசத்தை அறிந்து போகவே வருகின்றனர். இது எமக்கு ஒரு அச்சுறுத்தலாகவுமுள்ளது."
>
> (முக்கிய நபர் நேர்காணல், பெண், நாவில்லு)

> "அவர்கள் இக்கிராமங்களை பெயர் மாற்றியுள்ளனர். பெரியகுளமானது இப்போது இஜிராக்குளம் என அழைக்கப்படுகிறது. இவர்கள் புராதன கிராமமான நாகவில்லுவின் பெயரையும் ஒரு முஸ்லிம் பெயருடன் மாற்றி பெயர்ச் பலகையும் வைத்துள்ளனர். புகையிரத நிலையத்தையும் பெயர் மாற்றியுள்ளனர்."
>
> (குழுக் கலந்துரையாடல், பாலாவி)

குறித்த சில பிரிவினரின் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் விதத்தில் மற்றும் மாவட்டத்தில் அவர்களால் உருவாக்கப்பட்ட மாற்றங்களை அனுமதிக்கும் விதத்திலேயே மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. மாவட்டத்திலுள்ள பலர் இப்பிரிவினரை வெளியாளர்களாகப் பார்ப்பதுடன் இவர்களிடையே பல முரண்பாடுகளும் நிகழ்ந்துள்ளன. இவ்வாறான அழுத்தமான சூழ்நிலையில் பலத்தைப் பிரயோகித்தலானது பரந்த வீச்சுக்குரிய மற்றும் ஆபத்தான விளைவுகளைக் கொண்டுள்ளது.

பலம் பிரயோகித்தலானது தேசிய அரசியல் சூழலுடன் இணைந்துள்ளது. இலங்கையிலுள்ள தேசிய வாத வகைகள், இவை அரசியலில் செல்வாக்குச்செலுத்தும் விதம், தாக்கங்களை கிளர்ந்து எழும்பச் செய்துள்ள ஏனைய தேசிய வாதங்கள் என்பன அடக்க முடியாத உணர்வுகளைத் தோற்றுவித்துள்ளன. இதனை ஆட்சேபிக்காது இருப்பதை அனுமதிக்க முடியாது. இச்சிக்கலான சூழல் அரசியல் புள்ளிகளை ஈட்டிக் கொள்வதற்காக ஒரு சமூதாய மட்டத்திலான சமாதானத்தை இரகசியமாகப் பலவீனப்படுத்துவதற்காக யாராலும் பயன்படுதப்பட முடியாது. இந்நிலையில் எடுக்கப்படும் சிறந்த முயற்சிகளும் இம்மாவட்டத்திலுள்ளவர்களால் மற்றும் அவர்களின் செயற்பாடுகளால் முடக்கப்படும் போது சிறந்த பலனைக் கொடுக்காது.

இவ்வாய்வு ஒரு சிக்கலான சக்தியின் தாக்கம் நிறைந்த ஒரு சூழலில் சமுதாய மட்டத்திலான முரண்பாட்டு முகாமைத்துவத்தின் வெற்றிகளையும் தோல்விகளையும் ஆராய்கிறது. இவ்வாய்வு தொடர்பாடல்களிலிருந்து புத்தளத்தின் எல்லா மட்டத்திலுள்ளவர்களும் இம்முரண்பாடுகளைத் தீர்ப்பதில் தமக்குள்ள உள்ள தேவையை இனங்கண்டு அறிந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையுண்டு.

## அரசியலும் அரசியற் பாத்திரங்களும்

முரண்பாடுகளைத் தீர்ப்பதில் அரசியல் வாதிகளின் பங்கானது பல பதிலளிப்பாளர்களால் பேசப்பட்டது. அரசியற் கட்சி பேதங்களுக்கு அப்பாட்பட்டு, எல்லா பலம் கொண்ட அரசியல் வாதிகளும் சமுதாயத்திற்கான அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்கான அடிப்படையான பொறுப்பினை ஏற்றுக் கொண்ட பொதுமக்களின் பிரதிநிதிகளாகக் கருதப்பட வேண்டுமென

நம்பப்படுகிறது. எனவே, பெரும்பாலான மக்கள், அரசியல்வாதிகள் குறித்த முரண்பாடுகளிற்கான காரணங்களை ஆராய்ந்து அவ்வுண்மைகளின் அடிப்படையில் முரண்பாடுகளைத் தீர்த்தலில் தலையிட வேண்டும் என்ற உணர்வைக் கொண்டுள்ளனர்.

மேலதிக ஆய்வானது அரசியல்வாதிகள் முரண்பாடுகளைத் தீர்த்தலில் தலையிடக்கூடிய பின்வரும் பல வழிகளை அடையாளம் கண்டுள்ளது.

- முரண்பாடுகளையும் அதன் அடிப்படைக் காரணங்களையும் அடையாளம் காணுதல்.
- முரண்பாட்டில் ஈடுபட்டுள்ள பிரிவின் ஒரு பிரதிநிதியாக.
- முரண்பாட்டின் வெளியிலிருந்தான ஒரு மத்தியஸ்தராக.
- ஒரு நியாயம் வழங்குபவராக
- ஒரு நடுநிலையான தனிநபராக

கட்சி, இன, மத பேதங்களை விடுத்து அரசியல்வாதிகள் முரண்பாடுகளைத் தீர்ப்பதில் ஒரு நியாயமான, உளமாறான ஆவலைக் காட்ட வேண்டும் என்பதே பொது மக்களின் கருத்தாகும். ஒரு தலையீடானது வெற்றிகரமானதாகவும் நிலையாகவும் இருப்பதற்கு அத்தலையீடு ஒரு முரண்பாடு தொடங்கும் போது அல்லது முரண்பாட்டினை உருவாக்கும் நோக்கில் உள்மறைந்துள்ள விடயங்கள் ஒன்று சேரும் போது போன்ற ஆரம்பக் கட்டடங்களிலேயே மேற்கொள்ளப்பட வேண்டுமென பதிலளிப்பாளர்கள் நம்புகின்றனர். சில நிகழ்வுகள் சார்ப்பளவில் மிகச்சிறிய ஒரு பிரச்சினையின் அடிப்படையில் ஆரம்பித்து பெரியளவுக்கு உயர்ந்து இன வன்முறைகளாக அல்லது அரசியல் வன்முறைகளாக அடையாளம் பெறுகின்றன என ஒரு அரசியற் பிரதிநிதியால் தெரிவிக்கப்பட்டது. அரசியல் வாதிகள் தமது சொந்த இலாபங்களுக்காகவும் மற்றும் வாக்குகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டும் செயற்பட முடியுமெனவும் இந்நிலை முரண்பாட்டுச் சூழ்நிலையை மேலும் சீர்கெடச் செய்யலாம் எனவும் நிறுவன மற்றும் சமுதாய மட்டத்திலான பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். மதச் செயற்பாடுகள் மற்றும் நெறிமுறைகள் பற்றிய அரசியல் வாதிகளின் அறிவின்மையும் முரண்பாடுகளை உருவாக்கலாம்.

முரண்பாடுகளைத் தீர்த்தலில் அரசியல் வாதிகளின் ஈடுபாடானது பிரதானமாக தேர்தற் காலங்களிலான தமது கட்சிக்குள் அல்லது வேறு கட்சிகளுடனான அரசியல் வன்முறைகளின் போதே மேற்கொள்ளப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்களுக்கிடையிலான இரு பிணக்குகளின் தீர்வில் பல அரசியல் பிரதிநிதிகள் தலையிட்டுள்ளனர். அரசியல் முரண்பாடானது வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டது. ஆனால் முஸ்லிம், சிங்களவரிடையான ஏனைய முரண்பாடுகள், இரு குழுக்களதும் ஆரம்பத்திலான வெறுப்பு காரணமாகவும் பிரச்சினையானது இரண்டு பலமான, எதிரெதிரான அரசியல்வாதிகளுடன் இணைக்கப்பட்டதாலும் தீர்க்கப்படுவதற்கு நீண்ட காலமெடுத்தது.

முரண்பாடுகளைத் தீர்ப்பதில் பின்வரும் வியூகங்களும் முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

- உண்மையான ஆவலுடன் கலந்துலையாடலில் ஈடுபடல், சொந்த விருப்பங்களை விடுத்து தீர்வு காணலை நோக்கமாகக் கொண்டு செயற்படல்.
- கட்சி அங்கத்தவர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் நீண்ட கால தீங்குகளை விளங்கப்படுத்துதல்.
- முரண்பாட்டிற்கான உண்மைகள்/சரியான தகவல்களை அடையாளம் காணுதலும் அவற்றைப் பற்றிய திடமான/கடுமையான கருத்துக்களை கொண்டுள்ள மக்களுடனும் இவ்வாறான திடமான கருத்துக்களை குழுவினுள் உருவாக்குகின்ற, இயக்குகின்றவர்களுடனும் பயனுள்ள முறையில் தொடர்பாடுதலும்.
- பொலிஸாருக்கு அதிகாரபூர்வமாக முறையீடு செய்தல் மற்றும் நீதிமன்றத்தில் வழக்குகளைத் தாக்கல் செய்தல் போன்ற சட்ட பூர்வமான செயற்பாடுகள்
- முரண்பாட்டின் மையத்திலுள்ள நபர்களை இனங்காணுதலும் கலந்துரையாடல்கள் மற்றும் உடன்படிக்கைகளை அடையும் போது அவர்களை ஈடுபடுத்தலும்.

## 5.6 சமூக - பொருளாதார நிலைமைகள்

**ஜீவனோபாயம்**

எல்லைப்படுத்தப்பட்ட வளங்களுக்கான போட்டி வழமையான வீதத்திலும் அதிகளவில் அதிகரித்தமையானது மக்களின் ஜீவனோபாய முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியது. 1990 களில் யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளால் தங்களது வீடுகளிலிருந்து பலவந்தமாக மக்கள் வெளியேற்றப்பட்டு, இவ்வுள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் புத்தளத்தில் குடியேறியதிலிருந்து உள்ளூர் மக்கள் சமுதாயத்திற்கும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களிற்குமிடையே வளங்களுக்கு போட்டியான, அழுத்தமான நிலைமை காணப்படுகிறது. அரசாங்கம் புத்தளத்திலுள்ள மக்களுக்காக வளங்களை ஒதுக்கினாலும் அவர்களது சொந்த பிரதேசங்களுக்கு நிதியுதவிகள் தொடர்ந்து அனுப்பப்பட்டாலும் இங்குள்ள உள்ளூர் மக்களும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களும் சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகளில் அரிதாகவுள்ள வளங்களுக்காக போட்டி போடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (IDMC 2007).[4]

ஆய்வுசெய்யப்பட்ட பல முரண்பாடுகள் எல்லைப்படுத்தப்பட்ட வளங்களுக்கான மற்றும் ஜீவனோபாய வாய்ப்புகளிற்கான போட்டி காரணமாகவே ஏற்பட்டுள்ளது. இம்மாவட்டத்துள்ளான சனத்தொகைப் பெருக்கமானது இப்போட்டி நிலையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது. நாகவில்லுப் பிரதேசத்தில் முஸ்லிம்கள் சிங்களவர்களிடையிலான முரண்பாடானது முச்சக்கர வண்டி நிறுத்துமிடத்திற்கான போட்டி காரணமாகவே எழுந்தது.

புத்தள மாவட்டமானது ஏனைய மாவட்டங்களிலும் இயற்கை வளங்களில் குறைந்திருந்தாலும் பரந்தளவான ஜீவனோபாய முறைகளைக் கொண்டுள்ளது. இம்மாவட்டத்திலுள்ள பலர் உற்பத்திக் கைத்தொழலிலும் விவசாயத்திலும் ஈடுபட்டுள்ளனர். கணிசமானளவு மக்கள் மொத்த அல்லது சில்லறை வியாபாரத்தைத் தமது பிரதான வருவாயைத் தரும் தொழிலாகக் கொண்டுள்ளனர். கீழே தரப்பட்டுள்ள அட்டவணையிலான் தகவல்கள் இம்மாவட்டத்தில் உள்ள பல முக்கியமான தொழில் வகைகளின் சேர்த்தியைக் காட்டுகின்றன. நகர்ப்புறப் பிரதேசங்களில் உற்பத்தித் தொழில்கள் மிகவும் விருத்தியடைந்துள்ள அதே வேளை கிராமப்புறங்களில் பெரும்பலானோர் விவசாயத்திலும் மீன்பிடித்தொழிலும் ஈடுபட்டுள்ளனர். புவியியற் பிரதேசத்திற்கேற்ப செய்யும் தொழிலின் தன்மை வேறுபடுகின்றது. கடற்கரையோர மக்களின் பிரதான ஜீவனோபாயத் தொழில் மீன்பிடித்தொழிலாக இருக்க உள்நாட்டு மக்கள் விவசாயம் சார்ந்த செயற்பாடுகளில் இணைந்துள்ளனர்.

**அட்டவணை *5.1* பிரதான கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள மக்கள் தொகை**

| | |
|---|---|
| எல்லா வகையான கைத்தொழில்களும் | 229,425 |
| உற்பத்திக் கைத்தொழல் | 46,120 |
| விவசாயம் மற்றும் காட்டுத் தொழில் | 41,485 |
| மொத்த அல்லது சில்லறை வியாபாரம் | 28,534 |
| மூலாதாரக் கைத்தொழில்கள்-அடையாளப்படுத்தப்படாதவை அல்லது சிறியளவிலான<br>மீன்பிடித்தொழில் | 21,180<br>20,712 |
| பொது நிர்வாகமும் பாதுகாப்பும் | 13,436 |
| போக்குவரத்து, சேமிப்பு மற்றும் தொடர்பாடல் | 12,724 |
| கட்டட வேலைகள் | 12,696 |

*மூலம்: குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், 2001*

---

4. இலங்கையின் மேற்குப்பகுதியில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுடனும் அவர்களுக்கு உதவும் சர்வதேச, உள்ளு ர் அமைப்புக்களின் உத்தியோகத்தர் குழாமுடனுமான IDMC இன் நேர்காணல்களிருந்தான தகவல்கள் ஜுன் மற்றும் ஜுலை 2007

ஆய்வு செய்யப்பட்ட பிரதேசங்களிலான பிரதான தொழில் வாய்ப்புக்களாவன கடற்றொழில், விவசாயம், சில்லறை வியாபாரம், அரசாங்கத் தொழில்கள் மற்றும் ஆடைக்கைத்தொழில் என்பனவாகும். இப்பிரதேசத்தில் தொழில் வாய்ப்புக்கள் குறைந்தமையால் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளிற்காக இடம் பெயர்வது அண்மைக்காலப் போக்காயுள்ளது. சட்டபூர்வமான குறைந்த திறமைகளுடனான இடம்பெயர்வுகளும் மேலும் சில பதிலளிப்பாளர்களிடமிருந்து சில சட்ட விரோதமாக வெளிநாடுகளிற்கான இடம்பெயர்வுகள் பற்றியும் குறிப்பிடப்பட்டன.

> "எல்லோரும் பயிர்ச்செய்கைகளை நிறுத்தி விட்டு வெளிநாடுகளிற்கு வேலைகளிற்காக இடம்பெயர முயற்சிக்கின்றனர். முடிவுகளை அடைய கடினமாக இருப்பதால் அவர்கள் இத்தாலியை அடைவதற்காக அவர்களது உயிரைப் பணயம் வைத்து மாதக்கணக்கில் கடல் வழியாகப் பயணிக்கின்றனர். உயிரிழந்த சந்தர்ப்பங்களும் உள்ளன. ஆனால் மறுகரையை அடைய முடிந்தவர்கள் அவர்களது வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் கண்டுள்ளனர். சட்டங்களைப் பயன்படுத்தி இவ்வாறாக வேலைக்காக வெளிநாடு செல்வதைத் தடுப்பது தவறானதாகும். சர்வதேச உறவுகளுக்காகவே இச்சட்டங்கள் பின்பற்றப்படுகின்றன என்பதை நாம் உணர்ந்துள்ளோம். ஆனாலும் அரசாங்கம் இவற்றை அமுல்படுத்துவதில் சிறிது தயவு காட்டலாம் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் நாட்டின் அபிவிருத்திக்கு உதவுவதற்காக ஏனைய நாட்டிலிருந்து மில்லியன் கணக்கான பணத்தினை இலங்கைக்கு இறுதியில் கொண்டு வருகிறார்கள்."
>
> (குழுக் கலந்துரையாடல் *1*, உடப்பு)

> "வீட்டிலுள்ள பிரச்சினைகள் காரணமாகப் பாதிப் பெண்கள் இங்கு வேலை செய்யத் தொடங்கியுள்ளனர். ஏறத்தாழ 20 பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பணிப்பெண்களாக வேலை செய்கின்றனர். ஒரு சிலர் அவர்களது சொந்த வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளனர்."
>
> (பெண், *35*, நுரைச்சோலை)

இம்மாவட்டத்திலுள்ள பல சமூகங்களின் பிரதான ஜீவனோபாயச் செயற்பாடானது கடற்றொழிலாகும். அட்டவணை 5.1 இலிருந்து இதுவே புத்தளத்திற்கு வருவாயை ஈட்டித்தரும் ஐந்தாவது வருவாய் முதலாகும். இத்துறையில் தொழில் செய்வோர் ஆழ் கடலில் மீன் பிடித்தல், களப்புகளில் மீன்பிடித்தல் மற்றும் இறால் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோராவர். பலர் கூலிக்காக வேலை செய்கின்றனர். சிலர் மீனவர்களின் மீன்பிடிக்கும் படகுகள் மற்றும் வலைகளை வாங்கி முதலீடு செய்துள்ளனர். குறிப்பிட்ட சில காலங்களில் பாதுகாப்புக் காரணங்களால் ஆழ்கடலில் மீன்பிடிக்கப்பதற்கான தடைகள் மீன்பிடிக்கைத்தொழிலின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகின்றனது. பெரிய அளவிலான முரண்பாடுகள், முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அண்மையில் வாழும் மக்களின் ஜீவனோபாயத்தையும் பாதிக்கின்றது. குறித்த சில காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் பற்றிய பயமும் இச்சமூகங்கள் கடலிற்கு செல்வதைத் தடுக்கின்றது.

> "பெரும்பாலான மக்கள் ஆழ்கடல் மீன்பிடித்தல், இறால்கள் பிடித்தல், மேசன் வேலை மற்றும் தச்சு வேலைகளையும் செய்கின்றனர்"
>
> (குழுக் கலந்துரையாடல் *1*, உடப்பு)

> "உடப்புவிலுள்ள எம்மில் பலருக்கு பாரம்பரியமான பிரதான வருவாய் ஈட்டித்தருவது மீன்பிடித் தொழிலாகும். இரவு காலங்களில் மீன்பிடித்தலிற்கு உள்ள தடைகள் இவ் வாழ்வாதாரத்தை எதிர்காலத்தில் பாதிக்க முடியும்."
>
> (குழுக் கலந்துரையாடல் *1*, உடப்பு)

> "ஒவ்வொருவருடமும் மீன்பிடித்துறையிலான இவ்வாபத்தான நிலை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இரவுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல் பற்றிய

பயம் உள்ளது. இப்பாதுகாப்புப் பிரச்சினைகள் காரணமாக இரவில் மீன்பிடிக்கப் போக முடியாது. பெற்றோல் விலை உயர்ந்து கொண்டே போகின்றது. அவர்களை அங்கு மீன்பிடிக்க அனுமதித்தால் எரிபொருள் செலவுகளையும் குறைக்க அது உதவுமென நான் நினைக்கின்றேன். எங்களிடம் அனுமதி அட்டை வைத்திருக்கும் திட்டமுள்ளது (Pass system). மீன்பிடிக்கும் காலம் மு.ப. 5 மணியிலிருந்து பி.ப. 6 மணிவரையாகும். இப்பிரதேசங்களில் இறால்களிற்கு அதிக கேள்வியுள்ளது."

(முக்கிய நபர் நேர்காணல், ஆண், வனாதவில்லு)

பல குடும்பங்களில் குடும்பத்தின் ஜீவனோபாயத்திற்கான வருவாயைக் கொண்டுவருகின்ற தொழில் பொதுவாக கூலி வேலை செய்தலாகும். இவ்வகையான வேலைகளிற்கு குறைந்தளவு திறமையே தேவைப்படுவதால், விசேட திறமையற்றவர்களுக்கும் கூலி வேலையாட்களாக வேலை தேடிக் கொள்வது இலகுவாகும். இத்தொழிலானது விவசாயம் முதல் கைத்தொழிற்துறை வரை இப்பிரதேசத்தில் கிடைக்கக் கூடிய வேலையின் வகையில் தங்கியுள்ளது. இரு பருவத்திற்குரியதாகவும் இருக்கலாம்.

"நாம் பிரதானமாக கூலி வேலையில் ஈடுபட்டுள்ளோம். பருவத்திற்குப் பருவம், வேலைவாய்ப்புக்களுக்கேற்ப இவ்வேலையின் வகையும், தன்மையும் மாறுகின்றது. சுய தொழிலாக செய்பவர்களும் அதே போல் கூலி வேலை செய்பவர்களும் சீமெந்துக் கல் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். சிலர் தென்னந் தோட்டங்களில் வேலை செய்கின்றனர். ஒரு சிலர் அரச துறையில் வேலைபார்ப்பதுடன் இன்னும் சிலர் தம் சொந்த நிலங்களிலிருந்து வருவாயைப் பெறுகின்றனர். இன்னும் சிலர் உப்பளம், தனியார் உப்பளங்களிலும் வேலையாட்களாக வேலை செய்கின்றனர்."

(குழுக் கலந்துரையாடல், பாலாவி)

மாவட்டத்தின் கிராமப்புறப் பிரசேதங்களில் தொழில் வாய்ப்புக்களை வழங்கும் முக்கிய வாழ்வாதாரமாக விவசாயத்துறை காணப்படுகிறது. தென்னந்தோட்டப் பயிர்ச் செய்கைகளைத் தவிர இம்மாவட்டததில் வளர்க்கப்படும் பிரதான பயிர்களாவன மரக்கறிகள், வெங்காயம் மற்றும் நெல் என்பனவாகும். பயிர்ச் செய்கைக்கான நீர்ப் பற்றாக்குறையாலும் மண்ணின் வளமின்மையாலும் இப்பிரதேசத்து மக்கள் பயிர்ச்செய்கையிலிருந்தும் விலகி இறால் பண்ணையை நோக்கி நகர்வதாகக் குறிப்பிடப்படுகிறது. இம்மாற்றமானது தொழில்களுக்காக மக்களை சமுதாயத்தை விட்டும் வெளியேறச் செய்துள்ளது.

"எம்மிடம் வெங்காயம் மற்றும் ஏனைய மரக்கறிகள் உள்ளன. மரக்கறிகள் சந்தைக்கு அல்லது கொழும்புக்கு விற்பனைக்காக எடுத்துச் செல்லப்படுகின்றன. மேலும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கு அங்கு பல கடைகள் உள்ளன."

(பெண், 35, நுரைச்சோலை)

"பெரும்பாலான மக்கள் வெங்காயம், மிளகாய் மற்றும் புகையிலைப் பயிர்ச்செய்கையிலும் மீன்பிடித்தலிலும் ஈடுபட்டிருக்கின்றனர். சம அளவான மக்கள் இவ்விரு தொழிலிரும் ஈடுபட்டுள்ளனர். ஏறத்தாழ 4 அல்லது 5 பேர் அரச தொழில்களில் உள்ளனர். சில இளம் பெண்கள் மாறவில மற்றும் சிலாப நகரங்களில் தங்கியிருந்து ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர். சில ஆண்களும் சமூகத்திலிருந்து வெளியேறி வேலை செய்கின்றனர். மேலும் சில குடும்பங்கள் இறால் பண்ணைகளையும் ½ முதல் 2 ஏக்கர் வரையான தென்னந் தோட்டங்களையும் வைத்துள்ளனர். இந்நிலங்களிலிருந்து அவர்களால் ஒரு பருவத்திற்கு 300 - 500 வரை தேங்காய்கள் பறிக்க முடியும். அவர்கள் தல்லாலா (தேங்காயிலான ஒரு மென் பானம்) செய்கின்றனர். இது பருவத்துக்குரிய ஒரு ஜீவனோபாய முறையாகும். சமுதாயத்தில் மிகவும் கஷ்டமான நிலையிலுள்ள குடும்பங்கள் வருடத்துக்கு ஒரு தரம் இதில் ஈடுபடுகின்றன."

(குழுக் கலந்துரையாடல் 2, உடப்பு)

> "நீர்ப்பிரச்சினை காரணமாக இச்சமுதாயத்தில் நாம் எந்தவொரு பயிர்ச்செய்கையும் செய்வதில்லை. நீர்ப்பாசன விவசாயத்திற்காக அருகிலுள்ள பழைய குளத்தை புதுப்பிக்க வேண்டும். இதற்கு 40 – 50 இலட்சம் வரை செலவாகும்."
>
> (ஆண், 41, சிறிமாபுரம்)

## ஜீவனோபாய முறையிலான மாற்றங்கள்

ஆய்வு செய்யப்பட்ட பிரதேசங்களிலான ஜீவனோபாய வகைகளும் முறைகளும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையுடன் மாற்றமடைந்துள்ளதாகவே காணப்படுகின்றது. ஆரம்ப கட்டங்களில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களால் உள்ளூர் சமுதாயங்களிற்கு புதிய வாழ்வாதாரச் செயற்பாடுகள், தொழிநுட்பங்கள் மற்றும் வேறு பல முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வாய்ப்புகள் நிரம்பலுற்ற பின், எல்லைப்படுத்தப்பட்ட அளவான வாய்ப்புகளுக்காக பல்வேறுபட்ட மக்கள் பிரிவினர் ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டனர். இதனால் உருவான அழுத்தமான சூழ்நிலை பல சந்தர்ப்பங்களில் முரண்பாடுகளிற்கு இட்டுச் சென்றுள்ளது.

> "உள்ளூர் மக்களின் ஜீவனோபாயமானது உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இப்போது இங்கு மீன்பிடித்தல் மற்றும் வியாபாரம் போன்ற பல ஜீவனோபாயத் தொழில்களுக்காக உள்ளூர் மக்களுக்கும் உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்களுக்குமிடையே போட்டி நிலவுகின்றது. பயிர்ச்செய்கைக்காக மற்றும் குடியிருப்புக்களுக்காக உள்ள நிலத்தினளவு குறைந்து கொண்டே வருகிறது. இப்பிரச்சினை உள்ளூர் மக்களையும் அதே போல் உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்களையும் பாதிக்கும். உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் வீடுகளை அமைத்துக் கொள்வதற்காக 10 பேச்சர்ஸ் காணியே வழங்கப்பட்டனர். இப்போது அவர்களது பிள்ளைகளுக்கு சீதனமாகக் கொடுப்பதற்காக இந்நிலமும் துண்டாடப்பட்டு வருகிறது."
>
> (ஆண், 51, நுரைச்சோலை)

அமரசிரி டி சில்வாவின் கூற்றுக்களின்படி உப்புக் கைத்தொழில் நடக்கும் பிரதேசங்களில் உள்ளூர் சமுதாயத்திற்கும், உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்குமிடையே கூலி வேலைக்காகப் போட்டி புத்தளத்தில் உள்ளூர் மக்களுக்கும் உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்களுக்கும் இடையிலான அழுத்தங்களிற்கான அடிப்படைக் காரணமாகும். உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்கள் இப்பிரதேசத்தின் பாரம்பரிய வேலைப்படையான சிங்கள மக்களுக்குப் போட்டியாக உடல் ரீதியான வேலைகளில் ஈடுபட கூடுதலான விருப்பம் காட்டியமையால் உப்பு உற்பத்திக் கைத்தொழிலில் இவர்கள் வேலையாட்களாகப் பயன்படுத்தப்பட்டனர்.

உப்பு உற்பத்தி செய்யும் பிரதேசங்களில் வேலை செய்த புத்தளத்தின் பாரம்பரிய வேலைப்படையானது இப்போது தொழில்களைப் பெறுவதற்கு கஷ்டப்படுகின்றது. புத்தளத்திலுள்ள உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் இப்போது களப்புகளிலும் மற்றும் கடலிலும் மீன்பிடிக்க ஆரம்பித்துள்ளனர். இது இப்பிரதேசத்தின் பரம்பரை மீனவர்களின் மீனவ உரிமையை பங்கப்படுத்துவதாக கருதப்படுகிறது (டி சில்வா, 1999).

ஜீவனோபாயம் சம்பந்தப்பட்ட போட்டி அடையாளங்கள் அடிப்படையிலான பிரிவுகளிலும் பல்வேறு சமுதாயங்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவிக்கலாம். இவை இயற்கை வளங்களின் அடிப்படையான வாழ்வாதாரங்களிலும் மற்றும் முறைமையான துறைகளிலும் பல்வேறு வழிகளில் வெளிக்காட்டப்படுகின்றன. இயற்கையிலேயே புத்தளம் மாவட்டமானது தொழில் வாய்ப்புக்களை உருவாக்கக் கூடிய மற்றும் இப்பிரதேசத்தவர்களுக்கு பல்வேறுபட்ட வாழ்வாதார முறைகளை வழங்குவதற்கான இயற்கை வளங்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கொண்டுள்ளது. இத்தட்டுப்பாடுகளுடனான நிலையானது உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையுடன், அதிகளவு போட்டிக்குள்ளாகியுள்ளது. ஜீவனோபாயத்தைத் தொடர்வதற்கு அவசியமான இயற்கை வளங்களுக்கு சில பிரிவினர் உரிமை கோருகின்றனர். இது ஏனைய சமுதாயத்தினர் இவ்வளங்களை

பயன்படுத்துவதைத் தடுக்கும். இச்சூழ்நிலை ஏனைய சமுதாயங்கள் இவ்வளங்களைப் பெறுவதற்கு முயற்சிக்கும் போது சமுதாயங்களிடையே அழுத்தங்களைத் தோற்றுவிக்கின்றது.

முறையான தொழிற்துறைகளில் விசேடமாக மாவட்டத்தினுள் உள்ள அரச துறையில் உள்ள பதவிகளும் நிலைகளும் எல்லைப்படுத்தப்பட்டதாக காணப்படுவதுடன் இவற்றுக்கான வெற்றிடங்களை நிரப்புவதில் போட்டியும் அதிகரித்துள்ளதால் அழுத்தங்கள் வெளிப்படுகின்றன. பதவியிலுள்ள மக்கள் இப்பதவிக்கு ஆட்சேர்க்கும்போது பாரபட்சமாக நடந்து கொண்டு ஒரு குழுவிற்கு சார்பாக செயற்படுகிறார்கள் என்று சில பிரிவினர் உணரும் போது இந்நிலமை இன்னும் மோசமாகின்றது. உதாரணமாக நிர்வாக மட்டத்திலான பதவிகளும் ஆசிரியர் வெற்றிடங்களும் இவ்வாறே நிரப்பப்படுவதாக ஒரு உணர்வு உள்ளது.

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களால் சிறப்பான தொழினுட்பங்களும் புதிய வாழ்வாதார முறைகளும் உள்ளூர் சமூகத்திற்கு கொண்டு வரப்பட்டன. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் புதிய வியாபாரங்களில் முதலீடு செய்யத் தொடங்கியதால் அவர்களின் வருகையின் பின் பல கிராமங்கள் சிறிய கிராம மையங்களை விருத்தி செய்தன. இப்புதிய ஜீவனோபாய முறைகளில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுடன் போட்டியிட முடியாதென உள்ளூர் மக்கள் உணர்கின்றனர். இந்நிலைமையானது உள்ளூர் மக்களிடையே அவர்களுக்கும் சேர்த்து எல்லைப்படுத்தப்பட்ட அளவிலாக உள்ள வாய்ப்புக்களை, உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் மேலும் சுரண்டுகிறார்கள் எனும் எண்ணத்தைத் தோற்றுவித்துள்ளது.

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் இப்பிரதேசத்திற்கான வருகையும் அவர்களின் நீண்ட காலக் குடியிருப்பும் உள்ளூர் மக்களின் கூலி வேலைச் சந்தையை போட்டிக்குள்ளாக்கியுள்ளதுடன் அவர்களைத் தொழிற்சந்தையிலிருந்தும் தள்ளிவிட்டுள்ளது. இப்பிரதேசத்திலான கட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தொழில் வாய்ப்புக்களும் கூடுதலான வேலைப்படையும் வேலைக்கான கூலியில் குறைவை ஏற்படுத்தியுள்ளது. இலவச உலர் உணவு அட்டைகள் (Food ration) வடிவிலான அரச மற்றும் அரச சார்பற்ற நலன்விரும்பி நிகழ்ச்சித் திட்டங்கள் குறிப்பாக IDP களை இலக்காக்கி வழங்கப்பட்ட நிதி மற்றும் பொருள் உதவிகளே அவர்களை குறைந்த கூலிகளுக்கும் வேலை செய்யவைத்துள்ளன என ஏனைய குழுக்கள் எண்ணுகின்றனர்.

> "இது மட்டுமன்றி வேலை வாய்ப்புக்கள், நீர் மற்றும் போக்குவரத்து எல்லாம் பிரச்சினையாகவுள்ளன. உள்ளூர் மக்கள் கூலி வேலைக்காக ஒரு நாளைக்கு ரூபா 500 வீதம் பெறும்போது உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்கள் நாளொன்றுக்கு ரூபா. 200 வீதமாக கூலிக்கு வேலை செய்கின்றனர். குறைந்த கூலியைப் பெறுவது உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒரு பிரச்சினையல்ல. ஏனெனில் அவர்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. எனவே அவர்கள் கூலி வேலை செய்து சம்பாதிப்பதை சேமிக்கவும் முடியும்."
>
> "உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையின் பின்னர் தோன்றிய பிரதான பிரச்சினை தொழில் நெருக்கடியாகும். அலுவலகங்களில் வேலை செய்யும் மக்களுக்கான தொழில் வாய்ப்புக்கள் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அரசாங்கமும் கூட இவர்களுக்கே முன்னுரிமை கொடுக்கின்றது. கைத்தொழிற் பேட்டை ஒன்றை ஆரம்பிப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இச்சூழ்நிலை மாறுமா என்பது தெரியாது."
>
> (முக்கிய நபர் நேர்காணல், ஆண், பாலாவி)

மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்களுக்கான போட்டி வளர, மக்கள் வேறு பிரதேசங்களில் தனது கவனத்தைத் திருப்பியுள்ளனர். இது இப்பிரதேசத்தை விட்டும் வெளியேறுவதைத் தூண்டியுள்ளது. இவ்வெளியேற்றமானது இலங்கைக்குள்ளேயும், வெளிநாடுகளுக்கும் நடைபெறுகிறது. குறித்த அடையாளத்தை கொண்ட குழுவினர் ஜீவனோபாயத்திற்காக நாட்டுக்குள் குறித்த பிரதேசங்களுக்கு இடம் பெயர்வதானது சந்தேகங்களைத் தோற்றுவிப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக தமிழ்

மக்களை இப்பிரதேசத்தின் ஏனைய மக்கள் சந்தேகத்திற்கிடமானதாக நோக்குகின்றனர். பெண்களின் பொதுவான உணர்வானது இப்பிரதேசத்தில் தொழில் வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதால் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களே குடும்ப வருமானத்தை ஈட்டித்தரும் முக்கிய வழியாகும் என்றே உள்ளது.

### சேவைகள்

பல உள்வாரியாக இடம்பெயர்ந்தோரின் குடியிருப்புக்கள் பிரதான சாலைகளுக்கும் நகரங்களுக்கும் அண்மையில் அமைக்கப்பட்டுள்ளன. உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்களின் சார்பாக இருந்த, அரசியல் செல்வாக்குள்ள அதிகாரிகளாலும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றத்திற்காக செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களாலுமே இவர்கள் இவ்வாறு குடியமர்த்தப்பட்டுள்ளனர். இங்கு வேறு எந்த வெளி உதவிகளுமின்றி தமது சொந்த சொத்துக்களையும் மாத்திரம் கொண்டுவந்த உள்வாரியாக இடம்பெயர்ந்த தனி நபர்களும், குழுக்களும்கூட உள்ளனர். இவ்வாறான பிரதான வீதிகளிற்கு அண்மையில் குடியேற்றங்கள் இருக்கும்போது அவர்களுக்கு போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற பல சேவைகள் கிடைக்கப்பெறுவதை இலகுவாக்கின்றது.

> "நாம் கொழும்பு - புத்தளம் நெடுஞ்சாலையில் இருக்கிறோம். எனவே சுகாதாரம், கல்வி போன்ற வசதிகளை இலகுவாகப் பெற்றுக் கொள்கிறோம். ஏனெனில் இங்கு சிறந்த போக்குவரத்துச் சேவைகள் உள்ளன. நாம் இங்கு வந்தபோது இவ்வளவு விருத்தியடைந்திருக்கவில்லை."
>
> (ஆண், 60, சிறிமாபுரம்)

> "நாம் பிரதான சாலைக்கு அண்மையில் வாழ்கிறோம். எனவே போக்குவரத்து இலகுவாகும். ஆனால் போக்குவரத்துக்கான செலவு அதிகம் இன்னும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இலகுவான போக்குவரத்து சேவைகள் காரணமாக எமக்கு கல்வி வசதிகளையும், மருத்துவ வசதிகளையும் இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்."
>
> (முக்கிய நபர் நேர்காணல், 50, சிறிமாபுரம்)

உள்ளூர் சமுதாயம், தாம் உள்ளூர் மக்களாக இருந்தும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களிலும் வறியவர்களாக இருந்தும் கூட உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கே சிறந்த சேவைகள் வழங்கப்பட்டுள்ளதாக உணர்கின்றனர். இதற்கு மாறாக, உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் முகாம்களிலும் சேவைகளைப் பெறாத நிலையில் மக்கள் உள்ளனர்.

> "சில உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் முகாம்களில் வாழ்கின்றனர். அவர்களுக்கு முறையான வீட்டு வசதிகளோ, குடிநீரோ அல்லது நிலையான வருமானம் ஈட்டும் வசதிகளோ இல்லை."
>
> (ஆண், 51, நுரைச்சோலை)

> "இப்பிரதேசத்திற்கு வழங்கப்படுகின்ற சேவைகள் முன்னேற்றமடைந்த போதும் வளங்களுக்கான பற்றாக்குறை இன்றும் நிலவுவதுடன் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையுடன் சேவைகளுக்கான கேள்வி உயர்ந்ததால் நிலைமை இன்னும் மோசமாகியுள்ளது."
>
> (ஆண், 51, நுரைச்சோலை)

காணிகளின் திடீர் விலை அதிகரிப்பும் இப்பிரசேத்திலான வளப்பற்றாக்குறையை சுட்டிக்காட்டுகின்றது. விலையுயர்வானது கேள்வி அதிகரித்தமையால் மாத்திரம் ஏற்பட்டதாகும். மேலும் இது எல்லைப்படுத்தப் பட்ட விநியோகத்தை வெளிக்காட்டுகின்றது.

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் குடியேற்றங்களில் உள்ள மக்கள் இன்னமும் சுகாதாரக் கேடுகள் மற்றும் விரைவாகப் பரவும் நோய்களால் அடிக்கடி பாதிக்கப்படுகின்றனர்.

குடியேற்றங்களின் முறையற்ற வடிகாலமைப்புகளால் இங்கு ஏற்படும் வெள்ளப்பெருக்குகள் சுகாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். கிணறுகளும் மலசல கூடங்களும் அருகருகாமையில் அமைந்திருப்பதால் நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும்.

"பல வீடுகளில் கிணறுகளும் மலசல கூடங்களும் அருகருகே உள்ளன. அவர்களுக்கு 10 பேச்சர்ஸ் நிலமே காணப்படுவதால் கிணறுகளுக்கும் மலசல கூடங்களுக்குமிடையில் போதுமானளவு இடத்தைப் பேண முடியாதுள்ளது."

(பெண், 22, நுரைச்சோலை)

"இக்குடியிருப்பில் எம்மிடம் வடிகாலமைப்புத் திட்டங்கள் இல்லை. மழைக்காலங்களில் பெரிய பிரச்சினைகளிற்கு முகம் கொடுக்கிறோம். அக்காலங்களில் வெள்ளம் ஏற்படுவதால் பல வித்தியாசமான நோய்களால் பாதிக்கப்படுகிறோம்."

(ஆண், 50, சிறிமாபுரம்)

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் உள்வாங்குகையின் பின்னர் கல்விச் சேவையில் முன்னேற்றம் காணப்பட்டபோதிலும் எல்லோருக்கும் வழங்கக்கூடியதாக இவ்வதிகரிப்பு போதுமானதா என்பது பிரச்சினைக்குரிய ஒரு விடயமாகவே காணப்படுகிறது. இப்பிரதேசத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கை, பௌதிக இடம் மற்றும் பாடசாலைகளின் எண்ணிக்கை தொடர்பான பிரச்சினைகள் உள்ளன.

"கல்வி சம்பந்தமாக எமக்கு இன்னும் பிரச்சினைகள் உள்ளன. உதாரணமாகக் கட்டடங்கள் போதவிலல்லை என்பதுடன் பகுதி நேர வகுப்புகளுக்காக நாம் எமது பிள்ளைகளை வெகுதூரம் அனுப்புகிறோம். இப்பாடசாலைகளில் விஞ்ஞானம் மற்றும் கணிதப் பிரிவிலான பாடங்கள் இல்லை."

(பெண், 49, நுரைச்சோலை)

சில சமுதாயங்கள் தமது அடையாளம் மற்றும் இனம் காரணமாக தாம் அரசாங்கத்தாலும் மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களாலும் ஓரப்படுத்தப்பட்டுள்ளதாக உணர்கின்றன. இப்பிரதேசங்களில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் அபிவிருத்திக்காக ஒரு சில தலையீடுகளே மேற்கொள்ளப்படுகின்றன. தனி நபர்களின் உதவியுடன் விகாரை கோவில் நிர்வாகக்குழு போன்ற உள்ளூர் அமைப்புக்கள் மற்றும் மதத் தலைவர்கள் இவ்வபிவிருத்திச் செயற்பாடுகளை ஊக்கப்படுத்துவதில் ஈடுபடுகின்றன. இத்திட்டங்களில் போக்குவரத்து வசதிகள் போதாமையானது கல்வி மற்றும் சுகாதார சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான தடையாக இருந்துள்ளது.

"அவர்கள் மீன்களை இங்கிருந்து நாட்டின் பல பாகங்களுக்கு எடுத்துச் செல்கின்றனர். ஆனால் அவர்கள் இப்பாதையைக் கூட சீர்செய்யவில்லை. முன்னர் நாம் நாமாகவே பாதைகளைக் கூட்டிக் கொண்டோம். இப்போது நாம் அதனை நிறுத்தியுள்ளோம். நாம் அதனால் களைப்படைந்து விட்டோம். எமக்கு மின்சாரம் கிடைத்து ஒரு வருடமாகப் போகின்றது."

(குழுக் கலந்துரையாடல் 2, உடப்பு)

"சரியான போக்குவரத்து வசதிகள் இன்மையால் சிறுவர்களின் கல்வி மட்டம் பின்தள்ளப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் 5 ஆம் தரத்திற்கு மேலாக சிறுவர்களுக்குப் பாடசாலை இல்லை. நல்ல வாழ்க்கைத் தரத்திலுள்ள மக்கள் தமது பிள்ளைகளை ஊருக்கு வெளியில் தங்கவைத்து கல்வி வழங்குகின்றனர்."

(குழுக் கலந்துரையாடல் 2, உடப்பு)

"அரசாங்கத்தின் பார்வையில் நாம் ஒரு சிறுபான்மைக் குழுவினராக இருப்பதால் இப்பாடசாலைக்கு போதுமானளவு ஆசிரியர்களை வழங்குவதில்லை."

(முக்கிய நபர் நேர்காணல், ஆண், வனாதவில்லு)

## 5.7 உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்களும் முரண்பாடும்

புத்தளமானது 1990 இலிருந்து 17 வருடங்களாக அங்கு வாழ்கின்ற 60,000 உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களைத் தற்போது கொண்டுள்ளது. UNHCR இன் படி 80,000 இற்கும் மேற்பட்ட உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் 1990 காலப்பகுதியில் வந்தனர். 1995 களில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் தொகை 52,555 ஆகக் குறைத்து மீண்டும் 2001.:.2002 இல் 81,707 ஆக அதிகரித்தது. தரவுகளுக்குரிய மூலங்களின் அடிப்படையில், புத்தளத்தின் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் பற்றி கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களில் முரண்பாடுகள் உள்ளன.[5]

பெருமளவான முஸ்லிம்கள் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாட்டின் வடபகுதியிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து குடிவந்தனர். உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பான்மையினர் மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களாவர் (72%). 14% ஆனோர் யாழ்ப்பாணத்தில் இருந்தும், 10% ஆனோர் முல்லைத்தீவிலிருந்தும் மற்றும் 3% ஆனோர் கிளிநொச்சியிலிருந்தும் வந்தவர்களாவர். வவுனியாவிலிருந்து குடிபெயர்ந்து வந்த மக்களுமுள்ளனர். 2004 இலான கணக்கெடுப்புகள் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுள் 99% ஆனோர் முஸ்லிம்கள் எனச் சுட்டிக்காட்டுகின்றன. புத்தளம் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த சிங்கள, தமிழ் குடும்பங்கள் இருந்தாலும் இவை மொத்தத்தில் 1% இலும் சற்றுக் கூடுதலாகும். (UNHCR 2006).

அறிக்கைகளுக்கேற்ப புத்தளத்திலான உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் தொகை சிறிது வேறுபடுகின்றது. UNHCR இனால் வெளியிடப்பட்ட தரவுகளின் படி 2006 இல் புத்தளத்தில் 63,145 உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் வாழ்ந்து வந்தனர். மே மாதம் 2003 இல் டி.சில்வாவினால் நடத்தப்பட்ட ஆய்வுகளின் படி யுத்தத்தால் மன்னாரிலிருந்து வெளியேறிய 66,200 முஸ்லிம்கள் புத்தளத்தில் பதிவாகியிருந்தனர். இவர்கள் புத்தளம் மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 10% ஆக உள்ளனர்.

### உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்களுக்கான வரைவிலக்கணம்

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் எனப்படுவோர் ஆயுதமேந்திய போராட்டம், பொதுவான வன்முறை சூழ்நிலைகள், மனித உரிமை மீறல்கள் அல்லது இயற்கையான அல்லது மனித நடவடிக்கைகளாலான அழிவுகளால் ஏற்படும் விளைவுகளுக்காக வாழிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட அல்லது வெளியேறக் கட்டாயப்படுத்தப்பட்ட, மேலும் சர்வதேச ரீதியாக இனங்காணப்பட்ட ஒரு நாட்டுக்குரிய எல்லைக்கப்பால் போகாத தனிநபர்கள் அல்லது மக்கள் கூட்டங்களாவர.

உள்வாரியான இடம்பெயர்விற்கான வழிகாட்டிக் கொள்கைகள், ஐக்கிய நாடுகள் (1998)

### நீண்டகால இடம்பெயர்வு

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் தேவையுடையோர் (உடனடி உதவி தேவைப்படுபவர்) என்றும், இடம்பெயர்ந்த பிரதேசங்களில் தற்காலிகமாக வாழ்பவர்கள் என்றும் விளங்கிக் கொள்ளப்படுகின்றனர். (உள்வாரியான இடம்பெயர்வினை ஆராய்தல், மாநாட்டு அறிக்கை, 2003) உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் ஒரு புதிய சூழலில் தமது பிறப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்லும் நம்பிக்கையுடன் வாழ்ந்து வருவதால் அவர்கள் ஒரு தற்காலிகத் தன்மையைக் கொண்டுள்ளனர். தற்காலிக வாழிடங்களில் வாழுதல், சொந்த நிலங்களுக்குப் போக முடியாமை, வாழ்வாதார வாய்ப்புக்கள் இல்லாமை, சேவைகள் வழங்கலிலான பற்றாக்குறை மற்றும்

---

5. 1990, 1995, 2001-2002 UNHCR அறி க்கை.

இடம்பெயர்வுடன் தொடர்புபட்ட ஆபத்துக்கள் போன்ற நிலைமைகள் அவர்களை மேலும் பலவீனப்படுத்துகின்றன.

மேற்குறிப்பிட்ட தற்காலிகத் தன்மையுடனும் அதன் வெளிப்பாடுகளுடனும் புத்தளத்தில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் 17 வருடங்களாக வாழ்ந்து வருகின்றனர். உடனடியான இடம்பெயர்வுச் சூழ்நிலைகளிலும் விட நீண்டகால இடம்பெயர்வில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் கூடுதலாக நிலையான தன்மையை கொண்டுள்ளனர். புத்தளத்தில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் 17 வருடங்கள் வாழ்ந்தமையானது அவர்களது சமுதாயத்தில் கணிசமானளவு மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது. புத்தளத்திலுள்ள உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள், உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கான இலட்சிய வரைவிலக்கணத்திலிருந்தும், நாட்டிலுள்ள ஏனைய தற்காலிகமாக உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களிலிருந்தும் வேறுபட்ட விதத்தில் நோக்கப்பட வேண்டும்.

2006 UNHCR இன் ஆய்வுகளின் படி, புத்தளத்திலுள்ள பெரும்பாலான உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் புத்தளம் வாழ் மக்களுடன் உண்மையிலேயே இணைந்து விட்டனர். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 74% ஆன உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் புத்தளத்தில் நிலம் பெற்றுள்ளனர். 58% ஆனோர் தமக்கு புத்தளத்தில் வீடுகள் உள்ளதாக தெரிவித்துள்ளனர். இது புத்தளத்திலுள்ள உள்வாரியாக இடம்பெயர்நத மக்கள் வித்தியாசமானவர்கள் எனக் காட்டுகின்றன. 2002 மற்றும் 2006 இற்கிடையான யுத்த நிறுத்தக் காலங்களில் 7,35,000 உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களில் 4,18,500 மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளனர்.[6] யுத்த நிறுத்த உடன்படிக்கை முறிந்ததும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கான விருப்பம் குறைகின்றது. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் இளம் சந்ததியினர் அவர்கள் புத்தளத்தின் சூழலுக்கும் கலாசாரத்திற்கும் பழக்கப்படுத்தப்பட்டுவிட்டதால் அவர்கள் திரும்பிச் செல்வதற்கு எவ்வித விருப்பமும் காட்டுவதில்லை.

அவர்களின் நீண்ட கால இருக்கையில் அவர்கள் உள்ளூர் மக்களுடன் இணைந்து கலந்ததுடன் புதிய உறவுகளையும் உருவாக்கினர். அவர்களின் சொத்துக்களின் உரிமைகளிலும் பல வருடங்களாக இடம்பெற்று வரும் சமூக மாற்றங்களிலும் இதனைக் காணலாம். இவ்வாய்வானது உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் நிலையான வீடுகளுக்கு மற்றும் நிலங்களுக்கு உரிமை கொண்டு, புதிய வியாபாரங்களைத் தொடங்கி புத்தளத்தின் குடித்தொகையுடன் இணைந்துவிட்டதைக் காட்டும் சான்றுகளை வழங்குகின்றன.

> “அவர்களுக்கு புத்தளத்தில் வீடுகளும் சொத்துக்களும் உள்ளன. மன்னாரிலும் கூட உள்ளன.”
>
> (முக்கிய நபர் நேர்காணல், பெண், நாகவில்லு)

இவர்களை இணைய வைத்த நுண்ணிய மாற்றங்கள் இப்பிரதேசத்தின் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் உள்ளூர் சமூகத்தின் சமூக வலையமைப்புக்களிலான மாற்றங்களினூடு காண முடிகின்றது.

> “உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் இங்கு வழக்கத்திலிருந்த நன்கு பழக்கமான தொழில்களுடன், புதிய தொழில்களையும் தொடங்கினர். அவர்களது கல்வித் தரம் விருத்தியடைந்தது. இப்பிரதேசத்திலிருந்து பல்கலைக்கழகம் செல்லும் பெரும்பாலான மாணவர்கள் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களிலிருந்தாவர். உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் வாழ்ந்தபோது அவர்களின் பெண்கள் வீடுகளை விட்டு வெளியே வருவதில்லை. ஆனால் இப்போது இங்கே வந்த பின் சமூகமயமாகியுள்ள அவர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். இப்போது

---

6. ஐக்கிய நாடுகள் மத்திய அவசர காலத் தேவைகளிற்கான நிதியம்.

உள்ளூர் மக்களுக்கும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்குமிடையே திருமணங்கள் நடப்பதும் காணக்கூடியதாக உள்ளது. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் இருந்த போது அவர்கள் முஸ்லிம்களுடன் மாத்திரமே தொடர்பு கொண்டிருந்தனர், குறித்த சில தொழில்களில் மாத்திரமே ஈடுபட்டிருந்தனர். இருந்தாலும் இங்கு வந்ததன் பின்னர், அவர்கள் ஏனைய இனப் பிரிவினருடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளதுடன் பல வகையான தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர்."

(முக்கிய நபர் நேர்காணல், NGO புத்தளம்)

இவர்கள் இவ்வாறு இணைந்ததன் விளைவாக புத்தளம் வாழ் முஸ்லிம்களின் கலாசாரம், உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் கலாசாரங்களினால் பலமாகச் செல்வாக்குச் செலுத்தப்பட்டுள்ளது. உள்ளூர் மக்களினதும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களினதும் கலாசாரங்களிடையில் தெளிவான வேறுபாடுகளுள்ளன. ஆரம்பத்தில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் உள்ளூர் முஸ்லிம்களுடன் கலந்து பழகத் தொடங்கியபோது அவர்களிடையில் கலாசாரங்களிடையான ஒத்துவராத் தன்மையால் அவர்களுடன் கலந்து பழகுவதற்கு உள்ளூர் மக்கள் தம் விருப்பமின்மையைக் காட்டினர். ஆனால் படிப்படியாக தொடர்ச்சியாக உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் உள்ளூர் மக்களுடன் பழகியமையால் சமூகங்களிடையான திருமணங்களினூடும், பாடசாலைகளில், வர்த்தகங்களில் கலாசாரச் செயன்முறைகள் பரிமாறிக் கொள்ளப்படலினூடு இவர்கள் உள்ளூர் மக்கள் சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தினர்.

சீதனம் வழங்குதல், உடைப் பழக்கங்கள் போன்ற உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் சில கலாசாரங்கள் படிப்படியாக உள்ளூர் சமூகத்தை ஊடுருவியுள்ளது. உள்ளூர் சமுதாயத்தினரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையின் முன்னர் புத்தளம் வாழ் முஸ்லிம்களிடம் சீதனம் வழங்கும் திட்டங்கள் பொதுவாகக் காணப்படவில்லையெனவும் ஆனால் இப்போது அது ஒரு பொதுவாக நடவடிக்கையாக மாறியுள்ளது எனவும் தெரியவருகிறது.

உள்ளூர் மக்களுடன் ஒப்பிடும் போது உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் குழந்தைகளின் கல்விச் செயற்பாடுகள் உயர்வாக உள்ளன. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையின் முன்னர் உள்ளூர் சமுதாயத்தின் பெரும்பாலான பெண்கள் இடைநிலை கல்வியைத் தொடங்குவதற்கு ஊக்கப்படுத்தப்படுவதில்லை. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின், பெண் பிள்ளைகளும் கூட உயர் கல்வியையும் முடித்துள்ளனர். இது உள்ளூர் மக்களும் தமது பெண் பிள்ளைகள் இடைநிலை, உயர் கல்விகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தூண்ட வைத்துள்ளது.

"உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் காரணமாக புத்தள முஸ்லிம்களின் பாரம்பரியம் இப்போது மாற்றப்பட்டுள்ளது. அவர்களது நடை, உடை பாவனைகள் உள்ளூர் மக்களிலும் வித்தியாசமானது, யாரும் வெளியாட்கள் பார்ப்பின் இவர்களைப் புத்தள மக்கள் என நினைப்பார். ஆனால் உண்மையில் அவ்வாறல்ல."

(முக்கிய நபர் நேர்காணல், ஆண்)

"அவர்கள் முஸ்லிம்களாயினும், எமக்கும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்குமிடையே கருதத்தக்க அளவு கலாசார வேறுபாடுகள் உள்ளன. புத்தளத்தில் முன்னர் எமக்கு சீதனப் பிரச்சினைகள் இருக்கவில்லை. ஆனால் இப்போது அவர்களது கலாசாரத்தினால் அது எம்மிடம் வந்துள்ளது. அவர்கள் சீதனம் கேட்கின்றனர். ஆனால் நாம் அப்படியல்ல. இப்போது எமது சமுதாயத்தினரிடமும் சீதனம் வழங்கும் கலாசாரம் உள்ளது."

(ஆண், *51*, நுரைச்சோலை)

ஓரளவு இணைந்து வாழும் நிலை இப்பிரதேசத்தில் ஏற்பட்டிருந்தாலும் உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்கள் உள்ளூர் மக்கள் தம்மை இன்னமும் பிரித்துப் பார்ப்பதாகவே உணர்கின்றனர். உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களிடையில் தாம் ஓரம் கட்டப்படும், வித்தியாசம் காட்டப்படும் உணர்வு உள்ளது. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் குழந்தைகள் பாடசாலைகளில் 'அகதி' என குறிப்பிடப்படல் இந்நிலைமைக்கு ஓர் உதாரணமாகும். அதேநேரம் நிர்வாகம், உதவிகள் மற்றும் அரசியல் பலம் என வரும் போது அவர்கள் தாம் வேறு பிரிவினர்களாக கருதப்படுவதையே விரும்புகின்றனர்.

> "இவ்வளவு அதிக காலத்தின் பின்னும் மக்கள் எம்மை அகதிகளாகப் பார்க்கவே விரும்புகின்றனர். பாடசாலைகளில் சில உள்ளூர் ஆசிரியர்கள் எமது மாணவர்களை 'அகதி' என அழைக்கின்றனர்."
>
> (பெண், 39, சிறிமாபுரம்)

## குடியேற்றத்திற்காக புத்தளம் தெரிவு செய்யப்பட்டமை

199091 களில் யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரிலிருந்து வெளியேற்றப்பட்ட உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் புத்தளத்திற்கு பல்வேறு காரணங்களிற்காக வந்தனர். மன்னாரிலிருந்து குடிபெயர்ந்த பலர் கற்பிட்டிற்கு தரை வழியே பயணம் செய்வது பாதுகாப்பற்றதாக இருந்தமையால் கடல் வழியாகப் பயணம் செய்து வந்து சேர்ந்தனர். மேலும் புத்தளம் மன்னார் மாவட்டத்திற்கு அண்மையில் அமைந்துள்ளதால் இடம்பெயர்வதற்கு முன்னரேயே இவ்விருமாவட்டங்களிடையே வர்த்தகத் தொடர்புகள் இருந்து வந்துள்ளன. மன்னார் வாழ் மக்களுக்கு புத்தளம் ஒரு சந்தையாகும். அவர்கள் தங்களது விவசாய உற்பத்திகள், வேளாண்மை விலங்குகள் மற்றும் மீன் என்பவற்றை புத்தளத்திலேயே விற்பனை செய்தனர். மன்னார் மக்களுக்கு புத்தளத்திற்கு கடல் வழியாகவோ அல்லது தரை வழியாகவோ வரக்கூடியதாயிருந்தது. முன்னைய தொடர்புகள் ஏதும் கொண்டிருந்திராத மக்கள் தங்கள் சமூகத்தவரைப் பின்பற்றி புத்தளத்தில் குடியேறினர். புத்தளத்துடனான வர்த்தகத் தொடர்புகளுக்கும் மேலாக, இடம்பெயர்ந்த பெரும்பகுதி மக்கள் முஸ்லிம்களாக இருந்ததுடன் புத்தளத்தின் உள்ளூர் சமூகமும் முஸ்லிம்களின் சிற்றூர்களைக் கொண்டிருந்தமை அவர்கள் புத்தளத்தில் குடியேறுவதை இலகுவாக்கின. இது அவர்களுக்கு உள்ளூர் சமூகத்துடன் தாம் ஏதோ ஒரு ஒற்றுமையைக் கொண்டிருந்ததாக உணர வைத்தது.

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் புத்தளத்துடனான தங்களது நீண்டகாலப் பொருளாதாரத் தொடர்புகளாலும் மற்றும் பொதுவான இன - மத அடையாளத்தினாலும் புத்தளத்தில் வாழ்வதை பாதுகாப்பானதாக உணர்கின்றனர். இடம்பெயர்வின் போது புத்தளத்தின் சனத்தொகை அடர்த்தி ஒப்பீட்டளவில் குறைவாக இருந்ததுடன் இம்மாவட்டத்தில் வாழ்க்கைச் செலவும் சாதாரணமானதாக இருந்தது. இக்காரணங்களினால் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் இம்மாவட்டத்தை குடியேறுவதற்கு தெரிவு செய்தனர்.

> "அவர்களுக்கு பெரியளவு தெரிவுகள் இருக்கவில்லை. ஆனால் இடம்பெயர்விற்கு முன்னரே புத்தளம் வாழ் மக்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தனர். பிரதானமாக இவை வர்த்தகத் தொடர்புகளாகும். ஆரம்பத்திலிருந்தே அவர்கள் தங்களது நெல், மீன் மற்றும் கால்நடைகளிற்கான சந்தையாக புத்தளத்தையே பயன்படுத்தினர். மன்னாரிலிருந்து புத்தளத்திற்கு 35 - 40 km தூரமே உள்ளது."
>
> (முக்கிய நகர் நேர்காணல், ஆண்)

> "அவர்கள் வந்தபோது இம்மாவட்டம் ஒரு அமைதியான, சிறிய சனத்தொகையினரைக் கொண்டதாக இருந்தது. இங்கு வாழ்க்கைச் செலவுகள் குறைவு. இங்கு வாழும் அவர்களது சமூகத்தினருடன் இணைந்து வாழ அவர்கள் விரும்பினர்."
>
> (முக்கிய நபர் நேர்காணல், கோவில் ஐயர்)

## வாழ்க்கைத் தரத்திலான மாற்றங்கள்

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கு அவர்களுடன் எவ்வித சொத்துக்களையும் கொண்டு செல்ல அனுமதிக்கப்படாததால் இடம்பெயரும் போது பெரும்பாலானோர் வறியவர்களாகவே இருந்தனர். சிலர் பின்னைய நாட்களில் தமது சொத்துக்களை விற்று அல்லது கொண்டு வந்து பொருளாதாரத்தில் நிலைபேறடைந்தனர். ஏனையோர் தொடர்ந்து ஏழைகளாகவே இருந்தனர்.

1990 களின் இறுதி வரையும் நீண்ட காலமாக உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களில் திரும்பிச் செல்வதற்கான எதிர்பார்ப்புகளுடன் வாழ்ந்திருந்தனர். நலன்புரி முகாம்களிலான வாழ்க்கைத் தரமானது இந்நிலையில் தொடர்ந்து வாழ்வதற்கு ஏதுவாக இருக்கவில்லை. இம்மக்கள் தாம் சொந்த இடங்களில் மீளவும் குடியமர்த்தப்படுவது உடனடியாக நிகழாது என்பதை உணரத் தொடங்கியதும் இந்நலன்புரி முகாம்கள் படிப்படியாக நிரந்தர வீடமைப்புக் குடியேற்றங்களாக மாறின. சிலர் புத்தளத்தில் காணி வாங்கியதுடன் சிலருக்கு அரசியல்வாதிகளாலும் அரச நிர்வாகத்தாலும் காணி வழங்கப்பட்டன. ஒவ்வொரு உள்வாரியாக இடம்பெயர்ந்த குடும்பமும் 10 பேச்சர்ஸ் காணி வீடு கட்டுவதற்காக வழங்கப்பட்டது. இது நலன்புரி முகாம்களில் நிரந்தர வீடுகளின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு உதவியது. இவற்றுள் பல நலன்புரி முகாம்கள் சிறந்த கழிவகற்றும் வசதிகள், மின்சாரம் மற்றும் நீர் வசதிகளுடன் கூடிய நன்கு விருத்தியடைந்த வீடுகளை கொண்டு முன்னேற்றம் கண்டுள்ளன. சில முகாம்கள் மிகச் சிறந்த வசதிகளுடன் இருந்தாலும் சரியான கவனிப்பின்றியும் சில முகாம்கள் உள்ளன. தரமான வசதிகளுடன் உள்ள முகாம்களில் வாழ்கின்ற உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கு சில அரசியல் பலம் காணப்படுவதாக அவதானிக்கப்படுகிறது. அரசியல் ஆதரவு உள்ளவர்கள் அதனை நிலங்களைப் பெற்று வீடுகளைக் கட்டுப்படுவதற்கு பயன்படுத்துகின்றனர். இவ்வரசியல் ஆதரவானது அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளிற்கான கவனத்தையும் இவர்கள் பக்கம் திருப்புவதற்கு உதவியுள்ளது. ஒப்பீட்டளவில் கூடிய கல்வி மட்டத்தையும் செல்வாக்கான சமூகத் தொடர்புகளையும் கொண்ட உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் இவ்வனுகூலங்களைப் பார்க்க விரைவாக முன்னேறக் கூடியவர்களாக இருந்தனர். யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்தான உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களிலும் மன்னாரிலிருந்து வந்த மக்கள் கூடுதலான அரசியல் ஆதரவைக் கொண்டிருந்தனர்.

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வறுமையும் பலவீனமானதன்மையும் மறுக்கப்பட முடியாததாக அல்லது குறைத்து மதிப்பிடப்பட முடியாததாக இருக்கும் அதே நேரம் உள்ளூர் குடித்தொகையிலும் மக்கள் மற்றும் சமுதாயங்கள் இதனைப் போன்றே சில நேரங்களில் இதை விடவும் வறுமை நிலையில், பலவீனமான நிலையில் உள்ளனர். புத்தளத்தில் இயங்கும் பல அபிவிருத்தித்திட்டங்கள் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளையும், பலவீனங்களையும் மாத்தரமே குறித்து நோக்குகின்றன. உள்ளூர் மக்கள் தாமும் வெளியிலிருந்து வரும் உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் தகுதியுள்ளவர்கள் எனக் காண்பதால் மட்டுப்படுத்தப்பட்ட/ பக்கச்சார்பான இந்நோக்கானது அழுத்தங்களைத் தோற்றுவித்துள்ளது.

> "ஏறத்தாழ 90% ஆன அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்வாரியாக மக்களுக்காவே செயற்படுகின்றன. ஆனால் இப்பிரதேசத்தில் வறிய, கவனிப்பாரற்ற உள்ளூர் மக்களும் உள்ளனர். அவர்கள் இந்நிலைமைகளில் புறக்கணிக்கப்படுகின்றனர்."
>
> (முக்கிய நபர் நேர்காணல், FORUT)

> "இப்போது இப்பிரதேசத்தில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கும் உள்ளூர் மக்களுக்குமிடையே பெரிய முரண்பாடு நிலவுகின்றது. ஆனால் உள்ளூர் மக்கள் தாம் அரசாங்கத்தாலும், அரச சார்பற்ற நிறுவனங்களாலும், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களாலும் ஓரங்கட்டப்படுவதாக உணர்கின்றனர். ஏனெனில் பெரும்பாலான வீடமைப்பு, இலவச நிவாரணப் பொருள் அட்டைகள் மற்றும் வாழ்க்கைத் தரத்திற்கான உதவிகள் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களை இலக்காகக் கொண்டே

வழங்கப்படுகின்றன. ஆனால் உள்ளூர் மக்களுக்கு இவ்வெவ்வித உதவியும் கிடைப்பதில்லை. இப்போது உள்ளூர் மக்களின் வாழ்க்கைத் தரம் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களிலும் குறைவாக உள்ளது."

(முக்கிய நபர் நேர்காணல், ஆண்)

டி. சில்வாவின் படி, உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களில் பண வசதி கொண்டோர் புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில், குறிப்பாக நகர்ப்புறங்களில் வீடுகள், காணிகள் வாங்கினர். ஏனெனில் இது அவர்களது வியாபாரங்களை வளர்த்துக் கொள்ள அவர்களுக்கு உதவியது. இச் செல்வந்த குடும்பங்களின் குழந்தைகள் நகர்புறங்களிலுள்ள சிறந்த பாடசாலைகளிற்கு அனுப்பப்பட்டதுடன் இப்பிரதே செயலகப் பிரிவிலுள்ள சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளையும் பெறுகின்றனர். இச்செல்வந்த முஸ்லிம்கள் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பலம் வாய்ந்தவர்கள். அவர்கள் இப்போது நகர்ப்புறப் பிரதேசங்களில் பல்வேறு விதங்களில் அரசியற் சக்திகளை மாற்றியமைக்கவும் முயல்கின்றனர். (டி. சில்வா 1999)[7]

## உள்ளூர் சமுதாய மக்களின் மனோபாவங்கள்

கடந்த 17 வருடங்களாக உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் பற்றிய உள்ளூர் மக்களின் மனோபாவம் எவ்வாறு மாறுபட்டது என்பதை அறிவது சுவாரசியமானதாயுள்ளது. முதலில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் வந்தபோது உள்ளூர் மக்கள் உடனடியாக உதவிகளை வழங்கினர். சில உள்ளூர் மக்கள் தமது நிலங்களையும் உள்வாரியாக இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கு முகாம்கள் அமைப்பதற்காக அன்பளிப்பு செய்தனர். உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் விசேடமான, பலவீனமான பிரிவினர்களாக உபசரிக்கப்பட்டனர். அவர்களது வருகை தற்காலிகமானதல்ல எனத் தெரிய வந்ததும், உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் தம் கால்களை ஊன்ற ஆரம்பித்ததும், உள்ளூர் சமுதாயத்தின் அங்கத்தவர்கள் அவர்களின் இருக்கையை ஆட்சேபிக்க ஆரம்பித்தனர்.

பெரும்பாலான உள்ளூர் மக்கள் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் புத்தளத்தில் நிலையாகக் குடியேறுவதை எதிர்பார்க்கவில்லை. இம்மாவட்டத்திலுள்ள வளங்களை பெரிய ஒரு மக்கள் கூட்டத்துடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் தமது வளங்களை இழக்கலாம் என்ற பயமே ஆட்சேபத்திற்கும், விரோதத்திற்கும் முதற் காரணமாகும். இச்சூழ்நிலை நிலத்திற்கான, ஜீவனோபாயத்திற்கான, அரசாங்கத் தொழில்களுக்கான, கூலிகள் மற்றும் சுகாதாரம், கல்வி போன்ற சேவைகளிற்கான போட்டியினைப் பற்ற வைத்தது. பல்கலைக்கழகத் தேர்விற்கான போட்டியும் பரந்தளவில் பல பதிலளிப்பாளர்களால் குறிப்பிடப்பட்டது. புத்தளம் மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பங்கானது இப்போது உள்ளூர் மக்களாலும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களாலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. குறிதத அளவான இடங்களுக்கு பெரிய போட்டியொன்று ஏற்படுவதால் உள்ளூர் சமுதாயம் இதனை ஒரு பிரதிகூலமாகவே நோக்குகின்றது.

பல நேரங்களில் இப்போட்டியானது முரண்பாடுகளினதும் வன்முறைகளினதும் மூலமானதாக அமைந்துள்ளது. இம்மனக் கசப்புடனான நிலை புத்தளத்தில் தொடர்ந்து இருதுப்பதுடன், அரசியற் புள்ளிகள் ஒவ்வொரு பிரிவனரினதும் துன்பங்களைத் தமது சொந்த இலாபங்களுக்காக மாற்றும் போது நிலைமை இன்னும் மோசமடைகின்றது. மேலும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களையே புத்தளத்திலுள்ள மிகவும் பலவீனமான பிரிவினராகத் தொடர்ந்தும் நோக்குகின்ற மற்றும் இம்மாவட்டங்களில் திட்டங்களை அமுல்படுத்துவதிலான அணுகுமுறைகளில் வளைந்து கொடுக்கக்கூடிய தன்மையற்ற, திறந்த மனதுடன் செயற்படாத அபிவிருத்தித் திட்டங்களாலும் உதவப்படவில்லை.

---

7. சில்வா, அமரசிரி (1999), "இலங்கையில் முரண்பாட்டுடன் தொடர்பான உள்வாரியான இடம்பெயர்வின் சில சமூக - அரசியல் தாற்பரியங்கள்", 7 வது இலங்கை ஆய்வுகளிலான மாநாட்டில் பிரசுரம் முன்வைக்கப்பட்டது, கான்பெரா, அவுஸ்திரேலியா. டிசம்பர் 3-6 1999, மறுபதிப்பு http://web.ics.purdue.edu/~vdesilva/mwadesilva/Articles/102.pdf.

“இதுவரை இப்பிரதேசத்தில் நிறைய பிரச்சினைகள் காணப்படவில்லை. உங்களுக்கெல்லாம் தெரிந்தது போல் புத்தளம் மாவட்டமே மூன்று இன மக்களும் இணைந்து வாழும் மாவட்டமாகும். ஆனால் இங்கு 'வளங்கள் மீதான முரண்பாடு' நிலவுகின்றது. உதாரணமாக பல்கலைக்கழகத் தெரிவிற்கு எமக்கு தரப்பட்டுள்ள பங்கினைக் கருதுகையில் அனைவரும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக கொள்ளப்படுதல் நியாயமற்றதாகும். வேறு மாவட்டத்தை சொந்தமாகக் கொண்ட உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களும் உள்ளூர் மக்களுடன் இணைந்து பரீட்சை எழுதுவதுடன் பல்கலைக்கழகத்திற்கு நுழையும் மாணவர்களின் கூடுதலான எண்ணிக்கையை இவர்கள் பெற்றுள்ளனர். அனைவரும் குறித்த வீதத்திற்குள் நோக்கப்படுவதால் இது உள்ளூர் மக்களுக்கு பிரதிகூலமானதாகும்.”

(முக்கிய நபர் நேர்காணல், NGO புத்தளம)

“பல்கலைக்கழகக் கல்வியைக் கருதும்போது மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் அளவானது (Quota) 1990 களில் இருந்த அதே அளவாகும். இப்போது உள்ளூர் மாணவர்கள் உள்வாரியாக இடம்பெயர்ந்த மாணவர்களுடன் போட்டியிட வேண்டியுள்ளது. அவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதுடன் உள்ளூர் மக்களை விட கல்வி நிலையிலும் உயர்வாக உள்ளனர். பல்கலைக்கழகம் நுழையும் உள்ளூர் மாணவர்களின் நிலை இப்போது குறைந்துள்ளது. இவ்வாறு நுழையும் பெரும்பாலோர் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களாவர்.”

(முக்கிய நபர் நேர்காணல, ஆண்)

“எமது கல்வி வளங்களைக் கருதினால் அவை உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களால் சுரண்டப்பட்டுள்ளது. அவர்களது வருகையால் பல்கலைக்கழக நுழைவிற்கு அவர்களுடன் போட்டி போட வேண்டியுள்ளது. பெரும்பாலான உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்கள் பல்கலைக்கழகம் நுழைகின்றனர். மாவட்டத் தெரிவிற்கான அளவானது (Quota) அவர்களுக்கு நன்மையாக உள்ளது.”

(முக்கிய நபர் நேர்காணல், பள்ளி நிர்வாகக் குழுத் தலைவர்)

வளங்களின் பகிர்வு தொடர்பான விடயத்தில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் பார்வையோட்டமானது உள்ளூர் மக்களிலும் சிறிது வேறுபடுகின்றது. நீண்டகால இடம்பெயர்வு நிலைமையில், அரசாங்கத்தால் IDP களின் மீள் குடியேற்றம் அல்லது ஒன்றிணைப்பு தொடர்பாக எவ்வித உயிர்ப்பான தீர்வும் முன்வைக்கப்படாமையால், அவர்கள் நாட்டின் எந்த இடத்திலும் 'வாழ்வதற்கான உரிமை' உள்ளதாக எண்ணுவதாகவே அவர்களது உணர்வு உள்ளது.

“உள்ளூர் சமுதாயம் தாம் தமக்கென இருந்த தொழில்களையும், அரச தொழில்களையும் உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்களின் வருகையால் இழந்துவிட்டதாக நினைக்கின்றனர். ஆனால் நாங்களும் வாழ்க்கைக்குரிய வருவாயைத் தேடிக் கொள்ள வேண்டிய மனிதர்களாதலால் இவ்வாறு நினைப்பது நியாயமற்றதாகும். எமக்கு எம் சொந்த இடத்தில் வாழ்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அனுமதிக்காவிடின் நாம் எங்கு வாழ முடியும்? நாம் எந்நாளும் அகதிகளாக வாழ எதிர்பார்க்க முடியுமா? எமக்கும் நீதி வழங்கப்பட வேண்டும்.”

(பெண், 22, நுரைச்சோலை)

### புத்தளத்தில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களாலான தாக்கங்கள்

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையிலிருந்து அவர்கள் குடியேறிய பிரதேசங்கள் எவ்வாறு துரித விருத்தியடைந்தன என்பது பற்றி பல பதிலளிப்பாளர்கள் பேசினர். அவர்கள் உட்கட்டமைப்பு, சேவைகள் வழங்கல் மற்றும் வியாபார விருத்திகளில் பிரதானமாக இம்முன்னேற்றத்தைக் கண்டனர். இருந்தாலும் இம்முன்னேற்றம் இம்மாவட்டத்தில் அதிகரித்துள்ள சனத்தொகைக்கு வழங்குவதற்கு போதுமானதாக இல்லையெனக் குறிப்பிட்டனர்.

இப்பிரதேசத்தில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் முதலீடுகளானவை, இவர்களுக்கும் மற்றும் உள்ளூர் மக்களுக்கும் தொழில் வாய்ப்புக்களை வழங்கி இம்மாவட்டத்தின் பல்வகைப்பட்ட மற்றும் இயங்கிக்கொண்டிருக்கின்ற பொருளாதாரச் சூழலுக்கு பங்களிப்புச் செய்துள்ளது. இருந்தாலும் இந்நிலை முன்வைத்த வியாபாரத்திலான அதிகரித்த போட்டி சிலரை இதனை ஒரு எதிர்மறையான அபிவிருத்தியாக நோக்கவைத்தது.

பல தரிசான நிலங்கள் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களால் கொள்வனவு செய்யப்பட்டு, பின் அதில் முதலீடு செய்ய ஆரம்பித்து அவர்களது பொருளாதார வளங்களை அதிகரிக்கும் வகையில் அதனை பயன் தரக்கூடிய விதத்தில் பயன்படுத்தினர்.

> "உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் வந்ததன் பின்னர் புத்தளம் பல அபிவிருத்திகளைக் கண்டது. பல பயன்படுத்தப்படாத நிலங்கள் அவர்களால் பயன்படுத்தப்பட்டன. பல பாடசாலைகள், கட்டடங்கள் மற்றும் வியாபார நிலையங்கள் இங்கு தோன்றின. இம்மாவட்டத்தில் கல்வி மட்டம் மிகவும் விருத்தியடைந்து இம்மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததைத் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. அவர்கள் இங்கு வந்ததன் பின் அவர்களின் நிலை முன்னேற்றமடைந்தது."
>
> (முக்கிய நபர் நேர்காணல், கோவில் ஐயர்)

> "முஸ்லிம்களின் வருகையினாலேயே எமது கிராமம் அபிவிருத்தி அடைந்தது. இது இலங்கை சுதந்திரக் கட்சியின் *1996* இலான அமைச்சர் அஷ்ரப் அவர்களின் மீட்குடியேற்றத்தினாலாகும்."
>
> (ஆண், 72, சிறிமாபுரம்)

> "முன்னர் பள்ளிவாசல்துறையில் ஒரு கடையையும் காண முடியாது. இப்போது நீங்கள் பயணிக்கும்போது பல கடைகளைக் காண்பீர்கள். சுகாதார சேவைகளும் முன்னேற்றமடைந்துள்ளன. இதற்கு உதாரணமாக மருத்துவ சகாய நிலையங்களைக் கூறலாம்."
>
> (பெண், 32, நுரைச்சோலை)

### உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் - அமைப்பு ரீதியான பிரிவுகளும் உள்ளூர் சமுதாயங்களின் பார்வையும்

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் முகாம்கள் பல உள்ளூர் சமுதாயங்களிலிருந்தும் விலகி தனிப்படுத்தப்பட்டவையாக அமைந்து காணப்பட்டது. உள்வாரியாக இடம்பெற்ற மக்கள் அரசியல் பிரதிநிதித்துவம், நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் நிர்வாகத்திலும் பிரிக்கப்பட்டுள்ளனர்.

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுடன் இணைந்த பிரச்சினைகளை மீள்குடியேற்ற அமைச்சு கையாள்கின்றது. அவர்கள் வாழவைத்துக் கொண்டிருக்கும் மாவட்டத்திலின்றி சொந்த மாவட்டங்களிலேயே பதிவு செய்யப்பட்டிருப்பதால், தமது சொந்த ஊர் அரசியல் பிரதிநிதிகளிற்கே வாக்களிக்கக் கூடியவர்களாயுள்ளனர். இப்பிரதேசத்தில் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கு சேவையாற்றுவதற்கென்றே மீள்குடியேற்ற அமைச்சு வடக்கு கிழக்கிற்கென விசேட ஆணைக்குழுவொன்றை நிறுவியுள்ளது. இவ்வாணைக்குழவானது புத்தளம் மாவட்டத்தில் வாழும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள், மின்சாரம், நீர், போக்குவரத்து மற்றும் பாடசாலைகள், மருத்துவசாலைகள் போன்ற ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது. வடக்கிலிருந்து உருவான உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுடன் இணைந்து அவர்களுக்கு உதவும் வகையில் மாத்திரம் உள்ள அபிவிருத்தி நிலையங்கள் உள்ளன.

> "எம்மிடம் மட்டுப்படுத்தப்பட்ட அளவு வளங்களே உள்ளன. இப்போது இது இரு சமூகத்தாரினாலும் பயன்படுத்தப்படுகின்றது. முன்னர் எல்லா அரச சார்பற்ற

நிறுவனங்களும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கு மாத்திரமே உதவியதால் உள்ளூர் மக்களுக்கு சில சந்தர்ப்பங்களில் எரிச்சலுண்டாக்குகின்றது. ஆனால் இப்போது சில அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளூர் சமுதாயங்களுக்கும் ஒத்தாசை புரிகின்றன. அவர்கள் எமது வளங்களைப் பயன்படுத்துகின்றனர். மேலும் அவர்களுக்கு தனியான ஓர் அமைச்சும் உண்டு. உதாரணமாக, அவர்கள் பல்கலைக்கழகத் தெரிவிற்கு மற்றும் அரச தொழில் வாய்ப்புக்களுக்கு இரு மாவட்டத்தினதும் பங்கினைப் பயன்படுத்துகின்றனர்."

(பெண், 32, நுரைச்சோலை)

"அவர்கள் எண்ணிக்கையிலும் அரசியலிலும் அதிக பலம் கொண்டுள்ளனர். அவர்கள் அரசாங்கத்திடமிருந்து உணவுக்கான படியினைப் பெறுகின்றனர். அவர்களுக்கு மின்சாரம், நீர் போன்ற அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் உள்ளன. நாம் இங்கு பல வருடங்களாக வாழ்கின்ற போதும் எமக்கு இன்னும் அவ்வசதிகள் இல்லை. கடந்த 20 – 30 வருடங்களாக நாம் எமது நிலங்களிற்கான உரிமைப் பத்திரத்தைப் பெற முயற்சித்து வருகிறோம். ஆனால் இன்னும் செய்து கொள்ள முடியவில்லை. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் இங்கு வந்து 2 – 3 நாட்களுள் தமது உரிமைப்பத்திரங்களைப் பெற்றுக் கொண்டனர்."

(குழுக் கலந்துரையாடல், பாலாவி)

அரசியல் ஆதரவு என வரும்போது உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுள்ளும் பிரிவுகளுள்ளன. அரசியல்வாதிகள் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் எப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பொறுத்து வித்தியாசமாக செயற்பட்டனர்.

"யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த IDP களிடம் தமக்கென ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இல்லை. ஆனால்மன்னாரிலிருந்து உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களிடம் இருக்கின்றனர். ஒரு பாராளுமன்ற அங்கத்தவர் எல்லாவற்றிற்கும் பொறுப்பாக இருக்க வேண்டும். மன்னார் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மன்னார் மக்களுக்கு முன்னுரிமை அளிப்பது நியாயமற்றதாகும்."

(முக்கிய நபர் நேர்காணல், ஆண்)

"பாராளுமன்ற உறுப்பினர் யாழ்ப்பாண முஸ்லிம்களை விடவும் மன்னார் முஸ்லிம்களுக்கே கூடிய ஆதரவு காட்டுகின்றார். அவர் மன்னார் மாவட்ட உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களாலேயே தெரிவு செய்யப்பட்டார். ஆனால் அவர் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சராவார்."

(ஆண், 72, சிறிமாபுரம்)

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி வழங்கும் தனித்த பல நிறுவனங்கள் காணப்பட்டமையால் உள்ளூர் மக்கள் தாம் பக்கச் சார்பாக நடத்தப்படுவதாக அபிப்பிராயம் கொண்டுள்ளனர். இது உள்ளூர் மக்கள் சமுதாயத்தினதும் உள்வாரியாக இடம்பெயர்ந்த சமுதாயத்தினரிடையுமான பிரிவினைக் கீழ்க்கோடிட்டுக் காட்டுகின்றது. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் அவர்களது சமூக நிலை காரணமாக சிறந்த விளைவுகளை அனுபவிக்கின்றனர் என்பதோடு அவர்களுக்கு கிடைக்கும் உதவிகளும் இச்சமூக நிலையுடன் தொடர்புடையதாகும். உள்வாரியாக இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு ஏன் தனியான பிரதிநிதித்துவம், விசேடமாக உள்ளூரில் வாழும் பலவீனமான மக்களுக்கு எவ்வித உதவிகளையும் கிடைக்காதபோது, தனிப்பட்ட உதவிகள் என்பன வழங்கப்பட வேண்டுமென பல உள்ளூர் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட எல்லா முரண்பாடுகளிலும் இப்பிரிவுகளும் மற்றும் அபிப்பிராயங்களும் மறைமுகமாக ஒரு சுழியோட்டத்தை ஏற்படுத்தியுள்ளதைக் காணக்கூடியதாயிருந்தது.

## பாதிப்புறு நிலையை மீளவும் ஆராய்தல்

இவ்வாய்வு பலவீனமான தன்மையையும் அதற்கான பல்வேறுபட்ட துலங்கல்களையும் ஆராய்ந்துள்ளது. ஆரம்பப் பகிர்ந்து கொள்ளல் செயலமர்வைத் தொடர்ந்து நடத்தப்பட்ட பிரதான ஆய்வு மற்றும் மேலதிக ஆய்வு என்பன இப்பிரதேசத்திலுள்ள வேறு பலவீனமான குழுக்களை அடையாளம் கண்டு அவர்களைப் பலவீனமாக்கிய இயல்புகள், இப்பலவீனங்களுடன் ஈடுகொடுப்பதற்கு அவர்கள் பயன்படுத்தும் செயன்முறைகள் மற்றும் வெளியாட்கள் இப்பலவீனங்களுக்கு காட்டிய ஈடுபாடு என்பவற்றை ஆராய்ந்தன.

இப்பிரதேசத்தில் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கான முக்கிய காரணிகளை இனங்கண்பதற்கு முயற்சித்த சமாதானத்தை பேணுதல் எனும் ஆய்வின் பகுதியிலிருந்து பெறப்பட்ட பிரதான கண்டுபிடிப்பு அரசாங்க அதிகாரிகள் அதேபோல் இப்பிரசேத்தின் அபிவிருத்தி நிறுவனங்கள் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களைத் தவிர்ந்த ஏனைய பலவீனமான பிரிவினர் மீதும் போதுமான கவனம் செலுத்தப்படாதவிடத்து இப்பிரசேத்தில் தற்போது நிலவுகின்ற சமாதானத்தை பேண முடியாது எனும் மக்களின் கருத்தாகும்.

> "நான் இவ்விடத்தில் கடந்த 16 வருடங்களாக உள்ளூர் மக்கள் பல தீமைகளை அனுபவிக்கின்றனர் என்றே கூற விரும்புகின்றேன். மதமானது உள்ளூர் மக்களையும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களையும் இணைக்கின்றது. ஆனால் இவ்விருசாராரும் இதனை மீறினால் அது வன்முறையாக மாறும். எனவே இவை நடைபெற முன்னர் இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு வேண்டும்."
>
> (முக்கிய நபர் நேர்காணல், பள்ளி நிர்வாகத் தலைவர்)

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களும் அவர்களின் பிரதிநிதிகளும் அவர்களுடன் தொடர்பான அரசியல் மற்றும் நிர்வாகச் சட்ட அமைப்பின் பகுதியான ஆதரவுடன் தமது பலவீனமான நிலையை பேணி வருகின்றனர். அவர்கள் திரும்பப் போவதற்கான உரிமையைப் பேணி அவர்களைப் புத்தளத்தின் தற்காலிகமான குடிவாசிகளாக உறுதிப்படுத்துகின்றனர். இத்தற்காலிக நிலை 18 வருடங்களுக்கும் மேலாக இருப்பதுடன் அதனால் கிடைக்கும் நன்மைகள் காரணமாகப் பேணப்படுகின்றது.

அரச மற்றும் அரச சார்பற்ற முதல்களிலிருந்தான அபிவிருத்திக்கான தலையீடுகள், உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் அவர்களின் நிலை காரணமாக பலவீனமானவர்களாக இருக்கும் அதேநேரம் புத்தளத்தில் பலவீனமான நிலையில் வேறும் பிரிவினர் உள்ளனர் எனும் உண்மைக்கு உறுத்துணர்ச்சி காட்ட வேண்டும்.

> "உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் இப்போது நல்ல நிலைக்குச் சென்று விட்டனர். அவர்களிடம் வாகனங்களும் நிலங்களுக்கான உரிமைப் பத்திரங்களும் கூட உள்ளன. ஆனால் உள்ளூர் மக்களின் நிலைமை முன்னேற்றமடையவில்லை. அப்படியே இருக்கின்றனர். அவர்களிடம் அவர்களது நிலங்களுக்கான உரிமைப் பத்திரங்களே இல்லை. முஸ்லிம்களுக்கு அரசியல் உதவியும் உண்டு."
>
> (முக்கிய நபர் நேர்காணல், பௌத்த மதகுரு)

> "இப்பிரதேசத்திலுள் முஸ்லிம் பெண்களின் திருமணங்களைப் பொருத்தவரையில் அவர்கள் ஏழைகளாய் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். மக்கள் ரூபா. 300,000 திருமணம் முடிப்பதற்காக கேட்கின்றனர். நாம் எவ்வாறு அவ்வளவு பணம் தேடுவது? எம்மிடம் காணிகளும் இல்லை. பரஸ்பர புரிந்துணர்வு பற்றிய இவ்வாறான பேச்சுக்கள் எல்லாம் பாசாங்குகளாகும். ஏனெனில் இவ்வாறான மக்கள் இப்போது இல்லை."
>
> (முக்கிய நபர் நேர்காணல், NGO புத்தளம்)

“இப்பிரதேசத்தில் பல மக்கள் தனியே வாழ்கின்றனர். சிலரின் பெற்றோர் இல்லை, சிலரின் கணவர்மார் இல்லை, அவர்கள் இறந்திருப்பார்கள் அல்லது அவர்களது குடும்பங்கள் கைவிடப்பட்டிருக்கும். பலரிடம் வியாபாரம் செய்வதற்கான இயலுமை உண்டு. ஆனால் அதற்கான பணம் இல்லை. ஆனால் சிலர் தமது சொந்த முயற்சியால் முன்னேற்றமடைந்துள்ளனர். ஒரு பெண் தென்னை வியாபாரம் ஆரம்பித்து அதனை நன்றாகச் செய்து வருகிறார். ஏனையோர் சிறிய கடைகளை ஆரம்பித்து நன்றாகச் செய்கின்றனர். தென்னை வியாபாரம் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் (CHA) உதவிகளைப் பெறுகின்றது. அப்பெண் படித்தவர், கல்விப் பின்னணி உள்ளவர்.”

(முக்கிய நபர் நேர்காணல், பெண், நாகவில்லு)

ஆரம்ப பகிர்ந்துகொள்ளல் செயலமர்வானது புத்தளப் பிரதேசத்திலுள்ள பலவீனமான பிரிவினர் எனக் கருதக்கூடிய வறிய உள்ளூர் மக்கள், பெண்களின் தலைமையிலுள்ள குடும்பங்கள், வெளிநாடுகளில் இடம்பெயர்ந்து வாழும் பெற்றார் ஒருவரை அல்லது இருவரையுமே கொண்ட குடும்பங்கள் மற்றும் இடம்பெயரும் மீனவர்களை உள்ளடக்கிய வேறு பல பிரிவினர்களை இனம் கண்டது. இவர்களைப் பற்றிய தகவல்கள் பலவீனமான தன்மையிலான கலந்துரையாடல்களை விரிவுபடுத்தவும் மேலும் அபிவிருத்தித் துறைகளிலிருந்து இவ்வாய்வினைப் பயன்படுத்துவோர் புத்தளத்தின் பலவீனமான தன்மையின் ஆழ அகலங்களை அறிந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்குமாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆரம்பப் பகிர்ந்துகொள்ளல் செயலமர்வின் போது விசேட கவனம் செலுத்தப்படவேண்டிய குறிப்பான பலவீனமான பிரிவினராக பெண்களே இனங்காணப்பட்டனர். விவாகரத்துக்கள், மரணம் அல்லது வீட்டின் தலைவர் காணாமல் போதல் போன்றவற்றால் உருவாக்கப்பட்ட பெண்களின் தலைமையிலான குடும்பங்கள் மிகவும் பொதுவாகக் காணப்படுகின்றமை பிரதான ஆய்வின் சில பதிலளிப்பாளர்களிடமிருந்தும் ஆரம்ப பகிர்ந்து கொள்ளல் செயலமர்வில் கலந்து கொண்டவர்களிடமிருந்தும் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட வினிவித நிறுவனத்தினாலான ஆய்வு, இவர்களுள் பெரும்பலான பெண்கள் சமுர்த்தி பெறுபவர்களாக மற்றும் கூலி வேலைகளில், விவசாய செயற்பாடுகளில், களப்பு மற்றும் கடல்களில் மீன்பிடித்தலில், சுயதொழில் வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோராகவும் மற்றும் வெகுசிலர் சிறிய சில்லறைக் கடைகளை முகாமைத்துவம் செய்வதாகவும் கண்டறிந்துள்ளது.

ஆரம்ப பகிர்ந்து கொள்ளல் செயலமர்வில் கலந்து கொண்டோரால் வெளிநாடுகளில் இடம் பெயர்ந்து வாழ்வோரின் குடும்பங்களும் பலவீனமான குழுவாக கண்டுகொள்ளப்பட்டது. விசேடமாக சமூகப் பிரச்சினைகளை கருதும்போது, இன்னும் குறிப்பாக தாய் வெளிநாடு செல்வதுடன் தொடர்பாக குடும்ப அங்கத்தவர்கள் முகம் கொடுக்க வேண்டிய சமூக பிரச்சனைகளைக் கருதும் போது, பெரும்பாலான இக்குடும்ப அங்கத்தவர்கள் நாட்டுக்கு வெளியே செல்லாது எப்படியோ இருப்பதைக் கொண்டு சமாளித்து புத்தளத்திலேயே இருப்பதை சிறந்ததென உணர்ந்தனர். வெளிநாடுகளிலிருந்து திரும்பி வந்த சிலரும் தாம் வெளியே இருந்த போதிலும் விட கூடுதலான பணப் பிரச்சினைகளுக்கு இப்போது வந்த பின்னர் முகம் கொடுப்பதாக உணர்ந்தனர். ஆனால் அவர்களது பிரச்சினைகளிற்கான சிறந்த தீர்வானது முதலிலேயே தொழிலுக்காக வெளிநாடு செல்வது அல்ல என்பதையும் உணர்ந்தனர்.

இடம்பெயரும் மீனவர்கள் பருவத்துடன் இடம்பெயர்ந்தனர். மற்றும் முரண்பாடுகளின் முன்னர் இவர்கள் வடக்கு மற்றும் கிழக்கில் மீன்பிடிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். யுத்த நிறுத்த காலங்களில் இம்மீனவர்கள் வாகறை, குகுலாவா, புல்மோடை, கல்லாராவா, நாயாறு, வன்னிக்குளம், சம்மாந்துறை, குண்டா மற்றும் செல்லகன்னி போன்ற பிரதேசங்களுக்கு சென்றுள்ளனர். இம்மீனவர்கள் கிழக்கு தற்போது மீன்பிடிப்பதில் ஈடுபடுவதற்கு ஓரளவு அமைதியாக இருப்பதாகவும் வடக்கு அவ்வாறு இல்லை எனவும் கருதுகின்றனர். மீன்பிடிக்கும் பருவமல்லாத காலங்களில் அவர்கள் இடம்பெயர்ந்து மீன்பிடிக்கச் செல்ல முடியாததால் இவர்கள் பொருளாதார பிரச்சினைகளிற்கு முகம் கொடுத்தனர். இவர்கள் அப்பிரதேசங்களுக்கு மீன்பிடிக்கச்

சென்று கடந்த காலங்களில் தாக்குதல்களால் தமது மீன்பிடி உபகரணங்களையும் கைவிட்டு பண இழப்புக்களுடன் திரும்பி வந்த சந்தர்ப்பங்களும் உள்ளன.

இக்குழுக்கள் ஆய்வு இனங்கண்டு ஆராய்ந்த சில குழுக்களாகும். புத்தளத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகள் இக்குழுக்களைப் புறக்கணிக்கக் கூடாது. ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்த அபிவிருத்தித் திட்டங்களும் உதவிகள் வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட முயற்சிகளும் பலவீனமான தன்மையை குறுகிய வரைவிலக்கணத்துக்கு உட்படுத்திக் கொண்டதனால் அங்கு நிலவிய சமூக அதிருப்தி நிலையை இன்னும் ஏரியூட்டியுள்ளன. இவ்வாறான அதிருப்திகளை எதிர்காலங்களில் தடுப்பதற்கு அல்லது மேலும் பரவாது நிறுத்துவதற்கு, உரிய அதிகாரிகள் அடிப்படைச் சூழ்நிலையை அறிந்து, திட்டமிட்டு இதனை விடவும் உணர்வு மிக்கதாக தமது செயற்பாடுகளை அமுல்படுத்த வேண்டும்.

# 6.0 சமாதானத்தை உருவாக்கலும் சமாதானத்தைப் பேணுதலும்

இவ்வாய்வின் அடிப்படை சமுதாயங்களால் முரண்பாடு முகாமைத்துவம் செய்யப்படலாகும். முன் விவரிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து முரண்பாடுகள், அவற்றுக்கான காரணங்கள் மற்றும் இக்காரணிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுகின்ற விதங்கள் என்பன பற்றிய தகவல்கள் கிடைத்தன. முரண்பாடுகளின் பகுப்பாய்வானது இம்முரண்பாடுகள் எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன மற்றும் தீர்வு காண்பதற்காக எவ்வாறு வெற்றிகரமான பல முயற்சிகள் எடுக்கப்பட்டன என்பதையும் குறித்துக் காட்டுகின்றது. பின் தொடரும் பகுதிகள் மேலே விரிவாக ஆராயப்பட்ட விடயங்களை சுருக்கமாகத் தந்து சமாதானத்தை உருவாக்கலும் சமாதானத்தைப் பேணுதலும் எனும் ஆய்வின் அடிப்படைக் கருவுக்குத் திரும்புகின்றன.

### *சமாதானத்தை உருவாக்கல்*

அனைத்து முரண்பாட்டுக்குரிய விடயங்களும் வெளிப்புற உதவிகள் மற்றும் ஈடுபாடுகளுடன் முரண்பாட்டுக்குரிய பிரிவினர்களால் தீர்க்கப்பட்டன. தீர்வுகள் எப்போதும் ஒரு கூட்டாகவே இருந்தன. அவை எதுவும் ஒரு வெளிப்புற காரணி அல்லது செயற்பாட்டில் தனித்துத் தங்கியிருக்கவில்லை.

ஒரு உடன்பாடான தீர்வினை அடைவதில் வெளியார் தலையீடு செய்யப்படும் நேரம் எப்போதும் முக்கியமானதொன்றாக நிரூபிக்கப்பட்டுள்ளது. சமுதாயங்கள் ஒரு சாராரை மறுசாரார் வெறுக்காத வரை மற்றும் அவர்கள் ஒரு விட்டுக்கொடுப்பின் அடிப்படையிலான உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளும் போது, எல்லா முரண்பாடுகளும் தீர்வுக்குரிய வாய்ப்பினைக் கொண்டுள்ளதாகவே காணக்கூடியதாகவுள்ளது. இவ்விட்டுக் கொடுப்புடனான தீர்வானது வெற்றிகரமாக அமைவதற்கு அது புரிந்து கொள்ளக் கூடியதாகவும், காலத்திற்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். இதுவரை நாள் பெரும்பாலான வெற்றிகரமான தீர்வுகள் முரண்பாடுகள் பொதுச் சமூகத்தின் அமைதியின்மைக்கு இட்டுச் செல்ல முன்னர் அல்லது சம்பந்தப்பட்ட இரு குழுக்களிடையேயும் அடக்க முடியாத ஒரு சூழ்நிலையை விருத்தியாக்க முன்னரே நடைபெற்றுள்ளன. இவ்வாய்ப்பு தவறவிடப்படும் போது குறித்த தலையீட்டைப் பயன்படுத்தி தீர்க்க முடியாத ஒரு கட்டத்தினை முரண்பாடு அடைகின்றது. உதாரணமாக சிரிமாபுற அடக்கஸ்தலம் மீது ஏற்பட இருந்த மோதலை கிராம அபிவிருத்தி நிதியம் இனங்கண்டு மோதல் வெடிக்க முன்னரே தலையிட்டது. போதுமானளவு முன்னர், போதுமானளவு தீர்மானத்துடனாக முரண்பாடு மேலும் அதிகரிக்க முன்னர் தலையிட்டது. இதற்கு மாறாக வனாதவில்லுவின் சேரக்குலிய மீனவர்களுக்கு வழங்கப்பட்ட புதிய மீன்பிடி படகுத்துறையானது இப்பிரதேசத்திலான முரண்பாடுகளைக் குறைப்பதில் போதுமானளவு வெற்றியைப் பெறவில்லை. அரசாங்கம் வழங்கிய படகுத்துறையைக் கொண்டு மீனவர்கள் திருப்தியடையவில்லையாதலால் இம்முரண்பாடு இன்னும் பகுதியளவில் தீர்க்கப்படாமலேயே உள்ளது.

நிலத்திற்கான சட்ட பூர்வமான உரிமை அடிப்படையிலான முரண்பாடுகளில் சம்பந்தப்பட்ட குழுக்கள் இவற்றிற்கு பரிகாரம் முறைமையான நீதித் திட்டங்களிலிருந்து தேடுகிறார்கள். உதாரணமாக பாலாவியில் நிலம் தொடர்பான பிணக்கினில் சம்பந்தப்படட பிரிவினர் சமாதான ஆணைக்குழுக்கள் மற்றும் மதத் தலைவர்கள் போன்ற உள்ளூர் அமைப்புக்களும் இம்முரண்பாட்டுடன் ஓரளவு இணைக்கப்பட்டுள்ளதால், இவர்களால் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என அறிந்தமையால் நீதி தேடி இதனை வழக்கு மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. பொதுச்சொத்துக்களின் மீதான முரண்பாடுகளில் சம்பந்தப்பட்டவர்கள் தீர்விற்காக அபிவிருத்தி நிறுவனங்களை அணுகுகின்றன. நுரைச்சோலையில் உள்ளூர் சமுதாயம் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வருகையின் முன்னர் பயன்படுத்திய மருத்துவ சகாய நிலையத்தைப் பின்னர் பகிர்ந்து கொள்ள வேண்டி வந்ததால் பிரச்சினைகள் ஏற்பட்ட போது பெண்கள் குழுக்கள் ISRC இனை அணுகியது.

அரச அமைப்புக்களும் அதிகாரிகளும் முரண்பாட்டுத் தீர்வுகளில் ஈடுபடும்போது முரண்பாட்டிற்குரிய குழுக்கள் தமது தலையீடுகளில் பக்கச் சார்பின்றி செயற்படுவதை மக்கள் காண்பது மிகவும் முக்கியமாகும். வனாதவில்லு, உடப்பு மற்றும் நாகவில்லு சமுதாயங்களின் அனுபவங்களிலிருந்து ஒரு தீர்வின் வெற்றியானது அதன் நியாயமான தன்மை பற்றி எல்லா பிரிவினரும் திருப்பதியடைவதில் தங்கியுள்ளது.

புத்தளத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுடன் ஈடுபடுவதற்கு பல பாத்திரங்கள் பல்வேறு வகையான செயன்முறைகளை மற்றும் அணுகுமுறைகளைப் பயன்படுத்தியது. இவர்களுள் இம்முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதில் சமாதான ஆணைக்குழுக்களும் தனி நபர்களுமே பெரும்பாலும் வெற்றி கண்டுள்ளன. இவர்கள் பொதுவாக நடுவர்களாக நோக்கப்பட்டார்கள். மேலும் இவர்களுக்குக் கலந்துரையாடல்களை ஆரம்பிக்கக் கூடியதாயிருந்தது. மற்றும் இவர்கள் நடுவர்களாக, தீர்த்து வைப்பவர்களாக செயற்பட்டனர். இத்தலையீடுகள் பெரும்பாலும் வழமையாக வாய்மொழி மூலமான உடன்பாடுகளைக் கண்டன. இவை சட்டத்துடன் இணைக்கப்பட்டவையல்ல. ஆனால் இரு பிரிவினரிடையுமான நம்பிக்கை மற்றும் மரியாதையின் அடிப்படையில் அமைந்தவையாதலாலும் கலந்துரையாடல்கள் மற்றும் தனி ஆள் மத்தியஸ்தம் என்பவற்றினூடு கட்டியெழுப்பப்பட்டவையாதலாலும் இவை வினைத்திறனானவையாகும்.

இதற்கு மாற்றமாக முறையான நீதிச் சட்டத்தையும் முறைமையான சட்டச் செயன்முறைகளினூடும் அணுகப்பட்ட முரண்பாடுகள் பொலிஸ் மற்றும் ஏனைய அதிகாரிகளால் பலப்படுத்தப்பட்ட சட்டரீதியான ஆட்சியுடன் தீர்க்கப்பட்டன. விசேடமாக நிலம் தொடர்பான முரண்பாட்டு நிகழ்வில் இம்முறை குறைந்த அளவிலேயே வெற்றி கண்டுள்ளது. தீர்ப்பு வழங்கப்பட்டதும் அது தன்பக்கம் தவறானது என உணரும் முரண்பாட்டுப் பிரிவானது வழக்கை உயர் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்கின்றது. இவ்வாறு தொடர்ந்த முறையீடுகள் மற்றும் நீதித் துறையிலான தாமதங்களின் விளைவாக இம்முரண்பாடு இன்னும் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றது.

### *சமாதான செயற்குழுக்கள்*

இப்பிணக்குகளிற்கான துலங்கலாக சமாதான செயற்குழுக்கள் தோன்றின. இச்செயற்குழுக்கள் நிரந்தரமானவையல்ல. முரண்பாடு தீர்க்கப்பட்டதும் இவை கலைக்கப்பட்டு மீண்டும் ஒரு தேவை தோன்றும் போது நிறுவப்பட்டன.

> "சிங்கள, முஸ்லிம், தமிழ் சமுதாயங்களை, உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களையும் உள்ளிட்ட பிரதிநிதிகளை உள்ளடக்கிய சமாதானக் குழுக்கள் இப்பிரசேத்தில் இயங்குகின்றன. செயற்குழு 45 அங்கத்தவர்களையும் 6 - 7 அலுவலர்களையும் நிலதாரீன்) கொண்டது. செயற்குழுக்களின் அடிப்படை வேலையானது எல்லா இனப்பிரிவினர்களையும் ஒன்றாகச் சேர்ப்பதாகும்."
>
> (முக்கிய நபர் நேர்காணல், பெண், நாகவில்லு)

வேறுபட்ட பிணக்குகளிற்கு துலங்களாக சமாதான செயற்குழுக்கள் உருவாக்கப்பட்டன. மேலும் இதன் விளைவாக பல்வேறு மட்டங்களில் இயங்கின. சமுதாய மட்டத்திலான சமாதான ஆணைக்குழுக்கள் உள்ளூர் மதத் தலைவர்கள், சமுதாயத்தலைவர்கள் மற்றும் இப்பிரதேசத்தில் இயங்கும் அபிவிருத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாகும். இச்செயற்குழுக்கள் உள்ளூர் மட்ட பிணக்குகளைக் கவனிக்கின்றன. இம்மாவட்டத்தில் ஓர் உயர் மட்ட சமாதானக் குழு அவதானிக்கப்பட்ட அளவு நன்றாக செயற்படாத நிலையில் உள்ளது. புத்தளத்தின் மாவட்ட அல்லது பிரதேச மட்ட சமாதான செயற்குழவில் பௌத்த மதகுரு, கிறிஸ்துவ மதகுரு/ பாதிரியார், பள்ளி நிர்வாகத் தலைவர் (ஹஸ்ரத்), கோவில் ஐயர் போன்ற முக்கியமான மதத் தலைவர்களும், மாவட்ட செயலாளரும் உள்ளடங்குவர். மதத் தலைவர்களிடையான புரிந்துணர்வும், நல்லுறவுமானது இச்செயற்குழுக்களின் வெற்றிக்கான காரணமாக எண்ணப்படுகிறது. இச்செயற்குழுவின் தலைவராக மாவட்ட செயலாளர் தொழிற்படுகிறார். அழைப்பின் பேரில் பிரதேச செயலாளர்கள் மற்றும் பிரதான

அபிவிருத்தி நிறுவனங்களிலிருந்தான பிரதிநிதிகள் இச்செயற்குழுவில் பங்கெடுத்துக் கொள்கின்றனர்.

"ஒரு சம்பவத்தின் போதே சமாதான செயற்குழுக்கள் ஒன்று சேர்வதால் இக்காலங்களில் அவை தொழிற்படுவதில்லை. பிரதேச அரச அதிபரே இக்குழுவிற்குத் தலைவராவார்."

"ஆனால் மாவட்ட சமாதான செயற்குழுவானது இவ்விடயத்தில ஒழுங்காக ஈடுபடுவதில்லை. இன்று அந்த உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களில் ஒருவர் இவ்விடயத்தை அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தாவைச் சந்தித்து கலந்துரையாட கொழும்புக்குப் போகிறார். இப்போது நாம் சந்தாரத்ன தேரருடன் அதைப்பற்றிப் பேசுவதற்குத் திட்டமிட்டுள்ளோம். அவர் இந்தியாவிற்குச் சென்றுள்ளார். அவர் வந்ததும் இவ்விடயம் தொடர்பாக அவரை மீண்டும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளோம்."

(முக்கிய நபர் நேர்காணல், பள்ளி நிர்வாத் தலைவர்)

இவ்வாறான உயர் மட்ட சமாதான செயற்குழுவின் அங்கத்தவர்கள் மத மற்றும் கலாசார நிகழ்வுகளைத் தாம் சந்தித்து விடயங்களைக் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றன.

"இப்பிரதேசத்தின் மதத் தலைவர்களிடையில் ஒரு உறுதியான உறவு காணப்படுகிறது. சமயத் தலைவர்களாக நாம் ஒவ்வொரு விசேட பண்டிகைகளிலும் கலந்து கொள்கிறோம். சமயத் தலைவர்கள் இப்பண்டிகைகளில் அடிக்கடி சந்தித்துக் கொள்கின்றனர். நாம் அடிக்கடி சந்திக்காவிடின், இடையிலுள்ளோர் எமக்கிடையே முரண்பாடுகளை தோற்றுவிக்க முயற்சிக்கின்றனர். நாம் சந்தித்து விடயங்களை ஒன்றாகக் கலந்துரையாடுவதால் அவர்களின் முயற்சிகள் வெற்றி அளிப்பதில்லை. ஒருமுறை சிலர் என்னைப்பற்றி தவறாக பௌத்த மதகுருவிடம் கூறியிருந்தார். இருந்தாலும் பௌத்த மதகுரு என்னிடம் கேட்டு அதனை என்னுடன் கலந்துரையாடி உண்மையைக் கண்டு கொண்டார்."

(முக்கிய நபர் நேர்காணல், கிறிஸ்துவ மதகுரு)

சமுதாயத்தின் அங்கத்தவர்கள் அவர்களது மதத் தலைவர்களுக்கு தெரிவிக்கும் நம்பிக்கை மரியாதையைப் போன்றே மதத் தலைவர்கள் தமக்கிடையே நம்பிக்கையும் மரியாதையும் வைத்திருப்பது மிகவும் முக்கியமாகும் என்பது தெள்ளத் தெளிவாகும்.

ஏனைய தீர்வு காணும் பொறிமுறைகளை விடவும் சமாதான செயற்குழுக்கள் மற்றும் மதத் தலைவர்களுக்கு முரண்படும் பிரிவினரை அணுகுவது இலகுவாக உள்ளது தெரிகிறது. இச்செயற்குழுக்கள் தொடர்புகளுக்கான ஆரம்பப் புள்ளியாகவும்.். மையமாகவும் மற்றும் ஏனைய நிறுவனங்களுடனான தொடர்பாகவும் தொழிற்படுகின்றன. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் முகாம்களில் நியமிக்கப்பட்டுள்ள சமுதாயத் தலைவர்கள் அம்முகாம்களில் தோன்றும் பிரச்சினைகளை மதத் தலைவர்களின் அல்லது சமாதான செயற்குழுக்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றனர்.

"சமாதான செயற்குழுக்கள், சட்டத்தரணிகள், அமைச்சர்கள், இவ்விடயங்களைப் பற்றி ஆலோசிப்பதற்காக சில மக்களுடன் மற்றும் பலருடன் தொடர்புகளை ஏற்படுத்தித் தருவது போன்ற பல வழிகளில் உதவியது."

(முக்கிய நபர் நேர்காணல், ஆண், பாலாவி)

### மத தலைவர்கள்

தனிப்பட்ட மதத் தலைவர்களும் தமது சொந்த உரிமையுடன் பிணக்குகளைத் தீர்ப்பதில் பங்கெடுக்கின்றன. பௌத்த விகாரை நிர்வாகக் குழக்கள் (தாயக சபாவ), பள்ளிவாயில் நிர்வாகக் குழுக்கள் மற்றும் தேவாலய ஆணைக்குழுக்கள் என்பன யாவும் முரண்பாடுகளின் ஆரம்ப கட்டங்களில் அணுகியுள்ளன. அவர்கள், அவர்களது சொந்த நம்பிக்கைகளைக் கொண்ட அங்கத்தவர்கள் ஈடுபடும் இப்பிணக்குகளைத் தீர்ப்பதில் சில வெற்றிகளைச் சந்தித்துள்ளன. இத்தலைவர்கள் முரண்பாடுகள் மேலும் தீவிரமடையாது தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இத்தலைவர்களே அவர்களது சொந்த நமபிக்கைகளைக் கொண்ட முரண்படுபவர்களின் முதல் சந்திப்பாளர்களாக இருப்பதுடன் முரண்பாட்டின் மிகவும் ஆரம்பத்திலேயே ஈடுபடுகின்றன.

> "ஒரு பிரச்சினை வரும்போது நாம் முதலில் பள்ளிக்குச் செல்கிறோம். பள்ளிவாயில் நிர்வாகக் குழு எமது பிரச்சினையை தீர்க்க முயற்சிக்கிறது. இல்லையெனில் நாம் பொலிசுக்குப் போயிருப்போம். ஆனால் இது வரை நாம் பொலிசுக்குப் போகும் அனுபவங்கள் பெறவில்லை."
>
> *(ஆண், 60, சிறிமாபுரம்)*

> எமது சமுதாய விடயங்கள் பள்ளிவாயிலுடனேயே நிர்வகிக்கப்படுகின்றன. ஆனால் சிலர் தாமாகவே தீர்த்துக் கொள்கின்றனர். முஸ்லிம் சமுதாயத்தில் பள்ளிவாயில் பிரதான பங்கு வகிக்கின்றது. யாரும் அதனை மறுக்க முடியாது. அனைவரும் இதில் ஒன்றுபடுகிறோம். எனக்கு தெரிந்த அளவில் ஒன்று அல்லது இரண்டு பிரச்சினைகள் பொலிசாரால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. ஆனால் பள்ளி நிர்வாகக் குழுவினால் பல சம்பவங்கள் தீர்க்கப்பட்டுள்ளன."
>
> *(முக்கிய நபர் நேர்காணல், ஆண், நாகவில்லு)*

### தனி நபர்களின் செல்வாக்கு

சில வேளைகளில் சமதாயத்தினுள் செல்வாக்குள்ள தனிமனிதர்கள் முரண்பாடுகளில் தலையிட்டு முரண்படும் குழுக்களை ஒரு தீர்வினை நோக்கி நகர்த்தலாம். இவர்களின் தலையீடு இவர்களின் தனிப்பட்ட பக்கச் சார்புகள் மற்றும் செயற்பாட்டுக் குறிப்புகளிற்கேற்ப நேரானதாக அல்லது மறையானதாக அமையலாம். சமயத் தலைவர்கள், சமுதாயத் தலைவர்கள், சமுதாய மட்டத்திலான அமைப்புகளின் (CBO) தலைவர்கள் இன்னும் சில சந்தர்ப்பங்களில் அரசியல்வாதிகளும் செல்வாக்கான தனிமனிதர்களாக செயற்படலாம்.

சிறிமாபுரம் சமூகத்திலுள்ள ஒர் சமுகத்தலைவர் உள்ளூர் சிங்கள சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தும் ஏனைய இனமக்களாலும் பெரிதும் மதிக்கப்படுகின்ற ஒரு முக்கிய செல்வாக்குள்ள சமூகத் தலைவராவார். சிறிமாபுரத்தில் வாழும் சிங்களவர்களும் முஸ்லிம்களும் தங்களது பிரச்சினைகள், பிணக்குகளைத் தீர்த்துக் கொள்வதற்காக இவரை அணுகுகின்றனர்.

> "இரண்டு வருடங்களின் முன்னர் தொழில் வாய்ப்புக்கள் இன்மை காரணமாக மது அருந்துதல் தொடர்பான பிரச்சினையில் அதிகரிப்புக் காணப்பட்டது. தொழில் வாய்ப்புக்கள் குறைவாக இருந்தமையால், இளைஞர்கள் ஒன்று கூடி மதுவுக்கு அடிமையாகும் போக்கு காணப்பட்டது. சமுகத்தலைவர அவர்களுக்கு கிராமத்திற்கு வெளியே தொழில் வாய்ப்புக்கள் வழங்கி பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்."
>
> *(ஆண், 28, சிறிமாபுரம்)*

> "இப்போது இங்குள்ள மக்கள் அனைவரும் சமாதானமாயுள்ளோம். ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் நாம் சமுகத்தலைவரிடம் போவோம். அவர் அதனைத் தீர்த்து வைக்க முயற்சிப்பார். இங்கு கிராம அலுவலர் மற்றும் பொலிசாரும் உள்ளனர்."
>
> *(ஆண், 70, சிறிமாபுரம்)*

இத்தனிநபர்கள் முரண்பாடுகளுடன் எளிய விதத்தில் நிர்வகிப்பதைக் காட்டும் சிறந்த தெரிவுகள் உள்ளன. சச்சரவான சூழ்நிலைகளைக் கையாளும் இவர்களின் திறமையானது நம்பிக்கையின் அடிப்படையிலானதாகும். யாதேனும் ஒரு பிரிவினர் இவர்களை நம்பிக்கை கொள்ளாவிடின், அல்லது பக்கச் சார்பானவர்கள் என நினைப்பின், முரண்பாட்டின் மீது இவர்களின் செல்வாக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகும்.

### *அரசியல் வாதிகள்*

அரசியல் வாதிகள் ஒரு முரண்பாடு எவ்வாறு தோற்றுவிக்கப்பட்டது மற்றும் அதில் ஈடுபட்டுள்ளோர் யார் என்பதைக் கருதாது அதனை தமது சொந்த அரசியல் இலாபங்களிற்காக மாற்றியமைக்கக்கூடிய சக்திவாய்ந்த தனிநபர்களாவர். இவர்கள் பக்கச்சார்பானவர்கள், மற்றும் இவர்கள் தமக்கு ஆதரவானவர்களுக்கு அனுகூலமாகவே தீர்வுகளை வழங்குவார்கள் எனும் பரந்த கருத்தானது முரண்பாடுகளைத் தீர்த்தலில் இவர்களது பங்கினை சர்ச்சைக்குரியதாக, ஆட்சேபனைக்குரியதாக ஆக்குகின்றது. ஒரு குறித்த இன அல்லது மத அடையாளத்தைக் அல்லது குறித்த ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த மக்கள், அரசியல் வாதிகள் தமக்கு சார்ப்பாக உதவுவார்கள் என்று நினைக்கக்கூடிய அல்லது உள்ளூர் மற்றும் தேசிய மட்டத்தில் இம்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தவதற்கு வாக்குகள் அளிக்கப்பட்ட அரசியல்வாதிகளை அணுகுகின்றனர். உதாரணமாக வடக்கிலிருந்தான உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் உள்ளூர் சமுதாயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் பாய்ஸ் ஐ விடவும் வடக்கிலிருந்தான அமைச்சர் ரிஷாட் பதியுத்தீனையே அணுக விரும்புகின்றனர்.

முரண்பாடுகள் தீர்த்தலில் அரசியல் வாதிகளின் ஈடுபாட்டிற்கான பொருத்தப்பாடானது பதிலளிப்பாளர்களின் நோக்கில் பெரிதும் வேறுபடுகின்றது. சிலர் இவர்கள் தமது வாக்காளர்களின் அரசியல் பிரதிநிதிகளாக வாக்காளர்களின் மீது பொறுப்புடையவர்களாதலால் முரண்பாடுகளைத் தீர்த்தலில் ஈடுபடவேண்டும் எனக் கருதுகின்றனர். ஏனையோர் இவர்கள் அரசியல், இன அல்லது குறித்த பிரிவினருக்கான விருப்புடன் செயல்படுவார்கள் எனின் இவர்களின் ஈடுபாடு பயன்தராது என எண்ணுகின்றனர். பலர் இவ்வகையான ஈடுபாடு சுதந்திரமான தீர்ப்பு மற்றும் நியாயமான தீர்வினைச் சாத்தியமாகாமற் போகச் செய்யும் என உணர்த்துகின்றனர்.

பல சமுதாயங்கள் அரசியல் வாதிகள் இப்போது செயற்படுவதை விடவும் பெரிய, அர்த்தமுள்ள பங்கினை முரண்பாடுகளைத் தீர்த்தலில் தர முடியும் என நம்பினர். உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கு சேவை செய்யும் நோக்கில் நல்லுணர்வுடன், முரண்பாட்டில் தலையிட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. இவ்வாறான சந்தர்ப்பங்கள் முரண்பாடுகளைக் குறைப்பதில் பரந்தளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்.

> "கடந்த காலத்தில் இங்கு உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கான முகாமொன்று நிர்மாணிப்பதை பலரும் எதிர்த்தனர். அவர்கள் இந்நிலத்தின் உரிமையாளரை அடிக்கவும் செய்தனர். பின் அமைச்சர் அஷ்ரப் சிங்களப் பிரதேசங்களிலும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதாக வாக்களித்ததுடன், இங்கு முகாமை நிர்மாணிக்கக் கூடியதாக இருந்தது. இல்லையெனில் இன்னமும் எமக்கு மின்சாரம் கிடைத்திருக்காது."
>
> (ஆண், 62, சிறிமாபுரம்)

### *சட்ட நிறுவனங்கள்*

நீதிமன்றங்களாலும் பொலிசாராலும் வழங்கப்பட்ட தீர்வுகள் பக்கச்சார்பானதாகவும் பயனற்றதாகவும் நோக்கப்பட்டன. தற்காலிக வீதித் தடைகள் மற்றும் சோதனைச் சாவடிகள் போன்ற பொலிஸ் தலையீடுகள் பரந்தளவிலான சமூக இடையூறுகளாக தீவிரமடைந்து கொண்டிருக்கும் முரண்பாடுகளிற்கு உடனடித் துலங்கல்களாக வழங்கப்பட்டன. இவ்வகையான தலையீடுகளை

பொது மக்கள் தற்காலிகமானதாகவும், முரண்பாட்டிற்கான அடிப்படைக் காரணிகளை விளக்காதவையாகவும் உணர்கின்றனர். பல பதிலளிப்பாளர்கள் பொலிசாரை பக்கச் சார்பானவர்கள் எனக் காண்கின்றனர். நீதிமன்றத்திலான தீர்மானங்களும் கூட குறித்த ஒரு அடையாளத்தைக் கொண்ட குழுவை மற்றும் இன்றைய நிலையில் கூடுதலான பலம் வாய்ந்தவர்களை நோக்கி பக்கச் சார்பாக உள்ளவையாகவே உணரப்படுகின்றன.

> "இங்கு பொலிஸ் தொடர்பாக சில பிரச்சினைகள் உள்ளன. வறிய, உதவியற்ற மக்கள் பொலிஸிடம் இருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இது அரசியலிற்கு சமமானது. எல்லா நன்மைகளும் அரசியல் வாதிகளுடன் தொடர்பான மக்களுக்கே வழங்கப்படுகின்றன. வறிய உதவியற்ற மக்களுக்கு எந்த உதவியுமில்லை"
>
> (முக்கிய நபர் நேர்காணல், கிறிஸ்தவ தேவாலய மதகுரு)

முறைமையான நிறுவனங்கள் இவர்களில் சுதந்திரமான ஓர் அடையாளத்தைக் கட்டியெழுப்ப முடியாவிடின், பொதுமக்களின் நம்பிக்கையைப் பேண முடியாவிடின் தொடர்ந்தும் பயனற்றதாகவே காணப்படும்.

### *நிர்வாக அலுவலர்கள்*

பல சந்தர்ப்பங்களில் பல்வேறு பிரிவினர்கள் ஒரு முடிவுக்கு வர மறுக்கின்ற போது மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் கிராம சேவக அலுவலர் போன்ற நிர்வாக அலுவலர்களும் தீர்வுகளை வழங்கியுள்ளனர். உதாரணமாக மூன்று பிரிவினரிடையே மீன் பிடித்தளத்திற்காக ஏற்பட்ட மோதல் மூன்று பிரிவினருக்கும் நிலம் பிரிக்கப்பட்டு வழங்கப்பட்டு அரசாங்க அதிகாரியால் தீர்த்து வைக்கப்பட்டது. இவர்கள் பிரச்சினைக்குரிய தீர்வினை விளக்கி மாற்று வழிகளை வழங்கி முரண்பாடுகளைத் தீர்க்கின்றனர்.

> "ஒரு சிறிய பிரச்சினை தோன்றும் போது கிராம சேவக அலுவலரின் ஈடுபாட்டுடன் தீர்த்து வைக்கப்படுகின்றது. சில மந்தைகள் வெளியிலிருந்து வந்து எமது நிலங்களுக்குள் நுழைந்து எமது பயிரச் செய்கைகளை அழித்தன. பெரும்பாலான இம்மாடுகள் நாம் நீர் எடுக்கும் கிராமங்களிலிருந்தே வந்தன. நாம் இம்மாடுகளைக் கட்டி வைத்த போது அக்கிராம மக்கள் எமக்கு நீர் தர மாட்டோம் எனக் கூறினர். சமூர்த்தி சமூகமும் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஈடுபட்டது. (கொவி நியாமக) விவசாய அதிகாரி எமது பயிர்களுக்கான நட்டஈட்டைப் பெற்றுக் கொள்ள உதவினர்"
>
> (பெண், 46, சிறிமாபுரம்)

அரச நிர்வாக அதிகாரிகளின் தலையீடுகளும் தீர்மானங்களும் ஒரு பிரிவினர் அவர்களைத் தடுக்கும் போது தோல்வியடைந்த சந்தர்ப்பங்களும் உள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் முரண்பாட்டின் பிரிவினர்கள் வித்தியாசமான தனிநபர்களையும் நிறுவனங்களையும் நீதிக்காகத் தேடுகின்றனர்.

> "அரசாங்க அதிபர் ஒரு இறுதித் தீர்வை கொடுத்த பின்னரும் அவர்கள் எலவன்குளம் மக்களை மீன்பிடிக்க அனுமதிக்கவில்லை."
>
> (முக்கிய நபர் நேர்காணல், ஆண், வனாதவில்லு)

### *அபிவிருத்தி நிறுவனங்கள்*

அபிவிருத்தி நிறுவனங்கள் மேலதிக வளங்களை அல்லது பொதுச் சொத்தினை வழங்கி பிணக்குகளில் தலையிட்டன.

> "USAID இன் உதவியுடன் அவர்கள் இவ்வடக்கஸ்தலத்தை வழங்கினர். அதற்கு முன்னர் இது எல்லா இன மக்களுக்கும் பொதுவானதாக இருந்தது. இப்போது இது

மூன்றாக பிரிக்கப்பட்டு தனித்தனியாக வேலி கட்டப்பட்டுள்ளது. இது ஒரு சமாதானம் உருவாக்கும் செயற்திட்டமாகும்."

(ஆண், 60, சிறிமாபுரம்)

சமாதான ஆணைக்குழுக்கள், மதத்தலைவர்கள் மற்றும் செல்வாக்கான தனிநபர்கள் போன்ற முறைமையில்லா தொகுதிகள் முறைமையான சட்ட நுட்ப முறைகளை விட கூடுதலாக அணுகத்தகுந்தவையாகக் காணப்பட்டுள்ளன. இம்முறைமையற்ற பாத்திரங்களின் அனுபவங்கள் அவர்களை நம்புகின்ற, மதிக்கின்ற மக்களால் உள்ளூர் சமூகத்தினுள் முரண்பாடுகள் எவ்வாறு கையாளப்படலாம் என்பது பற்றிய படிப்பினைகளை வழங்குகின்றது.

## சமாதானத்தை நிலைநிறுத்துதல்

இப்பகுதியானது இவ்வாறான தீர்வுகளை நிலைநிறுத்துவதற்கு, முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்கு மற்றும் காலந்தோறும் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கு முயற்சி எடுத்த போது சமூதாயங்களும் மற்றும் உள்ளூர் அமைப்புக்களும் எவ்வாறான சவால்களுக்கு முகங் கொடுத்தன என்பதை ஆராய்கின்றது.

### *சிக்கற் தன்மையும், அடக்க முடியாத தன்மையும்*

சமூகங்கள் விட்டுக் கொடுப்பதற்கு மற்றும் அழுத்தமான உறுதியான தீர்வினை அடைவதற்கு காட்டும் விருப்பமின்மையே சமாதானம் உருவாவதைத் தடுக்கும் பிரதான காரணியாகும். அவர்கள் ஒரு முழுமையான தீர்விற்காக காத்திருப்பதும் ஏனையோரால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒரு தீர்வினை அடைவதற்கு அனுசரித்துப் போகாமலிருப்பதும் அல்லது விட்டுக்கொடுக்காமலிருப்பதுமான உணர்வு சில ஆய்வு நேர்காணலிலிருந்து தெளிவாகின்றது. இவ்வடக்க முடியாத மனப்பாங்கு முரண்பாட்டுக்கான நீண்டகாலத் தீர்வுகளை தடுக்கும் தடையாகும்.

இரு சமுதாயங்களிடையே தனித்த அடையாளங்களினுடனான பிரிவுகளானவை அவர்களிடையே முரண்பாடு தோன்றும் போது தெளிவாக வெளிப்படத் தொடங்குகிறது. கடந்த காலத்தில் ஓரளவு சமாதானமாக சமுதாயங்கள் பரஸ்பரம் வாழ்ந்திருந்தாலும் ஒரு முரண்பாடு ஏற்படும் போது அவர்கள் தங்களது ஒற்றுமைகளை உள்ளே வைத்துக் கொண்டு அவர்களின் வித்தியாசங்களின் மீது வாழத் தொடங்குகின்றனர். இதற்காக நீடித்திருக்கின்ற, உதாரணமாக உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் உள்ளூர் சமுதாயத்து மக்கள் இடையே நிலவுகின்ற மாறாத அழுத்த நிலையைக் கூறலாம்.

இப்பிரிவினரிடையே ஒரு நிலையான தீர்வுக்கு வருதல் அல்லது இவர்களது ஒற்றுமைகளிலான ஒரு புரிந்துணர்வை விருத்தி செய்வதனை மையப்படுத்தல் என்பது ஒரு சவாலாகவே உள்ளது.

"இது ஒரு பழிவாங்கும் செயலல்ல. ஏனெனில் இப்பிரச்சினை தோன்ற முன்னர் அவர்களுடன் எமக்கு எவ்விதப் பிரச்சினையும் இருக்கவில்லை. எம்மிடம் மென்மையான உறவுகளிருந்தன. அவர்கள் இதனை ஒரு புகழ் சம்பந்தப்பட்ட விடயமாக நினைக்கலாம். அதனால் தான் அவர்கள் எல்லோரும் எமக்கு எதிராக இருக்கிறார்கள்."

(முக்கிய நபர் நேர்காணல், ஆண், உடப்பு)

"இவ்விடயம் விரைவாக தீர்க்கப்படுமெனின் நாம் சந்தோசப்படுவோம். முன்னர் நாம் வழக்குகளிற்குப் போகாது தீர்க்க முயற்சித்தோம் ஆனால் அதற்கு அவர்கள் உடன்படவில்லை"

(முக்கிய நபர் நேர்காணல், ஆண், பாலாவி)

சில சம்பவங்களில் அவதானிக்கப்பட்ட முக்கியமான ஒரு விடயமானது முரண்பாடுகளிற்கு நடுநிலையான பிரிவினரால் கூறப்படும் தீர்மானங்களை ஏற்றக் கொள்வதில் அல்லது அமுல்படுத்துவதில் தோன்றும் கஷ்டமாகும். சிபாரிசு செய்யப்பட்ட தீர்வினை ஏற்றுக் கொள்வதற்கு ஒரு பிரிவினர் அல்லது இரு பிரிவினருமே மறுக்கும் போது தீர்வு தோல்வியடைகிறது.

"அரசாங்க அதிபர் இறுதி முடிவினைக் கொடுத்த பின்னரும் அவர்கள் எலவன்குளம் மக்களை மீன்பிடிக்க அனுமதிக்கவில்லை"

(முக்கிய நபர் நேர்காணல், ஆண், வனாதவில்லு)

சில சம்பவங்கள் அவற்றின் தன்மையில் மிகவும் சிக்கலாக காணப்பட அவை தீர்வொன்றினை அடைவதை விடுத்து மேலும் மேலும் மோசமடைகின்றன. வெளியாட்களின் ஈடுபாடும் முரன்பாட்டின் ஒரு பகுதியாக ஒரு பிரிவினரால் மற்றைய பிரிவினர் மீது மேற்கொள்ளப்படும் தொந்தரவுகளும் வன்முறைகளும் சமாதானத்தை உருவாக்குவதைத் தடுக்கும் சில காரணிகளாகும். பிணக்கினைத் தீர்க்கும் நடுநிலையானவர்களாக அல்லாது முரண்படும் ஒரு பிரிவினரை ஆதரிக்கும் மனிதர்களாக மூன்றாவது பிரிவினரின் தலையீடு அமையும் போது ஆரம்பப் பிரச்சினை மேலும் சிக்கலாவதுடன் ஒரு எளிய நேரடியான முடிவுக்கு வருவதைத் தடுக்கும் பல படைகள் பிரச்சினைக்குச் சேர்கின்றது.

"ஒரு முறை வீரபுரம் மக்களின் ஒரு பிரிவினர் வந்து எமது கிராமத்தில் முஸ்லிம்களைத் தங்க விடக் கூடாது எனக் கூறினர். அவர்கள் வந்து அவர்களைத் தொந்தரவு செய்தனர். அவர்கள் 3 பேரை வீட்டுக் காவலில் வைத்து கதவை அடைத்து வீட்டுக்குத் தீ வைத்தனர். வீட்டில் சிறிதளவு நீர் இருந்ததால் நெருப்பினை அணைத்துக் கொண்டு கட்டுப்படுத்தி வைக்க அவர்களால் முடிந்தது. அவர்கள் வீட்டில் அலறிக் கொண்டிருந்தனர். ஆனால் முன்னர் எமக்குக் கிடைத்த அச்சுறுத்தல்கள் காரணமாக யாரும் அங்கு செல்லத் துணியவில்லை"

(ஆண், 70, சிறிமாபுரம்)

### புறக் காரணிகள்

#### அரசியற் சூழ்நிலைகள் சீர்கெடலும், முரண்பாடுகள் புதிதாக்கப்படலும்

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் முடிவும் வடக்கு, கிழக்கில் மீண்டும் மூண்டுள்ள மோதலும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களை தமது சொந்த இடங்களிலிருந்து திரும்பி செல்வதிலிருந்தும் தடுக்கின்றது. இது உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் உள்ளூர் சமுதாயங்களிடையே முரண்பாடுகளைப் பேணுவதற்கு விரும்புவோரின் கைகளில் விளையாடுகிறது. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் திரும்புகையில் மீண்டும் புதிதாக வைக்கப்பட்டுள்ள தடைகள், இவர்களுக்கும் உள்ளூர் சமூதாயத்திற்குமிடையே அபிவிருத்தி உதவிகள் மற்றும் ஆதரவிற்கான போட்டி மட்டத்தைத் தொடர்ந்தும் தக்க வைத்து புத்தளத்தின் முரண்பாட்டுக்கான அடிப்படைக் காரணிகளை தொடர்ந்து நிலை பெற வைத்துள்ளது.

"யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின் எம்மில் சிலர் யாழ்ப்பாணம் சென்று மறுவருடம் எமது சொந்த இடங்களில் நிலவிய பாதுகாப்பின்மையால் மீண்டும் திரும்பி வந்தனர். இப்போதும் ஒரு சில குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்கின்றன. ஆனால் அவர்களும் இந்த யுத்தத்தின் பின்னர் வெளியேறவே முயற்சிக்கின்றனர்"

"வளங்கள் தொடர்பான போட்டி காரணமாக உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்கள் உள்ளூர் மக்களால் வித்தியாசமான விதத்திலேயே அவதானிக்கப்பட்டனர்."

(ஆண், 60, சிறிமாபுரம்)

"அரசாங்கம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பின் நாம் யாழ்ப்பாணத்திற்குத் திரும்புவோம்."
(முக்கிய நபர் நேர்காணல், ஆண், பாலாவி)

#### காலத்துடன் சமாதானத்தைப் பேணுதல்

புத்தளம் ஒரு அமைதியான மாவட்டமாக வெளிப்புறத்தில் தோற்றமளித்தாலும், அங்கு முரண்பாடுகளும், வன்முறைகளும் நிகழ்கின்றன என்று ஆய்வு கண்டறிந்துள்ளது. முரண்பாடுகளின்

நிலவுகையானது அதனைக் கையாள்வதற்கு மற்றும் சார்பளவிலான அமைதியை நிலைநிறுத்துவதற்கு வித்தியாசமான உள்ளூர் நுட்பங்கள் தோற்றப்படுவதற்கு இட்டுச் சென்றுள்ளது. மேற்குறிப்பிட்ட சவால்களைக் விடுத்து அவர்களின் சார்பளவிலான வெற்றி உருவாக்கப்படலாம்.

முக்கியமான விடயம் என்னவெனில் வெளி நிறுவனங்கள் இச்சூழலில் உடையக் கூடிய பலவீனமான தன்மையை இனங்கண்டு நிலைமையை மோசமாக்கும் வகைகளில் செயற்படாமலிருப்பதாகும். பொருளாதார வளங்களுக்கான போட்டி, போட்டியிடும் நிலையைத் தூண்டியுள்ளது எனும் அறிவு இம்மாவட்டங்களில் திட்டங்களை அமுல்படுத்த நாடும் நிறுவனங்கள் இதனை விளங்கி பல பலவீனமான சமுதாயங்கள் மற்றும் குழுக்களிடையில் சமனாக வளங்கள் பகிரப்பட வேண்டும் எனும் போது தேவையாகிறது.

புத்தளத்தில் இயங்கும் உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் இப்போது ஒரு முரண்பாடு பற்றிய உணர்வுடனான அணுகுமுறைகளைத் தமது அபிவிருத்தித் திட்டங்களில் ஏற்றுக் கொள்ள அரம்பித்துள்ளன. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் நலனுக்காக இப்பிரதேசத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சில அபிவிருத்தி நிறுவனங்கள் இப்போது தமது திட்டத்தில் உள்ளூர் மக்களின் ஒரு பகுதியினரையும் சேர்த்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளன. இது உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையே ஏற்படக்கூடிய முரண்பாடுகளைக் குறைத்துள்ளது.

> "CARE சர்வதேச நிறுவனம் இப்பிரதேசத்தின் 175 குடும்பங்களை உள்ளடக்கிய புதிய ஓர் நீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பிக்கப் போகின்றது. இவர்கள் இப்போது உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் உள்ளூர் சமூகத்திடையில் முரண்பாடுகளைத் தவிர்க்கும் விதத்தில் முரண்பாடு தொடர்பான உணர்வுடன் இயங்குகின்றனர். இவர்கள் உண்மையில் 'தீங்கு செய்யாதே' எனும் எண்ணக்கருவினைப் பின்பற்றுகின்றனர். இப்போது இவர்களின் செயற்பாடுகளில் எல்லாம் 25% உள்ளூர் சமுதாயத்தினரையும் உள்ளடக்குகின்றனர்."
>
> (முக்கிய நபர் நேர்காணல், அரச சார்பற்ற நிறுவன ஒன்றியம்.)

உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கு சேவை செய்யும் அதே நேரம் உள்ளூர் மக்களுக்கும் சேவைகளை வழங்குதல் போன்ற சிறந்த செயன்முறைகள் எதிர்காலத்தில் இப்பிரதேசத்திலான அழுத்தங்களைக் குறைக்கலாம். சில அரசியல் வாதிகளும் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளில் சமூகங்களிடையேயான முரண்பாடுகளைத் தவிர்க்கும் இவ்வாறான வழிகளில் செயற்படுகின்றன. உள்ளூர் சமூகத்தின் பதிலளிப்பாளர்கள் தாம் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் காரணமாக குறித்த பல வசதிகளைப் பெற்றுள்ளதாக நம்புகின்றனர்.

> "எமது கிராமத்தவர்கள் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் இங்கு வந்து குடியேறுவதை விரும்பவில்லை. ஆனால் பின்னர் அமைச்சர் அஷ்ரப் அவர்கள் எங்களுடன் சந்திப்பொன்றை ஏற்படுத்தி விடயத்தைக் கலந்துரையாடிய பின்னர் நாம் அவர்களை தங்க அனுமதிப்பதற்கு உடன்பட்டோம். அவர் மக்கள் முஸ்லிம்களாயினும், சிங்களவர்களாயினும், தமிழர்களாயினும் ஒரே மாதிரி சமனாக கவனிக்கப்பட வேண்டும் எனக் கூறினார். எங்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 32,500/= தருவதாகவும் கூறினார். அப்பணத்தைக் கொண்டு பலர் தத்தமது வீடுகளைக் கட்டினர்."
>
> (ஆண், 70, சிறிமாபுரம்)

> "கடந்த காலத்தில் பெரும்பாலான மக்கள் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் குடியேற்ற முகாம் நிர்மாணிக்கப்படுவதை எதிர்த்தனர். அவர்கள் இந்நிலத்தின் உரிமையாளரையும் துன்புறுத்தினர். பின் அமைச்சர் அஷ்ரப் அவர்கள் சிங்களவர்களின் பிரதேசத்திலும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதாக வாக்களித்து இம்முகாமைக் கட்ட முடிந்தது. இல்லையெனில் எமக்கு மின்சார வசதிகளும் இன்னும் இருந்திருக்காது."
>
> (ஆண், 62, சிறிமாபுரம்)

## 7.0 முடிவுரை

முரண்பாடுகளுக்கான பல அழுத்தங்கள் தூண்டப்பட்டுக் கொண்டிருந்தாலும் புத்தளமானது கடந்த காலத்தில் ஓரளவு அமைதியை அனுபவித்து வந்த அவதானங்களின் அடிப்படையில் அப்பிரதேசத்தின் அபிவிருத்தி வரையமைப்பொன்றான வினிவிதவின் தலைவரின் பிரேரணையின் மீது ஆய்வுக்காக புத்தளம் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டது. இப்பிரதேசத்தில் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காக இப்பிரதேசத்தில் வாழும் பல குடும்பங்களும் பாத்திரங்களும் உள்ளூர் அறிவினையும் மற்றும் பயன்படுத்தப்பட்டு வரும் நுட்பங்கள், அமைப்புக்களைப் பயன்படுத்துகின்றனர்.

புத்தளம் பிரதேசத்தின் பதட்டங்களைக் குறைத்து 'சமாதானத்தை' நிலைநிறுத்துவதற்காக பல்வேறு பாத்திரங்கள் பயன்படுத்திய சமுதாய மட்டத்திலான முரண்பாட்டு முகாமைத்துவ அறிவினை ஆராய்வதே ஆய்வின் குறிக்கோளாகும். வித்தியாசமான சமூகங்களின் முரண்பாட்டு அனுபவங்களிலிருந்து வெளிவளர்ந்த, வெற்றி நிரூபிக்கப்பட்ட மற்றும் சமுதாயத்தால் தொடர்ந்தும் ஏற்றுக் கொள்ளப்பட்ட, மதிக்கப்பட்ட அமைப்புக்களை ஆழமான விளங்கிக் கொள்வதற்கு இவ்வாய்வு இட்டுச் சென்றுள்ளது.

புத்தளத்தில் இடம்பெயர்வு ஒரு அண்மைக்கால நிகழ்வல்ல. இப்பிரதேசத்திலான மிகப் பெரிய மக்கள் உள்வாங்கல் *1990* இல் யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரிலிருந்து நிகழ்ந்தது உண்மையாயினும் *1990* களிற்கு முன்னர் மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களிலும் கூடுதலான எண்ணிக்கையானோர் குருணாகல், கம்பஹா மாவட்டத்திலிருந்து உள்வந்துள்ளனர். முரண்பாடுகளுடன் தொடர்பான இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் இம்மாவட்டத்திலிருந்தும் வெளியாட்களாக நோக்கப்படும் அதேவேளை குருணாகலை, கம்பஹா, மாவட்டங்களிலிருந்து முன்னர் வந்தவர்கள் இம்மாவட்ட மக்களுடன் நன்றாக ஒன்றுபட்டு விட்டனர். பெரும்பாலான பதிலளிப்பாளர்கள் இப்பெரிய இடம்பெயர்வுகளை அவதானிப்பதாகவே தெரியவில்லை. ஆனால் தொடர்ந்தும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களாலான (IDP) தாக்கங்கள் பற்றி பேசுகின்றனர்.

புத்தளத்திலான வறுமை கடந்த *15* வருடங்களாக நாட்டின் பொதுவான அதிகரிக்கும் குறையும் வறுமைப் போக்கினைப் பின் தொடர்ந்திருக்கிறது. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் *1990* இன் புத்தளத்திற்கு வருகை தந்தனர் என்பதோடு *1990* இல் *22%* ஆக இருந்த வறுமை மட்டம் *1995 / 1996* இல் *31%* இற்கு அதிகரித்தது. இந்நிலைமை *2002* வரை தளம்பலாகவே காணப்பட்டதுடன் *31%* இலேயே இருந்தது. இருந்தாலும் மிக அண்மைக் காலங்களில் *(2006)* இலான வறுமைச் சுட்டி HCI 13% குறையும் ஒரு திடீர் மாற்றத்தைக் காட்டுகின்றது. *1995* இலான எதிர்மறையான மாற்றம் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வறுமை காரணமானது எனக் கூறப்படும் அதே வேளை அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ள நேரான மாற்றத்திற்கும் அவர்களுக்குக் கிடைத்த உதவிகள் மற்றும் மாவட்டத்தின் பொருளாதாரத்தில் அவர்களின் முதலீடுகள் என்பன பகுதியான காரணங்களாக சுட்டிக்காட்டப்படுகின்றன.

உலர் வலயத்தில் அமைந்து, நீர்ப்பாசன விவசாயத்துடனான ஏனைய உலர்வலயப் பகுதிகளுக்குள்ள பிரதான பண்புகளைக் கொண்டிராத புத்தளம் ஒப்பீட்டளவில் குறைந்த இயற்கை வளங்களையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவான ஜீவனோபாய தெரிவுகளையும் கொண்டது. 60,000 உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் உள்வாங்குகையுடன் இருக்கின்ற இயற்கை வளங்கள், சேவைகள் மற்றும் ஜீவனோபாய தெரிவுகளுக்குப் போட்டி உருவாக்கப்பட்டது. ஆய்வு இனங்கண்ட அனைத்து முரண்பாட்டு சம்பவங்களும் உள்ளூர் மக்களுள் அல்லது உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்கும் உள்ளூர் மக்களுக்குமிடையான போட்டியையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. இச்சம்பவங்களுடன் இணைந்திருந்த சில பொதுவான விடயங்களாவன அடையாளத்தின் அடிப்படையிலான பிரச்சினைகள் (உதாரணமாக உள்ளூர் மக்கள்/ IDP), (IDP/ IDP - உள்ளூர் மக்கள் / உள்ளூர் மக்கள்) நில உரிமையும் நிலத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையும், சேவை

வளங்களுடன் தொடர்பான பிரச்சினைகள் (உதாரணமாக சுகாதாரம்) ஜீவனோபாயத்திற்கான வழி (உதாரணமாக கூலிச் சந்தையில் குறைத்தல்) மற்றும் முரண்பாட்டுச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டுள்ள பாத்திரங்களின் அரசியல் பலம் என்பனவாகும்.

இம்மாவட்டத்தில் 40 - 50 வரையான அபிவிருத்தி நிறுவனங்கள் இயங்குகின்றன. மத்திய அரசாங்கத்திலிருந்து இப்பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களினூடான உள்ளூர் அரசாங்கத்திற்கு நிதி மற்றும் உதவிகள் என்பது புத்தளத்தில் அபிவிருத்தி வேலையின் மற்றுமொரு இயல்பாகும். புத்தளத்தில் அபிவிருத்தி வேலைகள் பெரும்பாலும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களை மையப்படுத்தியே மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களை தவிர்த்து இவ்வாய்வு அடையாளப்படுத்தியதன் படி தீராத வறுமையுடனிருப்போர் பெண்களால் தலைமை தாங்கப்படும் குடும்பங்கள் மற்றும் இடம்பெயரும் மீனவர்கள் உட்பட பல பலவீனமான குழுக்கள் புத்தளத்தில் உள்ளன. உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் பக்கச் சார்பாக கவனிப்படுவதால் இப்பிரதேசத்தில் அழுத்தங்களும் மறைமுகமான கசப்புணர்வுகளும் எழுந்துள்ளன. இதேவேளை பலவீனமான குழுக்கள் தொடர்ந்தும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோரால் கவனிக்கப்படாவிடின் இவ்வழுத்தங்கள் தீவிரமடைந்து, தெளிவாக காணக்கூடிய வன்முறை மோதல்களாக வெடிக்கலாம். ஆய்வு நடாத்தப்பட்ட காலங்களில் சில நிறுவனங்கள் ஏலவே அவ்வரிகுறிகளை உணர்ந்து இதனைத் தமது திட்டமிடலிலும் நன்மையடைவோரைத் தெரிவு செய்தலிலும் இணைத்துக் கொண்டுள்ளன. ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அவர்களது யுக்திகளின் திட்டமிடலில் இவ்விடத்தையும் பிரதான கருத்தில் எடுக்க வேண்டும்.

முரண்பாட்டுச் சம்பவத்தின் தன்மை மற்றும் தீவிரத்தைப் பொறுத்து அவற்றைத் தீர்ப்பதாக நுட்பங்களும் அச்செயற்பாட்டினில் ஈடுபடும் பாத்திரங்களும் வேறுபடுவர். எல்லா முரண்பாட்டு நிகழ்வுகளுக்கும் ஒரே மாதிரியான தீர்வுக் கட்டமைப்பு பிரயோகிக்கப்பட முடியாது. சமூதாய அடிப்படையிலான நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் செல்வாக்கான தனிநபர்கள் (மதத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், அரசியல் வாதிகள், உள்ளூர் அரச அதிகாரிகள், உள்ளூர் நிர்வாக அதிகாரிகள் மற்றும் சமாதான செயற்குழுக்கள்) எல்லோரும் முரண்பாடு தீர்த்தல் செயன்முறைகளில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்ட பிரிவினர்கள் கலந்துரையாடுவதற்கு தேவையான அமைப்புக்களை வழங்கி மாற்றுத் தீர்வுத் திட்டங்களை நோக்கியதான அறிவுரைகள் வழிகாட்டல்களை வழங்கி அல்லது போட்டிக்குரிய வளங்கள் அல்லது சேவைகளை வழங்கி பல வித்தியாசமான நுட்பங்களை இம்முரண்பாடுகளைத் தீர்ப்பதில் பயன்படுத்தனர். இவ்வுள்ளூர் அமைப்புக்கள் அவற்றின் தனித்துச் செயற்படும் மற்றும் சந்தர்ப்பங்கள் உருவாகும் போது மாத்திரம் தொழிற்படும் தன்மைகளையும் மீறி பெரியளவான ஒரு அடைவைக் கண்டுள்ளன. பல வழிகளில் மக்கள் அவர்கள் மீது கொண்டுள்ள பெரியளவான நம்பிக்கை மற்றும் மரியாதை காரணமாக மக்களினூடு விரைவாக மற்றும் வினைத்திறனாக பதிலளிக்கும் அவர்களின் ஆற்றலே அவர்களின் அவற்றுக்கான அடிப்படையாகும்.

வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் (CEPA) முன்னர் மன்னாரில் நடத்தப்பட்ட ஆய்வொன்று சமூகங்கள் அவற்றின் பிணக்குகள் அல்லது முரண்பாடுகளிற்கு உள்ளூர் அமைப்புக்களை நாடுவதையே விரும்புகின்றன எனக் கண்டுள்ளது. (தளைய சிங்கம் 2006) தற்போதைய ஆய்வு இதனை ஆதரிக்கிறதுடன் உள்ளூர் பாத்திரங்கள் மற்றும் அமைப்புக்கள் இப்பிரதேசத்தில் உருவாகும் முரண்பாட்டு நிகழ்வுகள் அல்லது பிணக்குகளைத் தீர்ப்பதில் அல்லது முகாமைத்துவம் செய்வதில் பெரிய அளவில் வெற்றி பெற்றள்ளன எனவும் காட்டுகின்றது. மன்னாரில் நடந்த முன்னைய ஆய்வு பிரேரித்த படி இந்நிறுவனங்களுக்குத் தேவையான உதவிகள், சமூகங்களுடன் அதே போல் உள்ளூர் அரச அதிகாரிகளுடன் தொடர்புகள் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் பொலிசாரும் பலப்படுத்தப்பட வேண்டும். முரன்பாடுகளைத் தீர்ப்பதிலும், சமாதானத்தை உருவாக்குதலிலும் ஏனைய வெளியார் நிறுவனங்களின் பங்களிப்பு புத்தளத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது. புதிதாக நிறுவனங்களை உருவாக்காது உள்ளூர் மட்டத்திலுள்ள கட்டமைப்புக்களை இதற்காகப்பயன்படுத்துவம் முக்கியமாகவுள்ளது.

சில முரண்பாட்டு சம்பவங்கள் அவற்றில் சம்பந்தப்பட்ட ஒரு பிரிவினர் அல்லது அதற்கு மேற்பட்டோர் உள்ளூர் மட்ட நிறுவனங்களாடல் திருப்தியடையாத நிலையில் அல்லது முரண்பாட்டு நிகழ்வின் தன்மை காரணமாக உள்ளூர் மட்ட நுட்பங்கள் அவற்றைத் தீர்ப்பதில் வெற்றி காணாத போது இவை இந்நுட்பங்களை மீறி அரச நீதித் திட்டத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. வித்தியாசமான பின்னணிகள் மற்றும் சக்தி மட்டங்கள் (உதாரணமாக அரசியல்வாதிகள்) கொண்ட பல பிரிவினர் ஈடுபாடு காரணமாக உருவாக்கப்பட்டுள்ள முரன்பாடுகளின் சிக்கற்தன்மை மற்றும் முரன்பாட்டுக்குரிய விடயத்தின் தன்மை என்பன சில முரன்பாட்டு நிகழ்வுகளின் தாமதமான, இறுக்கமான தீர்வுச் செயன்முறைகளிற்கு அடிப்படையாயுள்ளன.

ஏறத்தாழ 18 வருடங்களாக உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள் இப்பிரதேசத்தில் வாழ்வதுடன், காலத்துடன் சிலர் இப்பிடரதேசத்துடன் ஒன்றிணைந்தும் விட்டனர். உள்ளூர் மக்களுக்கும் உன்வாரியாக இடம்பெயர்ந்த மக்களுக்குமிடையில் குறித்த சில பொருளாதார சமுகத் தொடர்புகள் விருத்தியையும் மீறி இக்குழுக்களிடையே ஒரு வேறுபட்ட உணர்வு இருந்து வருகின்றது. உன்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் நிலை புத்தளத்தில் தற்காலிகமான குடியேற்றவாசிகளாக இருக்கும் காலமெல்லாம் இந்நிலைமை தொடர்ந்திருக்கும். அவர்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிச்செல்வதற்குரிய உறுதியான சூழ்நிலை காணப்படாத நிலையில் அவ்வாறு செல்வதற்கான வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் இவ்வகையான பிரிவுகள் தீவிரமடைய விடப்படாமலிருப்பதும் இம்மாவட்டத்தில் முரன்பாடுகளை உருவாக்கக்கூடிய இவர்களின் இயலுமை நீதியான மற்றும் சமத்துவமான முறையில் ஏற்றுக்கொள்ளப்படுவதும் கையாளப்படுவதும் முக்கியமானதாகும்.

## உசாத்துணைகள்


De Silva, M.W., (1999). Some socio-political Implications of conflict related internal displacement in Sri Lanka, Paper presented at the 7th Sri Lanka Studies Conference, Canberra, Australia. Dec. 3-6 1999, republished http://web.ics.purdue.edu/~vdesilva/mwadesilva/Articles/102. pdf.

Fisher, S., 2000. Working with conflict: skills and strategies for action. London, Zed Books.

Peiris, G H., 2006. Sri Lanka: Challenges of the New Millenium. Kandy, Kandy Books.

Thalayasingam, P (2006). Dealing with Demons: An exploratory study on post conflict justice. Centre for Poverty Analysis, Colombo.

Wallensteen (2002). Understanding Conflict Resolution. War, Peace and the Global System. London, UK, Sage.

Practitioner's Kit for Return, Resettlement, Rehabilitation and Development by CHA and the Brookings-SAIS project in Internal Displacement (2004).

Researching internal displacement: State of the art Conference Report, 7-8 February 2003, Trondheim, Norway/prepared by the editors of Forced Migration Review in collaboration with Nina Bikelard and Catherine Brun.

இந்த கற்கை புத்தளம் மாவட்டத்தின் பல்லின மக்கள் கலந்து வாழும் பிரதேச செயலக பிரிவுகளில் ஏற்பட்ட ஆறு முரண்பாட்டு சம்பவங்களின் தோற்றம் மற்றும் அவை தீர்க்கப்பட்ட விதம் பற்றி ஆராய்கிறது. இப்பிரதேச செயலகப் பிரிவுகள் அவற்றின் பல்வகைமை, தீர்வின் பல்வேறு கட்டங்கள், சம்பந்தப்பட்ட குழுக்கள் என்பவற்றின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

இது இடம்பெயர்ந்தோரின் சடுதியான வருகையினால் ஏற்பட்ட சாதக மற்றும் பாதக விளைவுகளை ஆராய்கிறது. இடம்பெயர்ந்தோரின் சடுதியான வருகையானது இப்பிரதேசத்தின் வளங்களுக்கான போட்டியை அதிகரித்து முரண்பாட்டிற்கான அடித்தளத்தை ஏற்படுத்தியதென்பதே உள்ளூர் மக்களின் பெரும்பான்மையான கருத்தாக உள்ளதுடன் உள்ளூர் பொருளாதாரத்தில் இடம்பெயர்ந்த மக்கள் பெரும் பங்களிப்பை செலுத்தியுள்ளனர். முரண்பாடுகளின் சிக்கற்தன்மையினை கூட்டிய மற்றும் அவற்றின் தீர்வு முயற்சிகளை கடினமாக்கிய, அவற்றில் செல்வாக்குச்செலுத்திய பிற காரணிகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. இப்பிற காரணிகளில் அடையாளம், நிலம் மற்றும் அரசியல் சக்திகள் போன்றன உள்ளடங்குகின்றன. உள்ளூர் சமூக பொருளாதார சூழ்நிலை பற்றிய விரிவான கலந்துரையாடலும் உள்ளது.

நிர்வாக கட்டமைப்புக்கள், சட்ட நிறுவனங்கள், அபிவிருத்தி நிறுவனங்கள், சமயத் தலைவர்கள் மறறும் அமைப்புக்கள் மற்றும் சமாதான செயற்குழுக்கள் போன்ற பல்வேறு மோதல் தீர்வுக்கான உள்ளூர் பொறிமுறைகளை மற்றும் உள்ளூர் முரண்பாடுகளை கையாள்வதில் அவற்றின் தாக்கம் மற்றும் வினைத்திறன் என்பவற்றையும் இக்கற்கை ஆய்வு செய்கிறது.

Printed by Karunaratne & Sons (Pvt) Ltd.

ISBN 978-955-1040-54-3

European Union
යුරෝපා සංගමය
ஐரோப்பிய ஒன்றியம்

cepa
centre for poverty analysis
29, Gregory's Road, Colombo 7, Sri Lanka
T. +94 (011) 2676 955-8, 2667 967-8
F. +94 (011) 2676 959
E. info@cepa.lk
www.cepa.lk